முதல் மொழியில் எழுத ஊக்குவித்தல்



பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்

கற்பித்தல் மதியுரைகள்

1

முதல் மொழியில் எழுத ஊக்குவித்தல்

பசில் ஷாடர்
நெக்ஷாத் மாலொகு

பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்

கற்பித்தல் பரிந்துரைகள் 1

	தொடர்: "பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்" (HSU: in Switzerland HSK: தாய்மொழியும் பண்பாடும் அறிவுறுத்தல்): கற்பித்தல் மதியுரைகள் 1 சூரிச் ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுக் கல்வித் திட்டங்கள் நடுவகத்தால் வெளியிடப்பட்டது. PH ZH IPE – INTERNATIONAL PROJECTS IN EDUCATION ZURICH UNIVERSITY OF TEACHER EDUCATION
திட்ட முதல்வர் / பதிப்பு	பசில் ஷாடர்
நூலாசிரியர்:	பசில் ஷாடர், Prof. Dr. Dr., Sprachdidaktiker an der PH Zürich ஆசிரிய கல்விப் பல்கலைக்கழகம், பல்பண்பாட்டுக் கற்பித்தல் வல்லுநர், கற்பித்தற் பொருள்களின் ஆசிரியர்.
HSU பதிப்புத் துணை:	நெக்ஷாத் மாலொகு, M.A., HSK ஆசிரியர், தலைவர், அல்பானியன் ஆசிரியர் பெற்றோர் மன்றம், சுவிற்சர்லாந்து
தேர்வு – கற்பித்தல் முறையைத் தேர்வுசெய்து பார்த்தவர்கள்:	நெக்சத் மாலொகு, சூரிச் (HSK அல்பானியன்) சகினே கொச், சூரிச் (HSK துருக்கி) பொஸ்னா அலெபிச், (HSK சேர்பியன்) எலிசா ஏஷிமன்-பெரேரா மற்றும் ராக்கேல் ரோஸா (HSK போர்த்துகீஸ்) ஹசிர் மெமெத்தி, வியன்னா ரிபத் ஹாமத்தி, டுசில்டோர்ப்
விளக்கப் படங்கள், ஒட்டுமொத்த வடிவமைப்புக் கருத்து மற்றும் நிறைவேற்றுகை:	பார்பரா முல்லெர், ஏர்லென்பாஹ்
மொழிபெயர்ப்பு:	தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து Tamil Education Service Switzerland பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், Prof. Dr. முனைவர் சண்முகதாஸ் மனோன்மணி, Dr.
	"பாரம்பரியமொழிக் கற்பித்தற் கருவிகள்" நூல் தொடர் சுவிஸ் கலை பண்பாட்டுப் சமஷ்டி பணியகத்தின் (BAK) துணையுடன் உருவாக்கப்பட்டது. Schweizerische Eidgenossenschaft Confédération suisse Confederazione Svizzera Confederaziun svizra Eidgenössisches Departement des Innern EDI Bundesamt für Kultur BAK
	இக் கருத்திட்டம் ஐரோப்பிய ஆணைக்குழுவின் துணையுடன் பகுதி நிதியுதவி பெற்றது. இவ்வெளியீட்டின் பொருளடக்கத்திற்கு நூலாசிரியர்களே பொறுப்புடையவர்கள்; இதிலுள்ள தகவல்களின் தொடர் பயன்பாட்டுக்கு ஆணைக்குழு பொறுப்பேற்காது. AMuSE Lifelong Learning Programme

பொருளடக்கம்

நூல் தொடரின் முன்னுரை
"பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்" 7

அறிமுகம்

1 தாய்மொழியில் எழுதுதல்: எளிமையானதல்ல, ஆனால் இன்றியமையாதது 9

2 இவ் வெளியீட்டின் குறிக்கோள்களும் கட்டமைப்பும் 9

3 எழுத்துரு எழுதுவதற்கான தற்போதையக் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் முக்கிய விடயங்கள் 9

4 பாரம்பரியமொழியில் எழுத்துருவை எழுதுவதற்கு தேவைப்படும் மேலதிக குறிப்புகள் 11

5 எழுத்து செயல்திறனை மதிப்பிட கவனிக்கவேண்டிய முக்கிய விடயங்கள் 13

I அறிமுகம்: எழுதும் ஆர்வத்தை தூண்டக்கூடிய இலகுவான எழுத்து விளையாட்டுகளும் பயிற்சிகளும்

1 தொடக்கப் பயிற்சி: சுழற்சி முறையில் கதை கூறுதல், முடிவுள்ள அல்லது தொடர் கதைகள் 16

2 இணைந்து எழுதுதல்: கவிதை, தொடர், சங்கிலி அல்லது மடிக்கதைகள் 17

3 உரையாடல் எழுத்துரு: சொற்களைத் தேர்ந்தெடுத்தல், மற்றும் யார், எங்கே, என்ன கதைகள் 19

4 சட்டகக் கதைகள், உணர்வுச்சொற் கதைகள், சார்புக்கட்டுக் கதைகள் 20

5 பல்வகை கற்பனைக் கதைகள் எழுதுதல் 22

6 மொழியில் சிறிய கலைச்சுவையுள்ள மற்றும் ஆக்கச் செயற்பாடுகள் 23

7 மொழி விடுகதைகள் 25

II எழுத்துருவாக்கத்தின் பல்வேறு படிநிலைகளுக்கான உத்திகளும் மதிநுட்பங்களும்

8 எழுத்துருவின் முதற்கட்டமைப்புக்கு உத்திகளை அறிதல் 28

9 எழுத்துருவின் கட்டமைப்பைத் திட்டமிடல் 30

10 எழுத்துருவை தலைப்பு, உபதலைப்பு, பந்திகளாகப் பிரித்து வடிவமைத்து எழுதுதல் 32

11 எழுத்துருவை மீள் நோக்குக்கும் திருத்தத்துக்குமான உத்திகள் 34

12 பெறுநருக்கு ஏற்றவாறு எழுதுதல். கவர்ச்சியான எழுத்துருக்களை வடிவமைத்தலும் எடுத்துரைத்தலும் 36

13 மாணவர்களுக்கான வழிகாட்டல்கள்: பணித் தாள்கள் 1 + 2 38

ப.தா.1 படிப்படியாக ஓர் எழுத்துருவைத் திட்டமிடலும், வடிவமைத்தலும், பதிப்பித்தலும் 40

ப.தா.2 எழுதும்போது எழும் சிக்கல்களை எதிர்கொள்ளல் 42

III

எழுதுதலின் பகுதி நிலைகளை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள்

14 சொற்கோவைக் கட்டமைப்புக்கான பரிந்துரைகள் I: சொற்பரப்புகளுடனும் விரிவாக்கப்பட்ட மொழிக் கருவிகளுடனும் செயற்படுதல் 46

15 சொற்கோவைக் கட்டமைப்புக்கான பரிந்துரைகள் II: இடைவெளி நிரப்பல் பயிற்சிகளுடனும் மாற்றுச் சொல் தேர்வுகளுடனும் செயற்படுதல் 49

16 எழுத்துருக் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்துக்குமான பரிந்துரைகள் 52

17 எழுத்து நடையினை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள I: ஒன்றை கண்டுபிடித்தலும் அதை கையாளுதற்குமான ஒருவகை கற்பித்தல் முறை 54

18 எழுத்து நடையினை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள் II: தெளிவாகவும், துல்லியமாகவும், விறுவிறுப்பாக எழுதுதலும் சுருக்குதலும் 58

19 தொடரியலையும் உருபனியலையும் முன்னேற்றுதற்கான முன்னூட்டற் குறிப்புகள் 62

IV

குறிப்பிட்ட எழுத்துச் சூழல்களுக்கான பரிந்துரைகள்

20 பல்வகை எழுத்து வடிவங்கள்: குறிப்பாகப் பாரம்பரியமொழிக் கல்விக்குப் பொருத்தமான எழுத்துச் சூழல்கள் 66

21 ஒப்படைகள்: முதன்மைநெறிக் கல்வி வகுப்புகளுடன் இணைவதற்குப் பொருத்தமானவை 70

22 மொழியுடன் இசைக்கலை படைப்பு ஒப்படைகள் 72

நூற்பட்டியல் 74

விளக்கங்கள் மற்றும் சுருக்கங்கள்

முதல்மொழி:	தாய்மொழியாகவும் அல்லது குடும்ப மொழியாகவும் அமைவது: ஒரு குழந்தை வீட்டில் கற்றுப் பேசுவது முதல் மொழி. சில பிள்ளைகளுக்கு இரண்டு முதல் மொழிகள் உள்ளன.
பள்ளிமொழி:	குடிபுகு நாட்டுப் பள்ளிகளில் பேசப்படும் மொழி. அத்துடன் உள்ளூர் பேச்சுமொழி சூழல் மொழியாகக் கொள்ளப்படும்.
சுருக்கங்கள்:	மா = மாணவர் ஆ = ஆசிரியர் பா.மொ.க = பாரம்பரிய மொழி கற்பித்தல் எ.கா. = எடுத்துக்காட்டு

விளக்கம்:
கற்பித்தல் முன்மொழிவுகள் தொடர்பான ஒழுங்கு வடிவம். வகுப்பு, நேரத் தேவைகள் ஆகியவற்றைக் குறிக்கும் படங்கள்:

	த.வே. = தனி வேலை
	கூ.வே. = கூட்டாளியுடன் வேலை செய்தல்
	சி.கு. = சிறு குழு
	மு.வ. = முழு வகுப்பும்
1ம் - 9ம் தரம்	... தொடக்கம் ... வரை என்பதற்குப் பொருந்தும். (எ.கா. : 3ம் - 6ம் வகுப்பு). இந்நிலை தனிப்பட்ட மாணவர்களின் தேவைகளுக்கேற்ப மாற்றமடையலாம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.
10 - 20 மணித்துளிகள்	ஏறத்தாழ தேவைப்படும் நேரம், எ.கா. : 20 மணித்துளிகள் (மதிப்பிடப்பட்டநேரம், பயிற்சியாளரால் வகுப்பின் நிலை மற்றும் தேவைகளுக்கேற்ப முடிவுசெய்யப்பட வேண்டும்).

நூல் தொடரின் முன்னுரை "பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்"

ஒரு பிள்ளையை அடையாளப்படுத்தவும், அப்பிள்ளையின் மொழித்திறனை வளர்க்கவும் ஜெர்மனியிலும் ஒஸ்ரியாவிலும் "Herkunfts- sprachlicher Unterricht (HSU)" எனவும் சுவிற்சர்லாந்தில் "Unterricht in Heimatlicher sprache und Kultur (HSK)" எனவும் வழங்கும் பாரம்பரியமொழிக் கற்பித்தல் (பா.மொ.க HLT) அல்லது தாய்மொழி கற்பித்தல் துணைசெய்கிறது. இது பன்மொழித்துவத்தை ஊக்குவிப்பதுடன் மதிப்புள்ள தன்னிலை மற்றும் சமூகநிலை வளமாகவும் பணி செய்கிறது. இவ்வுண்மை பற்றிய விழிப்புணர்வு ஆய்வு மற்றும் கட்டமைப்பு வழிகாட்டல்களான ஐரோப்பியப் பேரவையின் R(82)18 மற்றும் R(98)6 பரிந்துரைகளினால் உருவானது. எனினும், இத்தகைய கற்பித்தல் வழமையான பாடத்திட்ட வகுப்பறைக் கற்பித்தலைவிட பெரும்பாலும் மிக இடர்ப்பாட்டு நிலைகளிலேயே நடைபெறுகிறது. இதற்குப் பல காரணிகள் பொறுப்பாயுள்ளன:

- பல இடங்களில் பாரம்பரியமொழிக் கல்வி நிறுவன நிலையிலும் நிதி நிலையிலும் காப்பற்ற வலுவிலேயே உள்ளது. எடுத்துக்காட்டாக சுவிற்சர்லாந்தில், பாரம்பரியமொழி ஆசிரியர்களுக்கு அவர்கள் தாய் நாட்டினால் அல்லது பெற்றோர்களினாலேயே நிதி வழங்கப்படுகிறது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் மிகக் குறைவான முறையிலேயே தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. வழமையான பாடத்திட்ட ஆசிரிய அணியுடனான தொடர்பும் கூட்டுறவும் பெரும்பாலும் மிகக் குறைந்த முறையிலேயே மேம்படுத்தப் பட்டுள்ளன.

- பாரம்பரியமொழி வகுப்புகள் கிழமையில் இரண்டு மணி நேரம் மட்டும் அமைவதால், ஆக்கநிலையான, இடையீடற்ற கற்றல் கடினம் ஆகின்றது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் விருப்பக்கல்வியாக அமைந்தமையால், மாணவர்களின் பங்களிப்புச் சிறிதாகக் காணப்படுகிறது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பல்வகுப்புக்களை இணைத்து கற்பிக்கும் முறையை கொண்டுள்ளமையால், 1-9ம் வகுப்பு வரையுள்ள மாணவர் ஒரு வகுப்பிலே சேருகின்றனர். இது பெரும் உள்வாரி வேறுபாட்டினைக் கையாள்வதையும் கற்பித்தல் திறனையும் ஆசிரியரிடமிருந்து வேண்டிநிற்கின்றது.

- பாரம்பரியமொழி வகுப்பறைகளில் பலவகைப்பட்ட மாணவர் குழுமம் இருப்பது போல மாணவர்களின் மொழித் தகைமையும் வேறுபட்டதாயுள்ளது. சிலர் வீட்டில் தம் தாய்மொழியின் எழுத்துமொழிவழக்கிலும் பேச்சுமொழி வழக்கிலும் நல்ல செயற்றிறன் பெற்றிருக்கும் அதே வேளை, மற்றவர்கள் பேச்சுமொழியில் மட்டுமே பேசுபவராயுள்ளனர். புதிய நாட்டில் ஏற்கனவே பல ஆண்டுகளாக வாழ்ந்துவரும் பாரம்பரியமொழி பேசுபவர்களாகிய இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர்க்கு, அங்கு பேசப்படும் மொழி (எ.கா. ஜெர்மன்) மேலாதிக்க மொழியாக அமைய அவர்கள் முதல் மொழியாற்றல் பேச்சுமொழியாக வரையறுக்கப்படுவதுடன், அதுவும் குடும்பச் சிக்கல்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவையுடன், வாய்வழியாக மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது.

- பாரம்பரியமொழி ஆசிரியர்கள் தம் தாய் நாடுகளில் பொதுவாக நல்ல அடிப்படைக் கல்வியைப் பெற்றிருப்பார்கள். ஆனால் குடிபெயர்ந்த நாடுகளில் பல்வகுப்புச் சூழ்நிலையில் கற்பித்தலின் உண்மை நிலைகளுக்கும் அதன் நுட்பங்களுக்கும் அவர்கள் முன்னேற்பாடாயில்லை. தொடர்கல்வி விருத்தி வாய்ப்புகள் வாழும் நாடுகளில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

"பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்" தொடர் தாய்மொழிக் கல்வி வகுப்பு ஆசிரியர்களுக்கு அவர்களுடைய இன்றியமையாத வேண்டப்படுகிற பணிக்குத் துணை செய்கிறது. இதனூடாக இத்தகைய உகந்த தரமுள்ள கற்றலுக்கு பங்களிக்க எண்ணுகிறது. மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய குடிபெயர் நாடுகளின் (அடிப்படைகளும்... என்னும் தொகுதியை ஒப்பிடுக) தற்போதைய ஆசிரியப்பணி மற்றும் கற்பித்தல் பற்றிய பின்னணிகள் மற்றும் கோட்பாடுகளின் மீளாய்வு, வகுப்பறைக்கான உருப்படியான நடைமுறை மதியுரைகளையும் மாதிரிகளையும் கொண்ட பணிநூல்கள் "கற்பித்தல் மதியுரைகள்" நூலின் துணையுடன் இந்நோக்கினை மேலும் முன்னெடுக்கின்றன. மொழியியல் தகைமையை முன்னெடுப்பதையே இவை வலியுறுத்துகின்றன. கற்பித்தல் மதியுரைகள் வேண்டுமென்றே, வழமையான பாடத்திட்டம் அதன் கற்பித்தல் கருவிகள் ஊடாக வந்த மாணவர்கள் நன்கு அறிந்த கற்பித்தற்கலைக் கோட்பாடுகள் நடைமுறைகளை நோக்கிச் செல்கின்றன. இத்தகைய நன்கறிகை, பாரம்பரியமொழிக் கல்விக்கும் வழமையான பாடத்திட்டக் கற்பித்தலுக்குமிடையே ஒரு நெருக்கத்தினை கொண்டுவந்து அவை இரண்டுக்குமிடையே முடிந்தளவு பெரியதோர் இணைப்பினை உறுதிப்படுத்துகின்றது. பாரம்பரிய மொழிக் கல்வித் திட்டங்களின் ஆசிரியர்கள் என்ற முறையில் அவர்கள் தங்களை வழமையான பாடத்திட்டத்தில் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள கற்பித்தல் அணுகுமுறைகளுடனும் குறிப்பிட்ட நடைமுறைகளுடனும் நன்கு இணைத்துக்கொள்ள, அவர்கள் மேலும் பயற்சியினைப் பெறுகின்றனர். இது இருமொழி, இருபண்பாட்டு அடிப்படையில் வளர்ந்துவரும் மாணவர்களின் கல்விச் செயன்முறையில் இணையான மதிப்புள்ள பங்காளிகளாக தம்மை உயர்த்துவதைப் வலுப்படுத்தும் என நம்பப்படுகின்றது.

அறிமுகம்

1. தாய்மொழியில் எழுதுதல்: எளிமையானதல்ல, ஆனால் இன்றியமையாதது

குடியகன்ற பெற்றோர், பேரன் பேர்த்தியருடைய பெரும்பாலான பிள்ளைகளுக்கும் இளையவர்க்கும் தங்களுடைய முதல்மொழியில் அல்லது தாய்மொழியில் எழுதுவது மிகவும் கடினமானது அல்லது முடியாததாகும். இத்தகு எழுத்துத் திறன்களைப் பள்ளியிலே மேம்படுத்த முடியாவிட்டால் குறிப்பிட்ட இப்பிள்ளைகள் தங்கள் முதல்மொழியிலே அறிவிலிகளாகவே இருப்பர். தங்கள் பாரம்பரியமொழியினைச் செம்மையற்ற முறையில், பெரும்பாலும் பேச்சுமொழி வடிவில், பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் தங்கள் எழுத்துப் பண்பாடுடனான தொடர்பை இழக்கின்றனர். இது, விரைவில் அல்லது பின்னர் தம்முடைய முதல் மொழியினை முற்றாக, அதனுடன் இன்றியமையாத சிறப்புத் தகைமை, அவர்களுடைய இரு பண்பாட்டு அடையாளத்தின் உட்பகுதி என்பவற்றை இழக்கும் பேரிடரைக் கூட்டுகின்றது. ஈரறிவுத் தகைமைகளை (ஒருவர் தன் முதல் மொழியில் படித்தல் மற்றும் எழுதும் திறன்) மேலும் வளர்த்தல் என்பது இருபண்பாட்டு-இருமொழி அடையாளத்தின் நடுநிலையான உட்கட்டமைப்பு மேம்பாட்டிலும் உள்ள குறிப்பிடத்தக்க ஈடுபாடுமாகும்.
பாரம்பரியமொழிக்கல்வி (சுவிற்சர்லாந்தில் HSK கற்கைகள்) இத்தகைய தகைமைகளை மேம்படுத்துதற்கு உறுதியான பங்களிப்பினை செய்யலாம். கல்வியில் பின்தங்கிய பிள்ளைகளுக்கு, தம் நாட்டு மொழியினை எழுத்து வடிவிலும் அதன் எழுத்து வடிவிலும் கற்பதற்கும், எழுத்துப் பண்பாட்டினை உள்ளடக்கிய உள்ளீட்டு இருமொழி அறிவினைப் பெறுவதற்கான ஒரே வாய்ப்பினை இது குறித்துக்காட்டுகிறது.

2. இவ் வெளியீட்டின் குறிக்கோள்களும் கட்டமைப்பும்

இந்த வெளியீடு பாரம்பரியமொழிக்கல்வி ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் தற்காலக் கல்வியடிப்படையில் மகிழத்தக்கதாகவும் ஈடுபாடு கொள்ளத்தக்கதாகவும் முதல் மொழியில் எழுத்துத் தகைமைகளை மேம்படுத்தத் துணைசெய்கிறது. பாட எழுத்தாக்கம் பற்றிய கற்பித்தற் திறவுப் பண்புகளுக்கான அறிமுகத்தினைத் தொடர்ந்து பெருந்தொகையான குறிப்பிட்ட கற்பித்தல் முன்மொழிவுகளும் பரிந்துரைகளும் இடம்பெறுகின்றன.

தற்போதைய இத்தொகுதி, பல மாணவர்கள் குறைந்தது தொடக்க நிலையில் குறிப்பிடத்தக்க தடங்கல்களை அடைவதை இனங்கண்டு எல்லா வயது நிலையிலும் எழுதுதற்கான ஈடுபாட்டினை மேம்படுத்தும் எளிமையான விளையாட்டு வடிவங்களின் தொகுப்புடன் தொடங்குகின்றது. உள்நோக்குக்கு இணங்க மதிநுட்ப அறிவானது உண்மைகளின் அறிவைப்போன்று இன்றியமையாததாகும். பகுதி II எழுத்துருவாக்கத்தின் பல்வேறு கட்டங்களில் மாணவர்களுக்குத் துணைசெய்யத்தக்க உத்திகளையும் மதிநுட்பங்களையும் வழங்குகிறது. பகுதி III, எழுத்துரு அல்லது நடையை மேம்படுத்தல், சொற்களஞ்சிய மேம்பாடு என்னும் பகுதிப் பண்புகளின் பல்வகை உருப்படியான கருத்துகளை உள்ளடக்கியது. பாரம்பரியமொழிக்கல்வியின் சந்தர்ப்பம் மற்றும் ஒழுங்கான வகுப்பறைக் கற்பித்தல் அல்லது கலை-ஆக்கச் செயற்றிட்டங்களின் கூட்டுநிலை ஆகியவற்றுக்குக் கருப்பொருள் அடிப்படையில் குறிப்பாகப் பொருத்தமான மதியுரைகள் மற்றும் எண்ணக்கருக்கள் அணியினைக் கடைசிப் பகுதி உள்ளடக்குகிறது.
ஒவ்வொரு பரிந்துரைகளையும் விரைவில் புரிந்துகொள்ளவும், செயற்படுத்தவும் எவ்வகை பிரிவினருக்கு, (தனியாள் பயிற்சி தொடக்கம் குழு, முழு வகுப்பு வரைக்கும்) எவ்வயதினருக்கு, (எ.கா. 3-7 ஆம் வகுப்பு) நேரத்தேவை பற்றியும் இந்நூல் தெளிவாக விளக்குகிறது. தரப்பட்ட பரிந்துரைகளின் நோக்கத்தையும் பயிற்சி செய்யும் முறைகளையும் மிகத்தெளிவாகவும் இலகுவாக புரியும்படியும் விளக்கப்பட்டுள்ளது மேலும் இவை பல ஆசிரியர்களாலும் ஆராயப்பட்டு பெரும்பகுதி செய்முறைத் தேர்வுக்கும் உட்படுத்தப்பட்டன.

3. எழுத்துரு எழுதுவதற்கான தற்போதைய கற்பித்தலில் பயன்படுத்தப்படும் முக்கிய விடயங்கள்

பின்வரும் குறிப்புகள் ஜேர்மன் – பேசும் இடங்களில் தற்போதைய எழுத்துக் கற்பித்தலைச் சார்ந்ததாகும், ஆனால் இயல்பாக பன்னாட்டு மேம்பாடுகளையும் உருக்காட்டுகின்றன. கடந்த 30 ஆண்டுகளின் எண்ணக்கரு "கட்டுரை எழுதப் பயிற்சியளித்தல்" என்னும் முன்னைய தொடருக்குப் பதிலாக "பாட எழுத்தாக்கக் கற்பித்தல" என்னும் தொடரால் ஏற்கெனவே சான்றாகியுள்ளது. வழக்கமான பள்ளிக் கட்டுரைக்கு மேலான இத்தொடரின் ஓர் விரிவான விளக்கத்தினை இது உள்ளடக்குகிறது. தற்கால எழுத்துக் கற்பித்தலின் திறவுப் பண்புகளுள் (பெரும்பாலான பாரம்பரியமொழி ஆசிரியர்கள் தம்முடைய பயிற்சியில் பெற்றதை விட வேறுபட்டதாகலாம்) ஐந்து குறிப்புகள் பின்வருவன. இவை பாரம்பரியமொழிக் கல்விச் சூழலில் ஆராயப்படும், அத்துடன் 4ஆம் இயலில் இத்தகைய கற்பித்தலுக்கு மேலும் பொருத்தமான குறிப்புகளுடன் நிறைவுசெய்யப்படும்.

அ) எழுதுதல் ஒரு சமூகச் செயற்பாடாக: நீங்கள் யாருக்கு மற்றும் என்ன நோக்கத்துக்கு எழுதுவது என்பதைத் தெளிவாக்குக!

எழுதுதல் அடிப்படையில் ஒரு தொடர்பாடற் செய்முறையாகும். சில விதிவிலக்குகளுடன் (எ.கா. நாட்குறிப்பு, அங்காடிப் பொருட்பட்டியல்) ஒருவர் அதனூடாக மற்றவர்க்கு ஏதோ ஒன்றைத் தெரிவிக்க அல்லது அடைவதற்கு விளித்துரைக்கிறார். எனவே எழுதுதலை ஒரு சமூகச் செய்நெறியாகவும் செயற்பாடாகவும் மாணவர்கள் மனநினைவுடன் பட்டறியவேண்டும். வேறுவகையில் கூறினால், மாணவர்களை ஏதாவது எழுதும்படி கேட்டால், தொடக்கத்திலிருந்தே யாருக்கு ஏன் அவர்கள் எழுதுகிறார்கள் என்பதும், எழுத்துருக்கள் எழுதப்பட்டபின் அவற்றுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். எதிர்பார்க்கும் படிப்போர் தொடர்பில், ஆசிரியருடைய சிவப்புப் பேனாவுக்கு மட்டும் எழுதுவது போதுமானதல்ல. பதிலாக, ஆசிரியர் (சில வேளை மாணவருடன்) ஒவ்வொரு எழுது நிகழ்வுக்கும் எந்த எழுத்துருவினைப் பயன்படுத்தவேண்டும் (உரக்க வாசித்தல், வகுப்பறையில் காட்சிப்படுத்தல், நூலொன்றில் இணைக்கப்பட்டிருத்தல், தொடர்பாடல் வடிவில் பயன்படுத்தல்) என்பதை முடிவு செய்யவேண்டும். இலக்குப் பார்வையாளருக்கான எண்ணக் கருக்களை 12ஆம் இயலில் காணலாம். இவற்றைப் பரந்த பல்வகை எழுத்து நிலைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் பயன்படுத்தலாம்.

ஆ) நாளாந்த வாழ்வையும் மாணவர்களின் கற்பனை உலகையும் தொடுக்க ஊக்குவிக்கும் ஒப்படைகள்

எழுத்து ஒப்படைகளுக்கான தலைப்புகள் மாணவர்களின் வாழிடச் சூழலுடன் அவர்களின் விருப்புகள், கனவுகள், கற்பனைகள் ஆகியவற்றுடன் மிக நெருக்கமாகத் தொடர்புற்றிருக்கவேண்டும். இத்தகைய தொடர்பினை ஏற்படுத்துதற்கு பொருத்தமுற ஊக்குவிக்கும் எழுத்து ஒப்படைகள் வேண்டப்படுகின்றன. பின்வரும் கற்பித்தற் கருத்துகள், எளிமையான கீழ்நிலை எழுத்து வேலைகள் தொடக்கம் பெரிய செயற்திட்டங்கள் வரையான பெருந்தொகை எடுத்துக்காட்டுகளைத் தருகின்றன. இரண்டாவதாக, இவ்வேலைக்கு மாணவர்களை உள அடிப்படையில் தயாராக்குதல் இன்றியமையாததாகும். இத்தொடக்க ஏற்பாடு பொதுவாக வாய்மொழியூடாகும். அது தெளிவான ஐயமற்ற வழிகாட்டிகளையும் மாணவர்கள் தம்மைத் திசைமுகப்படுத்தக்கூடிய எதிர்பார்ப்புகளையும் திட்டமான அளவைகளையும் உள்ளடக்கியுள்ளது. தலைப்பு மற்றும் எதிர்நோக்கும் படிப்போர் தேடல் என்பவற்றின் அடிப்படையில் எழுத்து ஒப்படைகளின் சரியான திட்டமிடலானது இன்றைய கற்பிப்போரின் ஐயமற்ற தொழில்சார் திறனின் பகுதியேயாகும்.

இ) பல்வகை எழுத்துரு வகைகளை விரித்து விளக்குதல். என்ன, எதற்காக எழுதப்படவேண்டும்.

முற்காலங்களில் பள்ளிகளில் எழுத்து வேலைகள் பட்டறிவுக் கட்டுரைகள் அல்லது மீளச்சொல்லுதல்கள் ஆகியனவற்றையே கொண்டன, ஆனால் இன்றைய மாணவர்கள் உண்மையான நடைமுறை வாழ்வுடன் தொடர்பான அகன்ற பரப்புடைய எழுத்துரு வகைகளுக்காகத் தயார்ப்படுத்தப்படுகிறார்கள். நிலைமைக்கேற்றபடி, இது அறிக்கைகள், படிவங்கள், குறுஞ்செய்திகள், மடல்கள், சுவரொட்டிகள், எளிமையான கவிதைகள், விண்ணப்பங்கள், வியப்பு எழுத்துருக்கள், படக்கதைகள் ஆகியனவற்றைக் குறிக்கும். மேலும் இது கணினி அல்லது கையடக்கப் பொறிகள் அவற்றின் எல்லாவகைப் பயன்பாடுகளுடன் (word processing, மின்னஞ்சல், குறுஞ்செய்திகள், வலைப்பூக்கள், மின்-அரட்டைகள்) புது ஊடகப் பயன்பாட்டினையும் உள்ளடக்கும். இது வழமையாக நடைபெறும் வகுப்பறைக் கற்பித்தலுக்கும் பொருந்தும்; செய்முறைப் பகுதியில் விவரிக்கப்பட்ட கற்பித்தல் மதியுரைகளுக்கேற்ப பெருமளவு வேறுபட்ட ஊக்கமூட்டும் கருத்திட்டங்கள் எழுதுதலுக்கும் இட்டுச்செல்லும்.

ஈ) பணிக்கப்பட்ட ("நெறிப்படுத்தப்பட்ட") மற்றும் கட்டுப்பாடற்ற ("ஊக்கப்படுத்தப்பட்ட") எழுத்து

பொருளுள்ள ஒப்படைகள் உறுதியான பயனுள்ள எழுத்து ஊக்கிவிப்புடன், பணிக்கப்பட்டதும் கட்டுப்பாடற்றதுமான எழுத்து வாய்ப்புகளை உள்ளடக்கவேண்டும்.

பணிக்கப்பட்ட எழுத்தின் முதன்மை அழுத்தமானது மொழியியற் பகுதித் திறமைகளை (எ.கா. சொற்களஞ்சியம், வாக்கியத் தொடக்கங்கள், பல்வகைத் தொடரியற் கோலங்கள், எழுத்துருக் கட்டமைப்புகள்) கட்டியெழுப்பலும் விரிவாக்கலுமாகும். இப்பரப்புகளுள் ஒவ்வொன்றிலும் குவிபார்வை செலுத்துமிடத்து, அவற்றை நடைமுறைப்படுத்தற்குரிய விரிவான வழிகாட்டல்களையும் நோக்குகளையும் மாணவர் பெறுவர். குறிப்பாக மிக உயர்வான கற்பித்தல் வடிவம் சார்புக்கட்டு எனப்படுவது. இதனூடாக, மாணவர்கள் தம்முடைய பொருளை எழுதுதலுக்கு குறிப்பிடப்பட்ட ஒரு கட்டமைப்பிலே நெருக்கமாகத் தங்கியிருத்தலால் தம் எழுத்துருத் திறனை ஒரு புதிய இணைப்புப்பரப்புடன் விரிவாக்கம் செய்வர். எடுத்துக்காட்டு: புதிய பெறுநர் காரணமாக அஞ்சலில் மாற்றம், "இணைநிலைக் கதைகள்" அதில் ஒரு மாதிரிக்கேற்றபடி ஓர் உருவம், ஓர் இடம் அல்லது ஒரு பொருள் மாற்றப்பட்டிருக்கலாம். இத்தகைய அணுகுமுறையின் பெறுமதியின் ஒளியிலே, குறிப்பாக தரம் குறைந்த பாரம்பரியமொழி மாணவர்களுக்கு, 4ஆம் இயல் மேலும் விவரங்களைத் தருகிறது; பகுதி III இலுள்ள பல்வேறு செய்முறைக் கருத்துகளையும் பார்க்கவும்.

கட்டுப்பாடற்ற அல்லது ஊக்குவிக்கப்பட்ட எழுத்து சில எழுத்து வேளைகளைக் குறிக்கிறது, அங்கு மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட மாதிரியினைப் பின்பற்றாமல், ஒரு குறிப்பிட்ட தலைப்புக்காக அல்லது கருத்திட்ட எழுத்துக்காக (எ.கா. ஒரு வியப்புக் கருப்பொருளுக்காக வாய்மொழியூடான தொடக்கம் அல்லது புனைகதையல்லாத எழுத்துருவெனில் ஒரு தொடக்க உரையாடலூடாக) தயார்ப்படுத்தப்படுகின்றனர். தெளிவாகத் தெரிவிக்கப்பட்ட எதிர்பார்ப்புகள் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவைகள் ஆகியனவும் இத்தகைய எழுத்தின் பகுதிகளாகும். முன்கூட்டிய முன்னேற்பாடுகள் இல்லாத கட்டுப்படுத்தப்படாத எழுத்துக் கருத்திட்டங்கள் ("ஏதாவது பற்றி எழுத உங்களுக்கு இப்பொழுது அரை மணித்தியாலம் உள்ளது") பல மாணவர்களை மூழ்கடித்து விடுவனவாக அமையக்கூடும். கட்டுப்பாடற்ற எழுத்து மாணவர்களை

பள்ளி நிலைகளுக்கு அப்பாலும் தம்முடைய மொழியிலே எழுதுதற்கு ஊக்குவிக்கின்றது (அஞ்சல்கள், நாட்குறிப்பு, மின்னஞ்சல்கள்) என்பதை இனங்காணுதல் இன்றியமையாததாகும்.

உ) எழுதும்போது பயன்படுத்தக்கூடிய ஆலோசனைகள்

தேவைப்படும் நிறைவுப் பலன் பற்றி மட்டுமே மாணவர்கள் சிந்திப்பார்களேயானால், அவர்களுட் பலர் தாம் பதட்டமாக உணரக்கூடும். எனவே அதற்கு நிகராக செயற்பாட்டொழுங்கில் கவனம் செலுத்துதல் பயனுள்ளதாகும். ஓர் எழுத்துச் செயற்பாட்டொழுங்கினை நடத்தக்கூடிய படிமுறைகளாக எவ்வாறு சிறு பகுதிகளாக பிரிப்பது பற்றியும் அவற்றை எவ்வாறு அளவையியல் தொடரில் தீர்த்துவைத்தல் பற்றியுமான மதிநுட்பங்களை மாணவர்கள் கற்கவேண்டும். இன்றியமையாத படிமுறைகளில் சில: கருத்துகளை அறிதல், முன்பெற்ற அறிவினைச் செயற்படுத்தல் – எழுத்துருக் கட்டமைப்பைத் திட்டமிடலும் அமைத்தலும் – எழுத்துருவை எழுதுதல் – எழுத்துருவை மீள்நோக்கிடல் – எழுத்துருவைச் சமர்ப்பித்தல். மாணவர்கள் இவ்வெழுத்து மதிநுட்பங்களை திறனுடனும் பேண்தகைமையுடனும் பெற்றுக்கொள்ளவும் பயன்படுத்தவும் இவ்வெழுத்து மதிநுட்பங்களை நடுநிலைப்படுத்தல் வெளிப்படையாகத் தொடரப்படவேண்டும். பகுதி II இலுள்ள உத்திகளும் கற்றல் மதிநுட்பங்களும் இவ்விலக்கினை அடையத் துணைசெய்கின்றது. இன்றியமையாத குறிப்புகளைச் சுருக்கித் தரும் இரண்டு செயற்பாட்டுத் தாள்கள் 4ஆம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்குரியன.

4. பாரம்பரியமொழியில் எழுத்துருவை எழுதுவதற்கு தேவைப்படும் மேலதிக குறிப்புகள்

பாரம்பரியமொழி கற்பித்தலின் சிறப்பியல்புகளில் ஒன்று மாணவர்களின் பல தரப்பட்ட தன்மை மற்றும் அவர்களுட் பலர் தம்மை அச்சப்படுத்தும் தம் முதல் மொழியின் இலக்கியப் பண்புகள் தொடர்பாக மிகுதியான இடர்பாடுகளை பட்டறிகின்றனர் என்பது உண்மையாகும். இதனால் பாரம்பரியமொழியில் எழுதுவது தொடர்பாக எழும் அறைகூவல்கள் பின்வரும் கண்காணிப்புகளில் உருக்காட்டுகின்றன.

அ) முதல்மொழி எழுத்துமுறைக்கு அறிமுகம்

குடிபெயர்ந்த நாட்டின் நெடுங்கணக்கைத் தம்முடைய தாயகத்து நெடுங்கணக்குக்கு நிகராகக் கற்ற மாணவர்களுக்கு முதலில் மிக உன்னிப்பாக அவர்களின் முதல்மொழி ஒலியன்களும் வரிவடிவங்களும் அறிமுகஞ் செய்யப்பட வேண்டும். இலத்தீன் எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்ட மொழிகளில் அவர்களின் பள்ளிமொழியில் இல்லாத எழுத்துக்கள் (எ.கா.ë ç I) அமைந்துள்ளன. இதனால் பெருமளவு ஆசிரியர்கள் தங்கள் பள்ளிமொழி நெடுங்கணக்கைக் கற்கும் பிள்ளைகள் குழப்பமடைவதைத் தவிர்க்க இவ்வெழுத்துகளை முதலாவது தரத்தின் முடிவில் அல்லது இரண்டாம் தரத்தின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்துகிறார்கள். இலத்தீன் அல்லாதனவற்றை அடிப்படையாகக் கொண்ட நெடுங்கணக்குகள் உள்ளூர் மொழியுடன் குழப்பமடையும் இடர் குறைவாகவே இருக்கும். எனினும் முதல் மொழியின் முழு நெடுங்கணக்கும் கற்றே ஆகவேண்டும்.

ஆ) முதல் மொழியில் வேறுபட்ட சொற்கோவையை சுருக்குதலும் விரித்தலும்

பெருந்தொகையான குடியேற்ற மாணவர்களுக்குத் தங்கள் முதல்மொழியில் மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவை மட்டுமே உண்டு. மேலும் அவர்களின் சொற்கோவை மற்றும் மொழித்திறன்கள் குடும்பம் தொடர்பான பொருள்களை பேச்சுமொழியிலே வெளிப்படுத்தலை உள்ளடக்கியதாகும். ஏனைய யாவற்றுக்கும் குறிப்பாக பள்ளி தொடர்பான சூழ்நிலைகள் அல்லது மிகுந்த சவால் வாய்ந்த தலைப்புகள் அவர்கள் பள்ளி மொழியை அல்லது தாம் வதியும் நாட்டு மொழியைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் இப்பிள்ளைகளினதும் பெரியவர்களினதுமான சொற்கோவை இரு பகுதிகளாகப் பிளவுபட்டு விரிவான இருமொழித் திறன்களை மேம்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராகச் செல்கிறது. எனவே, பாரம்பரியமொழி கற்பித்தலின் இன்றியமையாத இலக்கு எழுத்துமொழி வடிவங்களையும் உள்ளடக்கிய வேறுபட்ட சொற்கோவையை மேம்படுத்தலும் கட்டியமைத்தலுமாகும். மாணவர்கள் விரைவாகத் தமக்காக்கிக்கொள்ளும் சொற்கோவைக்கிடையிலான (பயன்படு அல்லது ஆக்கவளமுடைய சொற்கோவை) ஒரு வேறுபாட்டினை ஏற்படுத்தவேண்டும், எனவே அது ஆழமான பயிற்சிக்குள்ளாக்கப்படவேண்டும். இது பெரும்பாலும், பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்களுடன் மாணவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய சொற்களை – ஆனால் அவர்கள் அவற்றைப் பயன்படுத்தவேண்டும் என்பதில்லை (ஏற்றுக்கொள்ளுதல் அல்லது விளங்கிக்கொள்ளும் சொற்கோவை) – உள்ளடக்கவேண்டும். இக் கைநூலின் 14ஆம் 15ஆம் இயல்களில் வழங்கப்பட்டுள்ள மதியுரைகளும் பயிற்சிகளும் சொற்களஞ்சியக் கட்டமைப்புப் பயிற்சிகளின் இன்றியமையாமையைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

இ) எழுத்துமொழிக்கு வழிகாட்டுதல்

மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவைக்கு மேலாக பல குடிபெயர்ந்த மாணவர்களின் இன்னொரு இயல்பு என்னவெனில் அவர்களுடைய முதல் மொழித்தேர்ச்சி பெரும்பாலும் எப்போதுமே பேச்சுமொழி மாற்றுவடிவத்துடன் கட்டுப்படுத்தப்பட்டதுடன் அதன் எழுத்துமொழியில் அல்லது எழுத்து வடிவத்தில் தகுந்த ஆற்றல் இல்லாமையுமாகும். எனவே, பாரம்பரியமொழிக் கற்பித்தற் செயற்பாடுகளில் ஒன்று எழுத்துமொழியின் உன்னிப்பான அறிமுகம், அதன் தேர்ச்சி எழுத்துமொழி மற்றும் சரியாக எழுதும் மாணவர்களின் ஆற்றல் ஆகியவற்றுக்கான முன் தேவையும் திறவுகோலும் ஆகும். இவ்வறிமுகத்தின் (பள்ளி முதலாண்டில் தொடங்குவது) இன்றியமையாத கோட்பாடுகள் பின்வருவனவற்றைக் கொண்டன.

1) உன்னிப்பான கற்பித்தல்: எழுதுதலில் பிள்ளைகளின் மகிழ்ச்சியே முதன்மை இலக்கு. பெருமளவு நெறிமுறை நோக்குகளினால் அதனை விட்டுக்கொடுத்தல் முடியாது.

2) ஒப்பீட்டு மற்றும் ஆய்வு அணுகுமுறை: கற்பித்தலுக்கு முழுமையாக ஓர் ஒழுங்குமுறை அணுகலன்றி, எழுத்துமொழிக்கும் பேச்சுமொழிக்கும் இடையிலான வேறுபாடுகளை, முடியுமான வேளைகளில், மாணவர்கள் கண்டுபிடித்தலுக்கும் ஒப்பீட்டுக் கற்றலுக்கும் துணைசெய்யும் அணுகுமுறையால் தீர்த்துவைத்தல் வேண்டும்.

3) பல பொருத்தமான செயன்முறை வாய்ப்புகள்: எழுத்துமொழியில் மாணவர்களால் உள்வாங்கப்பட்ட சொற்கோவையும் மொழித் திறன்களும் பொருத்தமான எழுத்து வேலைகளால் உள்ளகப்படுத்தும் வரையும் அவை திரும்பத் திரும்ப பயிற்சிக்குட்படுத்தவேண்டும்.

ஈ) மொழிவலுவற்ற மாணவர்களுக்கு துணைக் கட்டமைப்புகளான ஊன்றுகோல்களை வழங்குதல்

ஒவ்வொருநாள் மொழியைவிட சொற்கோவை மற்றும் முறைசார் கட்டமைப்புகளுக்கேற்ப வகுப்பறையில் பயன்படுத்தப்படும் பள்ளிமொழி மிகவும் சிக்கலானது. இவ் "வகுப்பறை மொழி", அதனுடன் தொடர்புடைய எழுத்துருத் தகைமையை (ஓர் எழுத்துருவுடன் ஆக்க நிலையிலும் பெறுநிலையிலும் ஊடாட்டமிடும் தகைமை) உள்வாங்கலென்பது அச்சமிகு செயற்பாடாகும். ஜெர்மன் வகுப்புகளிலும் ஜெர்மன் இரண்டாவது மொழி வகுப்பறைகளிலுமுள்ள மாணவர்களுக்குத் துணையாகவுள்ள மிக வெற்றியளிக்கும் அணுகுமுறையானது தற்போது பயன்படுத்தப்படும் முன்னர் குறிப்பிடப்பட்ட சார்புக்கட்டு முறையாகும். இவ்வணுகுமுறை பாரம்பரியமொழிகளைக் கற்பிப்பதற்கும் சீரிய முறையில் ஏற்றதாகும். மாணவர்கள் திசைமுகப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய ஒரு வகைமாதிரி வடிவத்தின் அல்லது கட்டமைப்பின் சில பகுதிகளுக்கு (எ.கா. சொற்கோவை, வாக்கியம் கட்டியமைத்தல், எழுத்துருக் கட்டமைப்பு) துணையாக சார்புக்கட்டினைப் பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக, மாணவர்கள் தம் சொற்களால் நிரப்பக்கூடிய "பதினொரு கவிதைகள்" (#21.1 பார்க்கவும்) என்பதிலுள்ள சுருக்க வடிவமாகவும் இது அமையலாம். இன்னொரு எடுத்துக்காட்டு, ஓர் எழுத்துருவின் சில பகுதிகளுக்குக் கட்டுமானத் தொகுதிகளை அல்லது கூறுகளை வழங்கல் (எ.கா. ஒரு படக்கதைக்கு தொடக்க வாக்கியங்களுக்குப் பொருத்தமான வினைகள்) மாணவர்கள் அவற்றை தம்முடைய எழுத்துருக்களை எழுதுவதற்குப் பன்படுத்துவர். ஒரு குறிப்பிட்ட வேலையை எவ்வாறு முடிக்கலாம் என்பதற்கு ஓர் எளிமையான எழுத்துருவுக்குக் குறிப்பிட்ட படிகளை வழங்கலாம் (எ.கா. ஒரு செய்முறை அல்லது அறிவுறுத்தல்). இவ்வாறான எல்லா இடங்களிலும் மொழி வேலைப் பகுதிகளை (எ.கா. எழுத்துரு கட்டியமைத்தல்) முடிப்பதற்கு "சார்புக்கட்டு" ப் பயன்பாடு ஓர் எழுத்துரு உருவாக்கத்தில் மாணவர்க்குள்ள சுமையினைக் குறைப்பதற்குத் துணைசெய்யும். சரியான எடுத்துக்காட்டுகளாக சொற்களையும் தொடர்களையும் தேர்வதாலும் பயன்படுத்துவதாலும், அவர்கள் தம் மொழித் திறமையை சுறுசுறுப்பாக அகல்விக்கின்றனர்.

பெரும்பாலான கற்பித்தல் பரிந்துரைகள், குறிப்பாக பகுதி III இல் (குறிப்பிட்ட சில எழுத்துப் பண்புகளை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகள்), எளிமையான சார்புக்கட்டு மாற்றுகளை வழங்குகின்றன (பார்க்கவும் 14.1: சொற் பரப்புகள், 15.2: மாற்றுச் சொல் தேர்வு, 16.3: இணையான எழுத்துருக்கள்).

மேலும் தகவல்களுக்கு, https:www.uni-due.de/imperia/md/content/prodaz/scaffolding.pdf

உ) எழுத்துப்பிழை பற்றிய பின்குறிப்புகள்

இலக்கண எழுத்துக்கூட்டு விதிகளும் சிக்கல்களும் குறைந்தளவு பகுதி முறையாகவேனும் குறிப்பிட்ட மொழி சார்ந்தனவாகையால், இவ்வெளியீட்டில் அவை விரிவாகப் பேசப்படமாட்டா. இருப்பினும், பயனுள்ள இலக்கணப் பயிற்சிக்கு பின்வருவனவற்றை ஒரு பொதுக் கோட்பாடாகப் பின்பற்றவேண்டும்:

1) அடிப்படை சொற்கோவை நோக்குநிலை: இலக்கணப்படி சரியான சொற்களைக் கையகப்படுத்தல் மற்றும் பிழைகளைத் திருத்துதல் என்பன அடிக்கடி பயன்படுத்திய சொற்களை நோக்கியதாக அமையவேண்டும். பல தடவை ஒரு சொல் பயன்படுத்தப்படுமெனில், அதன் சரியான எழுத்துக்கூட்டலை அறிதலும் பயன்படுத்தலும் இன்றியமையாததாகும்.

2) தேர்ந்தெடுத்துத் திருத்தல்: எல்லாப் பிழைகளையும் குறித்தல் முதன்மையாக ஊக்கமின்மைக்கு இட்டுச்செல்லும். மூன்று தொடக்கம் ஐந்து வரையான மிக இன்றியமையாத பிழை வகைகளை அல்லது தனிப்பட்டவர் பிழைகளைச் சுட்டிக்காட்டுதல், அவற்றைத் திருத்த வலுவுள்ள பல்பிரிவு பயிற்சியினைத் திட்டமிடல் மிகவும் பயனுடையது.

3) பயனுள்ள முன்னேற்றங்கள், நீண்டகாலப் பயிற்சி: கல்வி உளவியல் அடிப்படையில் பிழையாக எழுத்துக்கூட்டிய ஒரு சொல்லைத் திரும்பத் திரும்ப மீள் எழுதும் மரபுவழி முறையால் எவ்வித நன்மையும் இல்லை. 2 – 3 கிழமைகள் வரை சிக்கலான சொற்களை பல்வேறு தொடர்களிலே இட்டு பயிற்சி செய்தால் பயனுள்ள வலுவுள்ள பயிற்சி முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும்.

4) தன் துணையுடன் துணைசெய்தல்: அகரமுதலிகளைக் கையாளவும் பயன்படுத்தவும் முழுமையான அறிமுகம், மாணவர்கள் தம் திறனால் இக்கருவிகளை வலுவுள்ள முறையில் பயன்கொள்வதற்கான முன் தேவையாகும்.

5. எழுத்து செயல்திறனை மதிப்பிட கவனிக்கவேண்டிய முக்கிய விடயங்கள்

- **கணிப்பீட்டில் முக்கிய விடயம்**

மாணவர்களின் எழுத்து உற்பத்திகளைக் கணிப்பீடு செய்வது மாத்திரம் ஆசிரியருடைய தொழிலாக அமையக்கூடாது. ஒரு தொடர்பாடல் எழுத்து எண்ணக்கரு இலக்குக் குழுவினை (3.அ மேலே பார்க்கவும்) உட்படுத்துவதுடன் ஏனைய படிப்பவர்களின் பின்னூட்டல் இன்றியமையாததும் பயனுடையதும் எனக் கருதப்படுகிறது, இதனால் அது எழுத்துச் செயற்பாட்டின்போது ஏற்கெனவே நடைமுறைப் படுத்தப்பட்டதாயிருக்க வேண்டும். இவ்வேளை மாணவர்களுக்கு ஏற்கெனவே தம்முடைய ஒழுங்கான வகுப்பறைப் பாடங்களிலிருந்து நன்கறிமுகமான எழுத்து மாநாடுகளும் பயனுடையன (இயல் 11.1 பார்க்கவும்). ஆசிரியர் முதல் நிலையில் நிறைவுத் திருத்தப்பொறுப்பாளர் பங்கினை நிறைவுசெய்வதுடன் அவர் மேலும் முன்னேற்றத்துக்கான ஆக்கநிலை விமரிசனத்தை முன்வைப்பவராகவும் முன்வைக்க வேண்டியவராகவும் திகழ்வார்.

- **கட்டுரையில் இடம்பெறும் விடயங்கள்**

மரபுவழி கட்டுரை திருத்தும் முறையிலுள்ள பெருஞ்சிக்கல்களுள் ஒன்று பெரிய அளவில் அகநிலை மற்றும் வெளிப்படையின்மை ஆகும். இத்தகைய இடர்பாட்டை தவிர்ப்பதற்குக் குறைந்த அளவு பெரிய ஒப்படைகளுக்கு முன்னராவது தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும். குறைந்தளவாக 4-5 எதிர்பாக்கப்படும் விடயங்கள் மாணவர்களுக்கு கூறப்படவேண்டும். (எ.கா. குறைந்தளவு ஒரு பக்கம் எழுதப்பட வேண்டும். முன்னுரையில் தெளிவான உள்ளடக்கம் முக்கிய பகுதியில் நான்கு முக்கிய தகவல்கள், முடிவுரை போன்றவை உள்ளடக்கப்படவேண்டும்.) புள்ளிகளை வழங்கிய பின் ஒப்படை தொடர்பாக மாணவர்களுடன் குறை நிறையை உரையாடி ஊக்குவித்தல் வேண்டும்.

- **ஊக்குவிக்கும்படி திருத்துதலும் மதிப்பிடுதலும்**

"என்ன பிழை, என்ன விடுபட்டது?" என்பதனை "என்ன இருக்கிறது, எதனை மேலும் சேர்த்துப் பெருப்பிக்கலாம்?" என்னும் வினாவால் மேலும் வழிநடத்தப்படுவது தொடர்பாக ஆசிரியரின் குவிநிலைப்பார்வை பற்றாக்குறையற்றது என்பதை இது குறிக்கிறது. தொடர்படிநிலையாக, ஆசிரியர் வலுவான முறையில் எவ்வாறு மிக நன்றாகத் திட்டமிட்டு முன்னேற்றங்களை (இலக்குப் பயிற்சிகள், ஆழமான உருக்காட்டல், தன் பயன்பாடும் நடைமுறைப்படுத்தலும்) அடையலாம் என்பதை மனங்கொள்வார். நீண்டகால வெற்றிக்கும் பாரம்பரியமொழி கற்பித்தற் பயன்பாட்டுக்கும் இட்டுச்செல்லக்கூடிய நெறிமுறை இது ஒன்றேயாகும்.

- **செய்முறைகளை மதிப்பிடல்**

மரபடிப்படையில், நிறைவடைந்த எழுத்துருவே மதிப்பிடப்பட்டது. எனினும், குறிப்பாக வலுக்குறைவான எழுத்தாளர்கள் எங்கு இடர்களை பட்டறிந்துகொண்டனர் என்பதை இந்நெறிமுறை எப்பொழுதுமே காட்டுதற்குத் தவறுகிறது. இது முன்னைய எழுத்துச் செய்முறையினை அண்மித்து நோக்குதலை வேண்டிநிற்கிறது. எடுத்துக்காட்டாக, ஓர் எழுத்து மதிநுட்பம் பயிற்சியிலிருந்ததெனில், ஒருவர் வெறுமனே எழுதத் தொடங்குகிறார் அல்லது குறிப்பிட்ட மதிநுட்பத்தினைப் பின்பற்றுதற்கு உண்மையான முயற்சி மேற்கொள்கிறார் என்பது தெளிவாகும்.

- **பின்னூட்டல் வழங்கல்**

இன்றைய நெறிமுறை அளவைகளின்படி, ஒரு திருத்தப்பட்ட மற்றும் தரப்படுத்தப்பட்ட எழுத்துப் பகுதியை வெறுமனே திருப்பிக்கொடுத்தல் இனிமேலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஊக்குவிப்பு நோக்குநிலைப்பட்ட கற்பித்தலென்பது மாணவர்களுக்கு அவர்களுடைய எழுத்துகள் பற்றிய உருப்படியான எழுத்து அல்லது தாய்மொழி ஊடான கருத்துரைகளுடன், அவர்களுடைய வேலையின் மேலதிக மேம்பாட்டையும் முன்னேற்றத்தையும் நோக்கிய குறிப்பான மதியுரைகளையும் வழிகாட்டலையும் வழங்குதலாகும்.

- **தகைமை நோக்குதல்**

வரையறை செய்யப்பட்ட தகைமைகளை (குறைவுள்ள, இயல்பான, அல்லது விரிவாக்கப்பட்ட தகைமைகள் என பெரும்பாலும் வேறுபடுத்தப்படும்) நோக்கிய நோக்குநிலையே கல்விக் கருத்தாடலில் இன்றைய தலைப்பு ஆகும். பாரம்பரியமொழிகளைக் கற்பித்தலில் ஓர் பரந்த நிலையிலே இது எண்ணப்பட வேண்டியதாகும். மொழியியல் அடிப்படையில், இது Common European Framework, cf. http//www.goethe.de/z/50/commeuro/303.htm ஐ உசாத்துணையாக உள்ளடக்கவேண்டும்.

இந்த அறிமுகப் பகுதிக்கு அவர்களுடைய மதிப்பார்ந்த பங்களிப்புகளுக்காக, கிளவுடியா நியுகெபவர், கிளவுடியோ நொடரி, ஸ்ரீபன் மச்லர் மற்றும் பீற்றர் சீபர் ஆகியோருக்கு நான் நன்றி கூறுகிறேன்.

அறிமுகம்: எழுதும் ஆர்வத்தை தூண்டக்கூடிய இலகுவான எழுத்து விளையாட்டுகளும் பயிற்சிகளும்

I

1 தொடக்கப் பயிற்சி: சுழற்சிமுறையில் கதை கூறுதல், முடிவுள்ள அல்லது தொடர்கதைகள்

இலக்கு

விளையாட்டாகவும் இயல்பாகவும் கதைசொல்லும் மகிழ்வினை ஊக்குவிக்க; இத்தொடக்கநிலைப் பயிற்சி எழுத்து வடிவ கதைசொல்லுதலுக்கான முதல் படிநிலையாகும் (கீழே பார்க்க #2). அதே வேளை, இக் கதைசொல்லும் பயிற்சி பாரம்பரியமொழியில் மாணவர்களின் வாயூடான வெளிப்பாட்டினையும் வளரச்செய்கிறது.

சேர்ந்து கதைகள், தொடர், சங்கிலிக் கதைகள் கூறுதல்

1 - 6 ஆந் தரம் | 10 - 15 மணித்துளிகள்

செயல்முறை

அ) மாணவர்கள் (முடியுமாயின்) வட்டமாக இருத்தல். ஆசிரியர் அல்லது ஒரு மாணவர் ஒரு கதையின் தொடக்கத்தினை ஒன்று அல்லது பல வாக்கியங்களில் உரைக்கின்றார் (எடுத்துக்காட்டு: "அப்பொழுது காலை 3 மணி, எல்லாமே கடும் இருட்டு. மிக மெதுவாக இருண்ட வீட்டுத் தொகுதியின் முன்கதவு திறந்தது.") உடனடியாக: நாம் எல்லோரும் ஒன்றாக தொடர்ந்து இக்கதையினை ஆக்குவோம்!

ஆ) மாணவர்கள் ஒன்று அல்லது பல வாக்கியங்களால் (ஆகக் கூடியது ஐந்து வாக்கியங்கள்) ஒவ்வொரு கதையையும் தொடர்ந்து பின்னுகின்றனர். வரிசை வரிசையாக ஓர் ஒழுங்கின்றி அல்லது தொடராக அவர்கள் தம் முறையைப் பெற்றுக்கொள்ளலாம். இன்றியமையாதது என்னவெனில் ஒவ்வொருவரும் பங்களிப்பதேயாகும்.

கருத்துகள்:

- கிளர்ச்சிக் கதைத் தொடக்கங்கள் மாணவர்களால் ஒன்று சேர்க்கப்பட்டு வகுப்புகளுக்கு கொண்டுவரப்படலாம் அல்லது கொண்டுவரப்படவேண்டும். பெறக்கூடிய சான்றுகள், மாணவர்களின் வியப்பும் கற்பனையும், நூல்கள் அல்லது செய்தித்தாள் அறிக்கைகளிலிருந்து வாக்கியங்கள், கிளர்ச்சியுள்ள அல்லது சுவையான வேளைகளைக் காட்சிப்படுத்தும் படங்கள் அல்லது ஒளிப்படங்கள்.
- தெளிவான தொடர்புகொள் பணி ஒப்படை தவிர்க்க முடியாதது, பின்வருவது போல: "இக்கதையினை ஆக்கி, ஒரு முடிவுடன் நிறைவு செய்ய இன்னும் எங்களுக்கு 10 மணித்துளிகள் உள."
- இவ்வேலையில் எல்லா மாணவர்களும் ஒரே சீராகப் பங்கேற்றுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்த, ஆசிரியர் முதலிலேயே இரண்டு அல்லது மூன்று பொத்தான்களை அல்லது தாள் துண்டுகளைக் கொடுக்கலாம். ஒரு வாக்கியத்தை முடித்த மாணவர்கள் ஒரு பொத்தானையோ தாள் துண்டினையோ திருப்பிக் கொடுக்கவேண்டும். பயிற்சியின் முடிவில், எல்லா மாணவர்களும் தம் பொத்தான்களையோ தாள் துண்டுகளையோ திருப்பிக் கொடுத்திருக்கவேண்டும்.
- மேலும் இடம்பெறக்கூடிய வழிகாட்டி வேறுபாடுகள்: ஆண் மற்றும் பெண் மாணவர்கள் மாறி மாறியும், அல்லது இளைய மற்றும் மூத்தபிள்ளை மாறி மாறியும் அமைதல்.
- தன்னிச்சையை நலிவடையச் செய்யாதிருக்க, முடியுமான வரை திருத்தங்களை விட்டுவிடவும். விளங்க முடியாத அல்லது பொருத்தமற்ற பொருளை விளக்குதற்காக தலையீடுகளைக் குறைத்துக்கொள்க.
- நிகழக்கூடிய தொடர்ச்சி: மாணவர்கள் (தனியாக அல்லது இருவராக) பொதுவாக உருவாக்கப்பட்ட கதைகளை எழுத்தில் தொகுத்தல், பின்னர் எழுத்துருக்கள் ஒப்பிடப்படல்.
- இப்பயிற்சி ஒரு பாடத்தினை முடிக்கவோ அல்லது வகுப்பு நடக்கும்போது சிறிது தளர்த்துதற்கு ஓர் செயற்பாடகவோ அமைவதற்கும் ஏற்றதாக அமையலாம்.

மாற்றுகள்:

1. செயற்பாடு நன்றாக அறிமுகம் செய்யப்பட்டிருப்பின், முழு வகுப்பினையும் இப்பயிற்சியில் ஈடுபடுத்துவற்கு ஈடாக, ஒன்று அல்லது இரண்டு குழுக்கள் மட்டத்தில் இதனை நடத்தலாம்.

2. "பொது நூல்" வேறுபாடு: ஒருவனோ/ஒருத்தியோ கையில் ஒரு நூற்பந்தினை அல்லது ஒரு நூலை வைத்துக்கொண்டு கதை சொல்லத் தொடங்குகிறான்/தொடங்குகிறாள். கதையைத் தொடர்வதற்காக அவள்/அவன் பந்தினை மற்றவருக்கு (அல்லது தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு) கடத்தும்போது நூலின் தொடக்கத்தைத் தன் கையிலே வைத்திருப்பாள்/வைத்திருப்பான். இவ்வாறு இது தொடர, ஒவ்வொரு பங்கேற்பவரும் நூல்புரியினை அடுத்த மாணவருக்குக் கடத்தும்போது நூலினைக் கையிலே பிடித்திருப்பர். இதனால் கதையின் வளர்ச்சிக்கு இணையொத்ததாக ஒரு நூல் வலை (ஒன்றினூடாக வளர்த்துச் செல்லும் குறியீடு symbolisches Leitmotiv) வகுப்பு முழுவதும் பரப்பப்படுகிறது. அதே நேரத்தில், எந்த மாணவர்கள் தொடரில் இன்னும் பங்கேற்கவில்லை என்பதையும் அது காட்டுகிறது.)

---

2 இணைந்து எழுதுதல்: கவிதை, தொடர், சங்கிலி அல்லது மடிக்கதைகள்

இலக்கு

மாணவர்களின் ஆக்கத்திறனையும் மற்றும் விளையாட்டாக எளிதாக அணுகக்கூடிய "தொடக்கநிலை" முறையில் தங்கள் முதல் மொழியில் எழுதுவதில் மற்றும் கதை சொல்வதில் மகிழ்வடைவதையும் ஊக்குவிப்பதற்கு.

இணைந்து எழுதுதல்: கவிதை, தொடர், சங்கிலி அல்லது மடிக்கதைகள்

1 - 9 ஆந் தரம்

15 - 20 மணித்துளிகள்



கருவிகள்:
ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் ஒவ்வொரு தாள் வெறுமையாக அல்லது முதல் வாக்கியம் அல்லது பந்தியுடன் (ஆசிரியரின் கற்பனை அல்லது எழுத்துருக்களிலிருந்து மாணவர்கள் சேர்த்த முதலாவது வாக்கியங்களின் திரட்டிலிருந்து).
தாள் வெறுமையாயிருப்பின், மாணவர்கள் தம்முடைய முதல் வாக்கியங்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

செயல்முறை

அடிப்படை முறை பின்வருமாறு:

அ) மாணவர்கள் ஒரு கதையின் தொடக்கத்தின் ஒரு பகுதியாக ஒரு வாக்கியம் அல்லது ஒரு சிறிய பந்தியினைப் பெறுவர் அல்லது அப்படியொரு தொடக்கத்தினைத் தாங்களாகவே பக்கத்தின் மேல் பகுதியில் எழுதுவர்.

ஆ) பின்னர் அத்தாள் துண்டினை தங்கள் வலது பக்கத்திலுள்ளவர்களுக்குக் கடத்துகிறார்கள், அவர்கள் அதில் எழுதியவற்றைப் படித்துவிட்டு அக்கதையினைத் தொடர 1அல்லது 2 வாக்கியங்களைச் சேர்த்து வலது பக்கத்தில் அடுத்துள்ளவரிடம் கடத்தப்படுகிறது.

இ) எல்லாத் தாள்களும் வகுப்பு அல்லது குழு ஊடாக ஒரு தடவை சுற்றிச் செலுத்தியவுடன் பயிற்சி முடிவடைகிறது.

ஈ) நிறைவாக, கதைகள் உரக்கப் படிக்கப்படும் அல்லது சுவரில் தொங்கவிடப்படும் அல்லது உரக்கப் படித்த பின்னர் சுவரில் தொங்கவிடப்படும்.

கருத்துகள்:

- ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் ஒரு தாளாக ஒரு தொடர்வரிசையின் முடிவின் முன்னர், (பெரும்பாலும் வகுப்பு முழுவதிலும் தாள்கள் பகிர்ந்தவுடன்) இறுதியான இரண்டு அல்லது மூன்று வாக்கியங்கள் கதையினை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கல் பயனுள்ளது, ஏனெனில் அது வெறுமனே திடீரென முடிவுறாதிருப்பதற்காக.

- சிறுவர்களுடன், முதலில் கதைகளை வாயூடாக உருவாக்குவது துணைசெய்வதாயிருக்கும் (மேலே #1 தொடக்கப் பயிற்சியை பார்க்க).

I

- திருத்தங்கள் மிக அவதானமாகச் செய்யவேண்டும், அதனால் மாணவர்களுடைய ஆக்கத்திறன் நலிவடையாமலிருப்பதற்காக. எனினும், ஆசிரியர் எழுத்துருக்களை உறுதியாக மீளாய்வு செய்யவேண்டும். ஏனெனில் மாணவர்கள் இன்னும் பிழைவிடக்கூடிய, துணைவேண்டக்கூடிய பரப்புகளை அவை சான்றுகாட்டுவனவாக அமையலாம்.

மாற்றுகள்:

1. செயற்பாடு நன்றாக அறிமுகம் செய்யப்பட்டிருப்பின், முழு வகுப்பினையும் இப்பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கு ஈடாக, ஒன்று அல்லது இரண்டு குழுக்கள் மட்டத்தில் இதனை நடத்தலாம்.

2. இன்னொரு விருப்பத்தேர்வு 3 – 4 சிறுவர் குழுக்கள் ஒவ்வொரு குழுவும் ஒரு சங்கிலிக்கதை எழுதுதல். இந்நிகழ்ச்சியில், தாள்கள் ஒரு தடவைக்கு மேலாகக் குழுக்களூடாகக் கடத்தப்படும்.

3. ஒரு தாளை மட்டுமே கடத்தக்கூடிய வாய்ப்பும் உண்டு. இந்த வழியில், இயல்பான பாடத்துக்குப் பக்கநிலையாக ஒரு கதை உருவாக்கப்படும், பின்னர் அது பாடம் முடிந்தவுடன் உரத்துப் படிக்கப்படும்.



4. மடிக்கதை: அடுத்தவருக்குக் கடத்துவதற்கு முன்னர், தாளில் எழுதியவற்றைப் படிக்க முடியாதபடி முன்னர் உள்ளவற்றையன்றி கடைசி வாக்கியத்தை மட்டும் படிக்கக்கூடிய வகையில் அது மடிக்கப்படவேண்டும். இதன் விளைவாக எழுத்துரு முழுக் கதையையும் கிளர்ச்சியுடனும் வியப்புடனும் நிறைவாகவும் படிக்கக்கூடியதாக அமையும்.

5. சொல்லுக்குச் சொல்: இந்த வேறுபாடு இளம் மாணவர்களுடனான சிறு குழுக்களுக்காகும். ஒவ்வாரு வாக்கியம் வாக்கியமாகச் (1 – 2 வாக்கியங்கள்) செயற்படுவதற்கு ஈடாக ஒவ்வொரு சொல் சொல்லாகத் தொடர முடியும்: நீண்ட வெட்டுத் தாள்களுடன் தொடங்கவும் (A3 அளவு, கிடைநிலையாக 4 – 5 துண்டுகளாக வெட்டவும்) ஒவ்வொரு தாளிலும் வாக்கியங்களின் தொடக்கமாக அமையக்கூடிய ஒரு சொல்லை எழுதவும். பின்னர் ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒரு சொல்லினைச் (அல்லது ஆகக் கூடியதாக 3 சொற்கள்) சேர்த்து துண்டினை அடுத்தவருக்காக கடத்துவார், அவரும் அதையே செய்வார். நிறைவில், வாக்கியங்கள் உள்ள பல தாள் துண்டுகள் உள்ளன.

3 உரையாடல் எழுத்துரு: சொற்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் யார், எங்கே, என்ன கதைகள்

இலக்கு

பின்வரும் நான்கு கருத்துரைகள் மாணவர்களின் ஆக்கத்திறனையும் தம்முடைய முதல் மொழியில் எழுதும் மகிழ்ச்சியினையும் ஊக்குவிக்கின்றன. அவற்றின் கவர்ச்சியான, கீழ் தொடக்கநிலைப் பண்பு காரணமாக இப்பயிற்சிகள் கலப்பு வயதுக் குழுக்களுக்கு மிகவும் ஏற்றவையாக அமைகின்றன, இதனால் இளைய மாணவர்கள் வயது கூடியவர்களிடமிருந்து கற்கலாம்.

1. உரையாடல் கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
வாக்கியத் தொடக்கங்களையுடைய தாள்கள் (மாணவன்/மாணவிக்கு ஒரு தாள்)

அ) ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்கள் தொடக்குவனவாக அமைகின்றன. அவை முக்காற்புள்ளியுடன் முடியவேண்டும். எல்லா மாணவர்களும் அப்படியான தொடக்கத்தையே பெறுகின்றனர் அல்லது அப்படியான தொடக்கத்தை எழுதுகின்றனர்.

ஆ) அவர்கள் இரண்டு வாக்கியங்களுடன் கதையைத் தொடர்ந்து பின்னர் தாளினை அடுத்தவருக்குக் கடத்த அவர் கதையைத் தொடர்கிறார். இன்றியமையாதது: ஒவ்வொரு மாணவன்/மாணவியின் தொடர்ச்சி ஒரு முக்காற்புள்ளியுடனேயே முடியவேண்டும்.

எடுத்துக்காட்டு:

> முன்னொரு காலத்தில் ஒரு சிறிய எலி இருந்தது. அது தன்னுள் எண்ணியது.
>
> "நான் மட்டும் மிகப் பெரியதாகவும் வலுவுடையதாகவும் இருந்தால்"
> அப்பொழுது ஒரு பூனை அங்கு வந்தது. எலியைக் கண்டது. அது கொடூரமாகச் சிரித்துக் கூறியது:
>
> "................................."

இ) தாள்கள் எல்லா வகுப்பு அல்லது குழு ஊடாக சுற்றிச்செலுத்திய பின், அவை உரத்துப் படிக்கப்படும். இவ்வகையில் மாணவர்கள் செயற்பாடு சரியாக நிறைவேறியதா என்பதை மதிப்பிட முடியும்.

---

2. சொல்லை தெரிந்தெடுத்து எழுதும் கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

அ) ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒருதாளின் மேற்பகுதியில் ஒரு வாக்கியத்தை எழுதிவிட்டு அதனை அடுத்தவருக்குக் கடத்துவான்/கடத்துவாள்

ஆ) அடுத்த மாணவன்/மாணவி "தேர்ந்தெடுத்த" (முதல் வாக்கியத்திலிருந்து "பொறுக்கியது") குறைந்தது ஒரு சொல்லினையாவது உள்ளடக்கிய ஒரு தொடர்ந்து வரக்கூடிய வாக்கியத்தை எழுதுவான்/எழுதுவாள். இந்தச் சொல்லின் கீழ் கோடிடப்படும். பின்னர் அத்தாள் அடுத்தவருக்குக் கடத்தப்படும், அவர் முதல் மாணவரின் வாக்கியத்திலிருந்து ஏதாவதொரு சொல்லினை உட்படுத்தி நடைமுறையினை மீண்டும் செயற்படுத்துவார்.

இ) இந்நடைமுறை வகுப்பில் அல்லது குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு தாள் துண்டினைப் பெறும்வரை தொடரும்.
வேறுபாடு: சொல் பொறுக்கிய கதைகள் தனியாகவும் எழுதப்படலாம்.
இன்றியமையாதது என்னவெனில், மாணவன்/மாணவி முன்னமைத்த வாக்கியத்திலிருந்து பொறுக்கப்பட்ட ஒரு சொல் ஒவ்வொரு வாக்கியத்திலும் அமைவதை உறுதிப்படுத்தவேண்டும்.

3. விரும்பிய சொல்லுடன் கதை எழுதுதல்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

மேற்கோள் காட்டப்பட்டது:
Zopfi & Zopfi 1995, & 47
("Zettels Traum")

அ) வகுப்பு வட்டமாக அமைகிறது. மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு கதை எழுதப்படப்போவதாக ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவிக்கிறார். ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒரு சொல்லினை மனத்திலே நினைந்து தான் தேர்ந்தெடுத்த சொல்லை ஒரு தாளிலே எழுதவேண்டும்.

ஆ) குழுவின் நடுவே எல்லோரும் பார்க்கக்கூடியதாக தாள்களை பரப்பிவைத்தல்.

இ) யார் கதையைத் தொடக்க ஒரு சொல்லைப் பொறுக்குவார்? யார் இன்னொரு சொல்லுடன் அல்லது தாளுடன் தொடரவுள்ளார்? கதை சொல்லுதற்குப் பக்கநிலையில், தாள் துண்டுகள் சரியான ஒழுங்கில் வைக்கப்படும் அல்லது தொங்கவிடப்படும்.

ஈ) முடிவாக, குழு முதற்சுற்றில் ஒழுங்குபடுத்திய வரிசையில் அல்லது தமக்கு உரித்தான கருத்துகளில் மாணவர்கள் கதையை எழுதுவர். இன்றியமையாதது என்னவெனில், எல்லா தாள் துண்டுகளும் கருத்திற்கொள்ளப்பட்டுக் கதையிற் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

---

4. யார், எங்கே, என்ன வினாக்கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
சிறிய சிவப்பு, நீல, மஞ்சள் தாள் துண்டுகள் (A6 அல்லது A7)

அ) மாணவ இணையர்கள் (கலப்பு வயது விரும்பத்தக்கது) மூன்று வேறுபட்ட நிறத்தில் மூன்று சிறிய தாள்களைப் பெறுவர். ஒவ்வொரு அணியும் சிவப்புத் தாளில் ஓர் ஆளின் பெயரை அல்லது ஒரு விலங்கின் பெயரை, நீலத் தாளில் செயற்பாட்டின் இடத்தை, மஞ்சள் தாளில் என்ன நடக்கும் (இரண்டு அல்லது மூன்று சிறப்புச் சொற்களில்) எழுதும்.

ஆ) பின்னர் தாள்கள் சேர்க்கப்பட்டு மாறி மாறிக் கலக்கப்படும்.

இ) ஒவ்வொரு அணியும் வெவ்வேறு நிறங்களிலமைந்த மூன்று தாள் துண்டுகளைப் பெற்று அவற்றிலுள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதையினை ஆக்கவேண்டும்.

ஈ) நிறைவு எடுத்துரைப்பு.

---

4 சட்டகக் கதைகள், உணர்வுச்சொற் கதைகள், சார்புக்கட்டுக் கதைகள்

இலக்கு

மாணவர்களின் ஆக்கத்திறனைக் கூடுதலாக்கவும் விளையாட்டாகவும் எளிதான முறையிலும் தங்கள் முதல் மொழியில் எழுதும் மற்றும் கதை சொல்லும் மகிழ்வினை ஊக்குவிப்பதற்கும். எழுத்துருக்களை ஒப்பிடவும் மதிப்பிடவும் எளிமையான வழிகளை உருவாக்குதல்.

சட்டகக்கதைகள், உணர்வுச்சொற்கதைகள், சார்புக்கட்டுக்கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
முடியுமாயின் ஓர் அகரமுதலி அல்லது இன்னொரு நூல் அல்லது வெளியீட்டிலிருந்து சொற்கள் "பொறுக்கு" தற்கு

செயல்முறை (அடிப்படை சார்புக்கட்டு)

அ) முதற் படியில், ஐந்து சொற்கள் (பார்க்கவும்: கீழே) தேர்ந்தெடுக்கப்பட்டு பலகையில் அல்லது தாளில் எழுதப்படும்.

ஆ) இவ்வைந்து சொற்களும் கதை புனைதல் குறித்துக்காட்டுவன, இதைச் சுற்றி ஒவ்வொரு மாணவரும் கதை எழுதுவர் இவ்வைந்து சொற்களும் ஒவ்வொரு கதையிலும் பயன்படுத்தப்பட வேண்டும் (முடியுமாயின், சிறப்பித்துக்காட்டலாம்.).

இ) நிறைவாக, எழுத்துருக்கள் உரத்துப் படிக்கப்பட்டு உரையாடப்படும் மற்றும்/அல்லது சுவரில் தொங்கவிடப்படும். ஒரே "எலும்புக்கூட்டிலிருந்து" எத்தனை வேறுபட்ட "கதை உடல்கள்" வெளிப்பட்டன என்பதைக் காண மெய்சிலிர்க்கும். மாணவர்கள் எவ்வாறு ஐந்து எலும்புக்கூட்டுச் சொற்களை உள்ளடக்கி தங்கள் எழுத்துருக்குள் உள்ளடக்கி செயற்பாட்டினை வசப்படுத்தினர் என்பதைச் சொல்லாடி மதிப்பிடுவது சுவையானதாகும்.

குறிப்புகள்:

ஐந்து சொற்களைத் தேர்ந்தெடுக்கும் செயற்பாடு:

- ஆசிரியர் வகுப்பில் ஓர் அகரமுதலியை, ஒரு நூலை அல்லது ஓர் இதழை கொண்டுசெல்வார். ஐந்து மாணவர்கள் வரிசைப்படி எழுந்தமானமாக நூலைத் திறந்து ஒரு சொல்லினை எழுதுகருவியால் சுட்டிக்காட்டுவர்.
- எல்லா மாணவர்களும் சில சொற்களைத் தாள் துண்டுகளிலே குறித்துவைப்பர். இவை பின்னர் சேர்க்கப்பட்டு கலக்கப்படும் மாணவர்கள் வெவ்வேறாக ஐந்து தாள் துண்டுகளைப் பொறுக்குவர். அச் சொற்களை அடிப்படையாக வைத்து கதை உருவாக்கவேண்டும்.

மாற்றுகள்:

1. வகுப்பு முழுவதையும் பயன்படுத்துவதைவிட, மாணவர்கள் செயல்முறையை நன்கு அறிமுகமானவர்களாயிருப்பின் ஒன்று அல்லது இரண்டு நிலைக் குழுக்கள் மட்டும் பொருத்தமானவையாகும்.

2. ஐந்து சொற்களுக்கு மாறாக மூன்று அல்லது நான்கு சொற்களைத் தெரிந்தெடுக்க முடியும். ஐந்து சொற்களுக்குமேல் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படவில்லை.

3. தனிச் சொற்களை விட தொடர்கள் அல்லது சிறு வாக்கியங்கள் எலும்புக்கூடாக அல்லது சார்புக்கட்டாகப் பயன்படுத்தலாம்.

4. கிறிஸ்ரா மற்றும் எமில் Zopfi (1995, பக்49) இச்செயற்பாட்டிற்கான இன்னொரு நல்ல வேறுபாட்டினை பரிந்துரைத்துள்ளனர்: மூன்று தொடக்கம் ஐந்து பொருள்கள் அல்லது சொற்கள் இடம்பெறும் ஒரு கதையினை ஒவ்வொரு மாணவன்/மாணவியிடமிருந்து வேண்டிக்கொள்ளலாம். அவள்/அவன் ஒரு தாள் துண்டில் இச் சொற்களை எழுதி இன்னொரு மாணவருக்குக் கடத்துவர். இரண்டாவது மாணவர் வேண்டப்பட்ட குறிப்பிட்ட சொற்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதையை எழுதி முதல் மாணவருக்குப் பரிசாக திருப்பி வழங்குவார். (மாற்றுகள்: "விருப்புப் பட்டியல்கள்" ஒரு கூடைக்குள் வைக்கப்படும். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு பட்டியலை எடுத்து அதன் அடிப்படையில் ஒரு கதை எழுதுவர்.) விரிவாக்கம்: பெற்றோர்களை அல்லது குடும்ப உறுப்பினர்களை அத்தகைய பட்டியலைத் தரும்படி வேண்டலாம், பின்னர் கதையைப் பரிசாக அவர்கள் பெறுவர். (இதையும் பார்க்கவும் 3, "விருப்புச்சொற் கதைகள்").

5 பல்வகை கற்பனைக் கதைகள் எழுதுதல்

இலக்கு

மாணவர்களின் ஆக்கத்திறனைக் கூடுதலாக்கவும் விளையாட்டாகவும் எளிதான முறையிலும் தங்கள் முதல் மொழியில் எழுதும் மற்றும் கதை சொல்லும் மகிழ்வினை ஊக்குவிப்பதற்கு எழுத்துருக்களை ஒப்பிடவும் மதிப்பிடவும் எளிமையான வழிகளை உருவாக்குதல்.

1. பங்காளிக் கதைகள்

2 - 6 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

மேற்கோள் காட்டப்பட்டது: பூசெல் மற்றும் இஸ்லெர் 2006, ப. 146

அ) மாணவர்கள் இருவராக இணைந்து செயற்படுவர் (அவர்கள் வேறுபட்ட வயதுக் குழுக்களாகவும் அமையலாம்). மாணவன்/மாணவி – 1 ஒரு கதையின் தொடக்கம் பற்றி எண்ணுகிறான்/எண்ணுகிறாள் (ஒரு வாக்கியம்) அவ் வாக்கியத்தினைப் பங்காளிக்கு (மாணவன்/மாணவி – 2) எழுதுதற்குச் சொல்கிறான/சொல்கிறாள்.

ஆ) மாணவன்/மாணவி 2 வாக்கியத்தை எழுதிக்கொண்டு கதை எப்படித் தொடரும் என்பதைக் கற்பனை பண்ணுகிறான/பண்ணுகிறாள், பின்னர் தன்னுடைய பங்காளிக்கு (மாணவன்/மாணவி 1) அடுத்த வாக்கியத்தினை எழுதுதற்குச் சொல்கிறான்/சொல்கிறாள்.

இ) முடிவில், வெவ்வேறு இணையர்களும் மற்றக் குழுக்களுக்கு தங்கள் கதைகளை படித்துக்காட்டுவர். வேறுபாடு (ஒத்த திறன்களையுடைய மாணவர்கள் இணையராகலாம்): இச்செயற்பாடு அமைதியாக நடத்தப்படும். மாணவன்/மாணவி 1 ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களை எழுத (கதையின் தொடக்கம்) மாணவன்/மாணவி 2 ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுடன் தொடர்வான்/தொடர்வாள், போன்றன.

---

2. ஒரு தலைைப்பு பல எழுத்துருக்கள்

3 - 6 ஆந் தரம் | 30 - 40 மணித்துளிகள்

அ) கற்பனையைத் தூண்டுதற்காக கவர்ச்சியான ஒரு தலைப்பை ஆசிரியர் வகுப்புக்குக் கொடுக்கிறார். எடுத்துக்காட்டுகள்:
"நான் வித்தை செய்பவனானால்"/"நான் அரசனானால்/அரசியானால் (அல்லது ஜனாதிபதி/முதல் மந்திரி)"/"என் குடும்பத்தினரின் சொந்த நாட்டுக்கு வாழ்த்துகள்".

ஆ) ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் தலைப்புகளுள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஓர் எழுத்துரு எழுதுவர் அல்லது எழுத்துருவையும் அது பற்றிய விளக்கங்கள் உடனான ஒரு A3 சுவரொட்டியை உருவாக்குவர்.

இ) குழுக்களாக அல்லது முழு வகுப்புமாக எழுத்துருக்களைக் காட்சிப்படுத்தல், முன்னிலைப்படுத்தல், கருத்தாடல்.

3.விறுவிறுப்பான நூலை கூட்டாக எழுதுதல்

4 - 9 ஆந் தரம் | 60 - 120 மணித்துளிகள்

கருவிகள்: கோவை

அ) மாணவர்களுக்கான ஒப்படை: (குழுக்களாக அல்லது வகுப்புத் திட்டமாக) கூட்டாக, நீங்கள் பிறந்த நாட்டில், அல்லது தற்போது வாழுமிடத்தில், அல்லது வையகத்தில் எங்காவது அல்லது வானவெளியில் – உண்மையில் நீர் விரும்பும் எவ்விடத்திருந்தும்! பல்வகை வீரச்செயல்களைச் செய்த இரண்டு கதைமாந்தர்கள் பற்றி கூட்டாக எண்ணி கற்பனை பண்ணுக. கதைமாந்தர் பெயர்களை (ஏற்கத்தக்கதாக, ஒரு சிறுவனும் சிறுமியும்), அவர்களுடைய வயது என்ன, அவர்களின் சில சிறப்பான திறன்களை அல்லது வல்லமைகளை (எ.கா. வித்தை செய்தல், ஒளி வேகத்தில் வெளி மற்றும் காலம் ஊடாக பயணிக்கக்கூடிய வல்லமை…) உறுதிசெய்க. கூட்டாக ஒவ்வொரு கதைமாந்தருக்கும் தன்விவரம் ஒன்றை ஆக்கிக்கொள்ளவும் (பெயர், வயது, பொழுதுபோக்குகள், சிறப்பு வலிமைகள் முதலியன), அது உங்கள் வீரச்செயல் நூலின் தொடக்கத்தில் சிறப்பிடம் பெறும்.

ஆ) இன்றியமையாக் கதைமாந்தர் பட்டறிந்த ஒன்று அல்லது பல வீரச்செயல்களை ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் எழுதி விவரிப்பர்.

இ) ஒவ்வொருவராக உங்கள் வீரச்செயல் கதைகளைப் படித்து பின்னர் ஒன்றாக அவற்றைத் திரட்டிக் கட்டுக.

ஈ) மாணவர்கள் தொடர்ந்து வீரச்செயல் கதைகளை எழுதித் தொகுப்பர். கால ஓட்டத்தில் வகுப்பு தங்களுக்கான ஒரு வீரச்செயல் நூலை உண்டாக்கிவிடுவர்.

4. வேறு எழுத்துருத் தொகுதிகளைக் கூட்டாக உருவாக்கல்

3 - 9 ஆந் தரம் | 30 - 120 மணித்துளிகள்

கருவிகள்:
கோவை

அ) வீரச்செயல் கதை நூலை உருவாக்குதல் போல (பார்க்கவும் மேலே) வேறு தொகுதிகளை உருவாக்கலாம். பொதுவாக, இது முதலில் கருப்பொருள் அல்லது தலைப்பினை உறுதிசெய்துகொண்டு ஒரு தொகுதிக் கோப்புக்கு முன்னேற்பாட்டுடன் செய்யப்படும். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒன்று அல்லது பல எழுத்துருக்களை எழுதி தொகுதிக்குப் பங்களிப்பர். இது வழக்கமான கற்கைகளுக்கு இணையொத்ததாக (தன்னிச்சையான பங்களிப்புக்கான அல்லது வீட்டுவேலை ஒப்படைகளாக) இடம்பெறும்.

அப்படிப்பட்ட தொகுதிகளுக்கான தலைப்புகள்:

- வேடிக்கையான நகையூட்டும் கிளைக்கதைகள்
- பிறந்த நாட்டுக் கதைகள்/வீரச்செயல்கள்
- விலங்குக் கதைகள்
- செய்முறைகள்
- கைவினைச் செயற்பாடுகளுக்கான அறிவுறுத்தல்

---

6 மொழியில் சிறிய கலைச்சுவையுள்ள மற்றும் ஆக்கச் செயற்பாடுகள்

இலக்கு எளிமையான ஆக்கத்திறனுள்ள செயற்பாடுகளூடாக எழுதும் மகிழ்வினைக் கூட்டுதல், கலப்பு வயது அணிகளுடன் இச்செயற்பாடு நன்கு அமையும்.

1. ஒருவர் தன்பெயருக்கான எழுத்துப் படங்கள்.

2 - 9 ஆந் தரம் | 15 மணித்துளிகள்

சிரிப்பு
வடிவம்
மனிதன்
திண்ணை

அ) ஒரு துண்டுத் தாளில் (A3 அல்லது A4 இல் தடிப்பாக இருப்பது விரும்பத்தக்கது) ஒவ்வொரு மாணவனும் அல்லது மாணவியும் தன் முதற் பெயரை (அல்லது முதல் மற்றும் கடைசிப் பெயரை) செங்குத்தாக ஓர் எழுத்தை மற்ற எழுத்துக்குக் கீழிட்டு எழுதுவர். ஒவ்வொரு எழுத்தும் நன்றாக ஒப்பனை செய்யப்பட்டு வண்ணமிடப்படும்.

ஆ) செங்குத்தாக இடப்பட்டுள்ள எழுத்துக்களுள் ஓரெழுத்தினை தொடக்கமாகக் கொண்டு ஓர் சொல் ஆக்கப்படுகிறது. முடியுமாயின் அச்சொல் குறிப்பிட்ட பிள்ளையுடன் தொடர்புற்றதாயிருக்கவேண்டும் (எ.கா. ஒரு பண்பு, அல்லது பெயர், மாணவன்/மாணவி விரும்புகின்ற ஏதாவது ஒன்றைப் புலப்படுத்தல்).

---

2. சொல் ஏணிகள்

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

குறிப்பு:
பயன்படுத்தும் மொழியைப் பொறுத்து இந்த பயிற்சி கடினமாயிருக்கலாம். கட்டாயம் முன்கூட்டியே முயற்சிசெய்து பார்க்கவும்

வி	டு	வி
க	சி	க
ட	-	ட
க	ற்	க
வி	ரை	வி

அ) ஒவ்வொரு மாணவன்/மாணவி அல்லது இணையர் தாள் (A4) ஒன்றினைப் பெற்று, 4 – 7 வரையான எழுத்துகள் கொண்ட சொல் பற்றி எண்ணுவர். இச்சொல் தாளின் இடது பக்கத்தில் மேலிருந்து கீழாக செங்குத்தாக எழுதப்படும். பின்னர் அதே சொல் வலது பக்க விளிம்பில் எழுதப்படும் ஆனால் கீழிருந்து மேலாக.

ஆ) எழுத்துகளுக்கு இடையேயுள்ள இடைவெளிகளை பயன்படுத்தும் மொழியைப் பொறுத்து தாளின் இரு பக்கங்களிலுமுள்ள தொடக்கமாகவும் முடிவதாகவுமுள்ள எழுத்துகளாலான சொற்களால் நிரப்பவேண்டும்.

3. அ, ஆ, இ கதைகள்

2 - 9 ஆந் தும் | 30 மணித்துளிகள்

மாற்று 1:
ஒரு பெரிய தாளில் (A3 அல்லது A2) நெடுங்கணக்கைத் தெளிவாக எழுதி நிறந்தீட்டவும் (ஒன்றின் பின் ஒன்றாக செங்குத்தாக, தேவையெனில் ஒவ்வொரு எழுத்துக்குப் பின் எழுதக்கூடியதாக இரு பத்திகளாக எழுதவும்) பின்னர், ஒரு குறிப்பிட்ட எழுத்தினைத் தொடக்கமாகக்கொண்டு ஒரு சொல் அல்லது ஒரு சிறிய வாக்கியம் எழுதுக.

மாற்று 2:
மாணவர் குழுக்கள் 2 – 3 நீண்ட தாள் துண்டுகளை (A3 அளவு, செங்குத்தாக நான்கு கீற்றுகளாக வெட்டவும்), பசையிட்டு அவற்றை ஒட்டி ஒரு நீண்ட கீற்றாக அமைத்து, பின்னர் அவர்கள் (பொருளற்ற) வாக்கியங்களை அல்லது ஒரு கதையினை ஆக்குவர், வாக்கியத்தின் ஒவ்வொரு சொல்லும் நெடுங்கணக்கின் ஒழுங்குமுறையில் அமையும் எழுத்தைக்கொண்டு தொடங்கும்! எ-டு: அன்பான ஆசை இளமகளே ஈன்ற உன்.

---

4. சுய உருவப்படம், சுயவிவரம்

2 - 9 ஆந் தும் | 45 மணித்துளிகள்

அ) ஆசிரியரும் மாணவரும் ஓர் உருவப்படத்தில் எவற்றை உள்ளடக்கவேண்டும் என்பது பற்றி உரையாடல்: பெயர், முதற்பெயர், வயது, பொழுது போக்குகள், பிடித்த உணவு, பிடித்த இசை, பிடித்தபாடம், விரும்பிய நூல், ஆசிரியர் பிறந்த நாடு அவரின் முகவரி முதலானவை.

ஆ) பின்னர் ஒரு தாள் துண்டில் (A3 அல்லது A4, தடித்த தாள் விரும்பத்தக்கது) தங்களுடைய தன்னுருவப் படத்தை ஆக்கிக்கொள்வர். இதனை ஒரு வரைவு, ஓர் ஒளிப்படம், படங்கள் மற்றும் வேறு பொருள்கள் ஆகியவற்றால் அழகுசெய்யலாம்.

இ) நிறைவாக, சுவரொட்டிகள் வகுப்புக்கு வழங்கப்படுகின்றன. மாணவர்கள் எந்தச் சுவரொட்டியில் குறிப்பாக எது சிறப்பாக அமைந்துள்ளது என்பதை தீர்மானிப்பர்.

---

5. ஒன்று சேர்ந்து செயற்படல்: கதை மரம் அல்லது விருப்பு மரம்

2 - 9 ஆந் தும் | 70 மணித்துளிகள்

கருவிகள்:
பெரிய தாள் A1
பச்சைத் தாள்கள் A4

அ) ஒரு பெரிய தாள் துண்டில் (தாள் அல்லது 2 flipchart பக்கங்கள்) மாணவர்கள் தொகையான கொப்புகளும் கிளைகளுமுள்ள ஒரு பெரிய மரத்தைக் கீறுவர். மேலும் பல இலைகளைச் சேர்ப்பதற்குப் போதுமான இடம் இருக்கவேண்டும்.

ஆ) ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் பச்சைத்தாள் துண்டினைப் பெறுவர் அதனை மரத்துக்கு இரண்டு இலைகளாக வெட்டுவர். மாணவர்கள் ஒவ்வொரு இலையிலும் ஒரு சிறு கதையினை அல்லது தமது விருப்பினை எழுதுவர் (அந்த விருப்பினை மரத்தில் கட்டி தொங்கவிடலாம்).

இ) இலைகள் மரத்தில் பொருத்தப்படுகின்றன மாணவர்கள் அவற்றைத் தம்முள் படித்துக்கொள்கின்றனர்.



7 மொழி விடுகதைகள்

இலக்கு

கவர்ச்சியுள்ள எழுத்து ஒப்படைகளை எழுதவும் அவற்றைப் பின்னர் வகுப்புகளில் புதிர்களாகவும் விடுகதைகளாகவும் பயன்படுத்தும் செயல்நோக்கினை வளர்ப்பதற்கு

1. விடை வாக்கியங்கள்

1 - 3 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

அ) ஆசிரியர் வகுப்புடன் சொல் விளையாட்டை மேற்கொண்டுள்ளார். இரண்டு எடுத்துக்காட்டுகள் பலகையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் விடைகள் மறைந்துள்ளன. எடுத்துக்காட்டு: கரைவேட்டி தைத்து காசுக்கு விற்றான். விடை: "கதைகாவி". மாணவர்கள் வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு சொல்லின் முதலெழுத்துகளை ஒன்றாகச் சேர்க்குமிடத்து மறுமொழிச் சொல்லைக் காணலாம் என்னும் விதியினை மாணவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

ஆ) மாணவர்கள் ஒன்றாக 1 – 2 வாக்கியங்களைக் கொண்டு தனியாக அல்லது இணையாக செயற்படுகின்றனர். அவர்கள் தாள் துண்டுகளைப் பெறுகின்றனர். அவற்றில் அவர்கள் ஒரு பக்கத்தில் புதிர் வாக்கியத்தை எழுதி மறு பக்கத்தில் மறுமொழியை எழுதுவர்.

இ) முடித்துவைக்க, தாள் துண்டுகள் இணையர்களுக்கிடையே பரிமாற்றம் செய்ய மாணவர்கள் புதிர்களை விடுவிக்கின்றனர்.

---

2. விவரணப் புதிர்

4 - 9 ஆந் தரம் | 40 மணித்துளிகள்

கருவிகள்:
படங்களை வெட்டி எடுக்கக் கூடிய இதழ்கள்

அ) மாணவர்கள் வகுப்புக்குப் பொருள்கள் (கம்பளிக் காலுறைகள்) கொண்டுவருகின்றனர். பின்னர் அப்பொருளின் படத்தைக் கீறுகின்றனர் அல்லது மாணவர்களோ ஆசிரியரோ வழங்கிய இதழ்களிலிருந்து ஒரு படத்தையோ அல்லது ஒளிப்படத்தையோ தெரிவுசெய்வர். ஒரு தாள் துண்டில் பொருள், கீறியபடம், அல்லது படம்/ஒளிப்படம் பின்னர் தாள் துண்டில் ஒட்டப்படும்.

ஆ) மாணவர்கள் தங்கள் பொருளை அல்லது படத்தை, பொருளின் பெயரையோ படத்தின் அல்லது ஒளிப்படத்தின் ஆளையோ குறிப்பிடாமல் சில வாக்கியங்களில் விவரிப்பர். அதற்குப் பதிலீடாக அவர்கள் அதனை "என் உருப்படி" அல்லது "என் படம்" (எடுத்துக்காட்டு: "என் பொருள் சூடானது கம்பளியினால் ஆக்கப்பட்டது. குளிர் காலத்தில் உங்கள் கால்களைச் சூடாகவைத்திருக்கும்" (விடை: கம்பளிக் காலுறை). என் படம் உயர் மலையிலிருந்து வீழும் நீரைக் காட்டுகின்றது" (விடை: நீர்வீழ்ச்சி).

இ) படங்கள் வகுப்பறையின் இடது பக்கத்தில் தொங்கவிடப்படுகின்றன எழுத்துருக்கள் வலப்பக்கத்தில் இடப்படுகின்றன. ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு எண்ணும், எழுத்துருக்கு, எழுத்தும் ஒதுக்குகின்றனர்.

ஈ) செயற்பாடு: எழுத்துருக்களைப் படித்து பொருந்தும் படத்தை அல்லது பொருளை கண்டறிய முயற்சிக்கவும். விடைகளை எழுதுக (எ-டு: 2 – D, 4 – B).

---

3. குறுக்கெழுத்துப் புதிர்களை உருவாக்கல்

5 - 9 ஆந் தரம் | 60 மணித்துளிகள்

கருவிகள்:
குறுக்கெழுத்துப் புதிர்கள்

ஆ) இந்நெறிமுறையைப் பின்பற்றி, மாணவர்கள் தம் குறுக்கெழுத்துகளை ஆக்கி புதிர்களைத் தீர்க்கத் தம்முள் பரிமாற்றம் செய்வர். குறுக்கெழுத்துப் புதிர்கள் குறிப்புக்காட்டி: இலத்தீன் நெடுங்கணக்கை அடிப்படையாகக்கொண்டு இணையத்தில் கிடைக்கும் பொருத்தமான கருவிகளைப் பயன்படுத்தி குறுக்கெழுத்துப் புதிர்களை எளிதாக ஆக்கலாம். எடுத்துக்காட்டு: பார்க்கவும் http://www.xwords-generator.de அல்லது http://www.armoredpenguin.com/crossword

அ) ஆசிரியரும் மாணவர்களும் கூட்டாக குறுக்கெழுத்துப் புதிர்களை முதல் மொழியில் அல்லது இரண்டாம் மொழியில் பகுப்பாய்வு செய்வதுடன் தாமே ஒரு குறுக்கெழுத்துப் புதிரை ஆக்குதற்குரிய நடைமுறைகள் அல்லது "செய்முறைகள்" பற்றிக் கலந்துரையாடல்.

4.பொடிவைத்த கதைகள், சம்பவங்கள், "பொய்க் கதைகள்" கூறுதல்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
கதைகள் அல்லது மாதிரிகளாக வேறு எழுத்துருக்கள்

அடிப்படை முறை வருமாறு: ஒரு மாதிரி (கதை அல்லது உண்மை எழுத்துரு) வகுப்புக்குக் கூறப்படும் (முதலில் சரியான கருத்துப்பாங்கு) பின்னர் சில விவரங்களை மாற்றி திரும்பவும் கூறப்படும். என்ன மாற்றங்கள் செய்யப்பட்டன என்பதை முடிவு செய்தல் கேட்பவர்கள் அல்லது படிப்பவர்களுடைய பணியாகும்.

மாற்றுகள்:

- தொடக்கநிலை வாய்மொழிப் பயிற்சி: ஆசிரியர் ஒரு கதையை இரு தடவை வாசிக்கிறார். இரண்டாவது தடவையின்போது சில விவரங்கள் மாற்றப்படுகின்றன. மாணவர்கள் மிக உன்னிப்பாகக் கேட்டு கதையிலுள்ள தொடர்பின்மைகளை உறுதிப்படுத்தி எழுதவேண்டும்.
- மாணவர்கள் மிக அறியப்பட்ட கதையின் (அல்லது அவர்களின் பிறந்தநாட்டு வரலாறு பண்பாட்டிலிருந்து ஒரு தலைப்புத் தொடர்பான ஓர் எழுத்துரு, எ.கா. ஓர் ஆளுமை மிக்கவர், வரலாற்று நிகழ்வு, அல்லது ஒரு பட்டினம்) முடிந்த அளவு மிகத் துல்லியமான மீள் எடுத்துரைப்பினை தாமே எழுதுவர். இவ்வெழுத்துருவில், அவர்கள் வேண்டுமென்றே 2 – 3 தொடர்பின்மைகளை புகுத்திவிடுகின்றனர் (weave) முடிவாக, எழுத்துருக்கள் உரத்து படிக்கப்பட, மற்றைய மாணவர்கள் தொடர்பின்மைகளை அறியவேண்டும்.
- வேறு மாற்றுகளுக்கு, பார்க்க #18.3.

எழுத்துருவாக்கத்தின் பல்வேறு படிநிலைகளுக்கான உத்திகளும் மதிநுட்பங்களும்

II

8 எழுத்துருவின் முற்கட்டமைப்புக்கு உத்திகளை அறிதல்

இலக்கு

எழுதுதற்கு முன்னர் மாணவர்கள் கருத்துகளை இயைபுள்ள விதத்தில் மேம்படுத்தவும் வரிசைப்படுத்தவும் துணைசெய்தல் (மொழித் தேவைகளால் இன்னும் வில்லங்கமின்றி). ஆசிரியர் செயன்முறையினை வகுப்புக்குக் கூறி கவனமாக விளக்குதல் பெருமளவு இன்றியமையாததாகும்..

கருத்துகளை அறியவும் வரிசைப்படுத்தவும் மூன்று செயன்முறைகள்:

---

1. விளக்கப்படமுறை

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
A3 அல்லது A4 தாள்

இந்நெறிமுறை கற்பனையுடன் இயைபுற்ற எழுத்துருக்களுக்கான கருத்துகளை அறியவிரும்பும் முயற்சிக்கு நன்கு துணை செய்யும். எ.கா. ஒரு கதைக்கு அல்லது கற்பனை எழுத்துருவுக்கு. ஆசிரியர் மேல் உள்ளதுபோல் ஓர் எடுத்துக்காட்டினைப் பின்வரும் அறிவுறுத்தல்களுடன் கொடுக்கிறார்: A4 அல்லது A3 தாள் ஒன்றினைப் பக்கவாட்டாக எடுக்கவும். நடுப்பக்கத்தில் நீர் எழுதவுள்ள தலைப்பு அல்லது பொருளினை எழுதுக. தலைப்பினைச் சுற்றி வட்டமிடுக. பின்னர் அதுதொடர்பான சொற்களை சுற்றி எழுதி அதனையும் வட்டமிடுக. மறுபடியும் எழுதிய சொற்களுடன் தொடர்பான சொற்களை எழுதி அதனையும் வட்டமிடுக. பின்னர் கோட்டினால் இணைக்கவும். முதல்மொழியில் கொத்தினைச் செய்வது கடுமை வாய்ந்ததாக இருப்பின், பள்ளி மொழியினைப் பயன்படுத்தலாம். 5 மணித்துளிகளின் பின் உங்கள் கருத்துத் தொகுப்பினைப் பார்த்து உங்கள் எழுத்துருவில் பயன்படுத்தப் போகின்றவற்றை நிறத்திலும் எண்ணிலும் அவை என்ன ஒழுங்கில் பயன்படுத்தப்படும் என்பதைக் குறிக்குக.



2. மன வரைபடம்

4 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
A3 அல்லது A4 தாள்

இந்த அணுகுமுறை குறிப்பாக உண்மை எழுத்துருக்களை கட்டமைப்பதற்குப் பொருத்தமானது. தொடர்பான கருத்துகளையுடைய சிறுகிளைகள் பெருங்கிளைகளில் சேர்க்கப்படுகின்றன. முதல்மொழியில் எழுதுவதில் சிக்கல்கள் இருப்பின், பள்ளிமொழியைப் பயன்படுத்தலாம். சில மணித்துளிகளின் பின், உள்ளத்து வரைபடத்தை மீள்பார்வை செய்து, எண்களையும் நிறங்களையும் பயன்படுத்தி துணைத்தலைப்புகள் அல்லது பகுதிகளின் வரிசையினைக் குறித்துக்கொள்க, எ-டு. நீர் முதலில் எதனைக் குறிப்பிடப்போகிறீர்? பின்னர் எவை கையாளப்படும்?



---

3. பிளேஸ்மற் பணித்தாள்

4 - 9 ஆந் தரம் | 25 மணித்துளிகள்

கருவிகள்:
A3 அல்லது A4 தாள்

மூன்று அல்லது நான்கு மாணவர்கள் கொண்ட சிறு குழுவினர்க்கு இது நல்ல அணுகுமுறையாகும். எடுத்துக்காட்டாக, ஓர் எடுத்துரைப்புக்கு, அல்லது இன்னொரு குழுநிலை எழுத்துரு எழுதும் ஒப்படைக்கு கருத்துகள் தேடும் வேளையில்.
அறிவுறுத்தல்கள்: 3 – 4 மாணவக் குழுக்கள், மேசைகளில் இருக்க, A3 தாள் ஒன்றினைப் பெறுவர். கீழே காணப்படுவதுபோல் தாள் சிறு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. தலைப்பு, அல்லது பொருள், நடுப்பகுதியில் எழுதப்படுகின்றன

5 மணித்துளிகள் வரை ஒவ்வொரு மாணவரும் தம்முடைய தாளின் பகுதியில் குறிப்புகளைக் குறிப்பர், பொதுத் தலைப்புத் தொடர்பான கருத்துகளையும் இன்றியமையாக் கூறுகளையும் எழுதுவர். பின்னர் அவர்கள் தங்கள் கருத்துகளை தம் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பர், நிறங்களையும்





எண்களையும் பயன்படுத்தி, தம் எழுத்துருவுக்கு அல்லது எடுத்துரைப்புக்கு தாம் பயன்படுத்த விரும்பிய எல்லாவற்றையும் குறிப்பர். அடுத்த நிலையில், இன்னொரு தாள் துண்டில் தம்முடைய எடுத்துரைப்புக்கான அல்லது எழுத்துருவுக்கான பல்வேறு இயல்களின் அல்லது முதன்மைக் கருத்துகளின் ஒழுங்கினை எழுதுவர். இவ்வகையில், எழுத்துருவின் ஏனைய பகுதியின் வளர்ச்சிக்கான திடமான கட்டமைப்பினை குழுக்கள் நிறுவியுள்ளன.

II

9 எழுத்துருவின் கட்டமைப்பைத் திட்டமிடுதல்

(#16, எழுத்துருக் கட்டமைப்புக்கான மதியுரைகளையும் பார்க்க)

இலக்கு

மாணவர்கள் எழுத்துருவை மேலும் சிறப்பாகக் கட்டமைக்க (முன்னுரை/உடல்/முடிவு என காலவரிசைப்படி சரியான ஒழுங்கில் பிரிக்கப்பட்டவை) உதவும் இரண்டு உத்திகளைக் கற்கின்றனர். இவை பகுதி #8 இல் குறிப்பிடப்பட்ட உத்திகளை (கொத்துகள், மனவரைபடங்கள், இடுநிலைப்பாய்கள்) குறைநிரப்புகின்றன.

1. கால வரிசைப்படி செயற்படல்

2 - 7 ஆந் தரம் | 20 மணித்துளிகள்



அ) ஆசிரியர் ஒரு கால வரையறையை (ஒரு நீண்ட அம்பு, மேலே பார்க்கவும்) பலகையில் தீட்டுகிறார் (அல்லது திட்டமிடுகிறார்), ஒரு எழுத்துருவை எப்படித் தெளிவாகக் கட்டமைக்க முடியும் என்பதை விளங்கிக்கொள்ள அது துணைசெய்யும் என்பதை வகுப்புக்கு விளக்குகிறார்.

ஆ) காட்சிப்படுத்தல் தேவைகளுக்கும் தெளிவுக்கும், வகுப்பு ஒரு விரிவான எடுத்துக்காட்டை நோக்கும். தெளிவான நிகழ்வுகளைக் கொண்ட ஒரு கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, "என் கோடை விடுமுறை", "சென்ற கிழமை முடிவு", "அன்னை திரேசாவின் வாழ்வு". விவரண அல்லது பிரதிபலிக்கும் தலைப்புகளான "அமைதி பற்றிய என் எண்ணங்கள்" முதலாயின இந்நெறிமுறைக்கு ஏற்றனவல்ல. (பின்வரும் மூன்றுபகுதி திட்டத்தினைப் பார்க்கவும்).

இ) ஆசிரியர் ஓர் எழுத்துருவின் வேறுபட்ட தொடர் படிகளைக் கட்டமைக்கவும் அடையாளப்படுத்தவும் மிகவும் பொருத்தமான சொற்களையும் தொடர்களையும் முடிவு செய்வதற்குப் வகுப்புடன் செயற்படுவர். "தொடக்கத்தில், பின்னர், அதன் பின்னர், பிறகு, அடுத்தநாள், நிறைவாக, முடிவில் முதலாயவை" இப்பயிற்சியும் பாரம்பரியமொழியின் பொருத்தமான சொற்களஞ்சியத்தைக் கட்டியமைக்க மாணவர்களுக்குத் துணைசெய்யப் பணியாற்றுகிறது.

ஈ) மாணவர்கள் எளிமையான செயல் சார்ந்த ஒரு தலைப்பையும் ("ஒவ்வொரு நாளைய என் நடைமுறை ஒழுங்கு") A3 தாளையும் பெறுவர். அதில் அவர்கள் ஒரு கால வரிசையை வரைந்து செயற்பாட்டின் பல்வகைப் பகுதிகளை எழுதுவர். பின்னர் முழு வகுப்பினாலும் பக்கங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்படும்.

உ) நிறைவாக, மாணவர்கள் தம் எழுத்துருவை உரைநடையில் எழுதுவர், அதன் மூலம் காலவரிசை நிலைகளில் தம்மைச் சார்த்திக்கொள்கின்றனர்.

2. ஓர் எழுத்துருவைக் கட்டமைக்கவும் மேம்படுத்தவும் ஒரு திட்டத்துடன் செயற்படுதல்

4 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

அ) ஆசிரியர் முதலில் எல்லா எழுத்துருக்களும் மூன்று பகுதிகளாக கட்டமைக்கப்படுகின்றன என்பதை விளக்குவார்: முன்னுரை / கண்ணோட்டம் தலையாய உடல் (உண்மையான பொருள்) – முடிவு/திரட்டு / கண்ணோட்டம். இது மாணவர்களுக்கு ஒன்று அல்லது பல எழுத்துரு எடுத்துக்காட்டுகளுடன், முடியுமாயின் (செய்தித்தாள் கட்டுரை, சிறு இலக்கிய எழுத்துருக்கள், மாணவர்களது பின்பற்றத்தக்க வேறு எழுத்து) விளக்கப்படவேண்டும்.

ஆ) ஆசிரியர் பலகையில் கட்டமைப்பினை எழுதுகிறார் (அல்லது ஒளிப்படக்காட்டியூடாகக் காட்டல்) (எடுத்துக்காட்டினைப் பார்க்கவும்) முழு வகுப்புடன் ஒரு கருப்பொருள் அதன் திட்டமிடல் நிலையுடன் பயிற்சி செய்யப்படுகின்றது. தேர்ந்தெடுக்கக்கூடிய பொருத்தமான தலைப்புகள்: எனது பெற்றோரின் தோன்றிடம், …க்கான பயணம் பற்றிய அறிக்கை, "இரு பண்பாடுகள் மற்றும் மொழிகளினிடையே வாழ்வு" பற்றிய என் எண்ணங்கள்.

இ) மாணவர்கள் தாளும் ஒரு தலைப்பும் (பார்க்கவும் மேலே) பெறுகின்றனர் அல்லது தங்களுக்கான தலைப்பினைத் தெரிவுசெய்கின்றனர். அவர்கள் தாளை மூன்று பரப்புகளுக்காகப் பிரிக்கின்றனர்: அறிமுகம் – பெரும்பகுதி – நிறைவு. பின்னர் அவர்கள் பொருத்தமான பரப்புகளுள் சிறப்புச் சொற்களை எழுதுவர். மாணவர்கள் முதலில் #8 இல் படித்த (கொத்து, மன வரைபடம், இடுநிலைப்பாய்) செயல்படு முறைகளுள் ஒன்றினைப் பயன்படுத்துதல் ஏற்றதாயிருக்கும், அது எண்ணக்கருக்களை உருவாக்க அவர்களுக்கு துணைசெய்யும்.

ஈ) தங்களுடைய எழுத்துருவினை கட்டமைக்கவும் திட்டமிடவும் திட்டத்தினைப் பயன்படுத்தியதில் ஏற்பட்ட பட்டறிவுகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடல். எப்படி அது தொடரும்? முடியுமேயானால், அடுத்து எழுத்து வேலையை நிறைவுசெய்யலாம்.



II

10 எழுத்துருவை தலைப்பு, உபதலைப்பு, பந்திகளாகப் பிரித்து, வடிவமைத்து எழுதுதல்

இலக்கு

மாணவர்கள் தெளிவான பொருத்தமான தலைப்புகளை எப்படி எழுதவேண்டும் என்பதையும் தம்முடைய எழுத்தில் தெளிவுண்டாக பந்திகளை எவ்வாறு உருவாக்கவேண்டும் என்பதையும் கற்றுக்கொள்ளவேண்டும். தலைப்புகள், துணைத்தலைப்புகள், பந்திகள் ஓர் எழுத்துருவின் கவர்ச்சிக்கு பங்களிக்கின்றன, வாசிப்பினை மிக வைக்கின்றன. விளக்கப் படங்களும் எடுத்துரைப்பும் (அமைப்புத்திட்டம்) அதே நோக்குக்குப் பணியாற்றுகின்றன, மாணவர்கள் இக்கூறுகளுடனான பட்டறிவினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

1. துல்லியமான கவரக்கூடிய தலைப்புகளை உருவாக்குதல்: கற்பித்தல் யோசனைகள்

3 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
படநூற் கதைகள், செய்தித்தாள் அறிக்கைகள் அல்லது அதே போன்றது

மாற்றுகள்:

- ஆசிரியர் வகுப்புக்கு ஒரு கதையை வாசித்து பின்னர் அவ்வெழுத்துருவுக்கு எத்தகைய தலைப்பு பொருத்தமானதாக இருக்குமென வினாவுகிறார். ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒன்று அல்லது இரண்டு தலைப்புகளைப் பரிந்துரைத்து ஒரு தாள் துண்டில் எழுதுகின்றான்/எழுதுகின்றாள். பரிந்துரைகள் பின்னர் கலந்துரையாடப்படுகின்றன: எத்தலைப்புகள் கவர்ச்சியானவை, ஏன்? எவை சலிப்பூட்டுகின்றன, ஏன்?
- ஆசிரியர் பின்னர் அவர்களுடைய தாய்நாட்டில் (அதன் தலைநகர் அல்லது இயற்கை அழகுடைய பகுதிகள் முதலியன) சுற்றுலாவுக்கான சுவரொட்டி அல்லது துண்டுப்பிரசுரம் ஒன்றினை ஆக்குவதற்கான ஒரு (போலியான) திட்டக்கருவினை வழங்குகிறார். இச்சுவரொட்டிக்கான கவர்ச்சியுள்ள தலைப்பு அல்லது (வலம் பார்க்கவும்) கண்ணைக்கவரும் முழக்கம் என்னவாயிருக்கலாம்? (இச்செயற்பாட்டை முடிப்பதற்கு நேரம் இருப்பின், எண்ணக்கருத்தை செயற்படுத்துவது இயல்பானதாகும்.)
- ஆசிரியர் தலைப்பு எதுவுமின்றி ஒரு படக்கதையை, ஒரு செய்தித்தாள் அறிக்கையை, அல்லது ஒரு சிறுகதையை வகுப்பில் பகிர்ந்தளிக்கிறார். மாணவர்கள் தனியாக அல்லது இணையாக கதைக்குத் தெளிவான கவர்ச்சியான தலைப்பினைக் கருத்தில்கொள்ள வேண்டும். பரிந்துரைகள் பின்னர் தாள் துண்டுகளில் எழுதி கலந்துரையாடப்படும்.
- வினா பற்றிய கலந்துரையாடல்கள் (முழு வகுப்பும் அல்லது குழுநிலையில்): தரப்பட்ட எந்தத் தலைப்பில் நீர் ஓர் எழுத்துருவை எழுத விரும்புகிறீர்? இருக்கும் தலைப்புகளையும் பொருள்களையும் எண்ணிப் பார்க்கவும்! பரிந்துரைகள் பின்னர் கலந்துரையாடப்பட்டு, தொகுக்கப்பட்டு, முடியுமாயின், பயிற்சிசெய்யவேண்டும்.
- 4 ஆம் பிரிவிலிருந்து: ஆசிரியர் (முடியுமாயின், வகுப்புடன்), எடுத்துக்காட்டான கவர்ச்சியுள்ள நூல் தலைப்புகளை ஒருங்குசேர்க்கிறார், சில சலிப்புத் தரும் தலைப்புகளைக் கண்டுபிடிக்கிறார், எடுத்துக்காட்டாக ("சுசி, அழகான பெண்", "மலர்க்கவிதைகள்"). தலைப்புகள் கலந்துரையாடப்பட்டு மாணவர்கள் ஒரு தலைப்பு எப்படி சலிப்புத் தருவதாக அல்லது உற்சாகமானதாக அமைகிறது என்பதை உறுதிசெய்ய முயல்கின்றனர்.

2. ஓர் எழுத்துருவை தலைப்புகளுடனும் பந்திகளுடனும் கட்டமைத்தல்

3 - 9 ஆந் தரம்

30 மணித்துளிகள்

கருவிகள்:
முன்னேற்பாட்டு
எழுத்துருக்கள்
(வலம் பார்க்கவும்)

மாற்றுகள்:

- ஆசிரியர் இரு எழுத்துருக்களை தயார்ப்படுத்தி அவை ஒளிப்பிரதிகளாக்கப்படுகின்றன. (ஒவ்வொன்றும் A4 அளவு): எழுத்துரு அ தலைப்பும் துணைத்தலைப்பும் இல்லாதது, பந்திகளும் இல்லை (அல்லது அரிதாக ஏதாவது). எழுத்துரு ஆ (எ-டு. ஒரு நாடு அல்லது ஒரு விலங்கு பற்றிய உண்மையான எழுத்துரு) தெளிவான தலைப்பு, பந்திகள், துணைத் தலைப்புகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.
  கலந்துரையாடல்: ஏன் எழுத்துரு ஆ படிப்பதற்கு எளிதாயுள்ளது? துணைத்தலைப்பு பந்திகளின் தேவை என்ன? இதனை இன்னும் எப்படி மேம்படுத்தலாம்? (எ-டு.விளக்கப்படங்களுடன்)



  ஆசிரியர் படக்கதை (4 – 5 படங்கள்) ஒன்றினைப் பகிர்கிறார். செயற்பாடு: இணையராக, மாணவர்கள் முழுக் கதைக்குமான கவர்ச்சியான தலைப்புடன் ஒவ்வொரு படத்துக்குமான துணைத்தலைப்பினையும் கண்டுபிடிக்கவேண்டும்.

- ஆசிரியர் எழுந்தமானமாக பந்திகளோ தலைப்புகளோ இல்லாத ஓர் எழுத்துருவினை (ஆகக்கூடியது: 2/3 பக்கம்) பகிர்கிறார். செயற்பாடு: எழுத்துருவுக்கு ஒரு தலைப்பினைக் கண்டுபிடித்தல், அதனைப் பந்திகளாக ஒழுங்குசெய்தலும் துணைத் தலைப்புகளை உருவாக்கலும்!

- கீற்றுகளாக வெட்டப்பட்ட ஒரு கதையினை (ஒவ்வொரு கீற்றுத் தாளிலும் ஒரு பந்தியாக) ஆசிரியர் பகிர்கிறார். செயற்பாடு: சரியான தொடர்வரிசையை அறிந்து கதை வளர்ச்சியினை சரியான ஒழுங்கில் இட்டு, துணைத் தலைப்புகளை முடிவுசெய்யவும். பின்னர் கீற்றுகளை ஒரு தாள் துண்டிலே ஒட்டி அதில் தலைப்புகளையும் துணைத்தலைப்புகளையும் எழுதுக!

- ஆசிரியர் வகுப்புக்கு ஒரு தலைப்பை வழங்குகிறார், எ-டு. "எங்கள் தலைநகரம் பற்றி ஓர் எடுத்துரைப்பு", "எங்கள் பண்பாட்டின் இன்றியமையாத ஓர் ஆளுமையாளர்" அல்லது "இரு பண்பாடுகளில் என் வாழ்வு". செயற்பாடு: ஓர் எழுத்துரு எழுதவேண்டுமாயின், அல்லது தலைப்புகளுள் ஒன்று பற்றி எடுத்துரைப்பு வழங்குவதாயின், எத்தகைய தலைப்பினையும் துணைத்தலைப்புகளையும் தேர்ந்தெடுப்பீர்?

- செயற்பாடு (முந்தைய கருத்துரையுடன் தொடர்புற்றதாக) எழுத்துரு ஒன்று எழுதுக, நான்கு பந்திகளுடனும் பொருத்தமான துணைத்தலைப்புகளுடனும் அதனைக் கட்டமைக்குக!

3. விளக்கப் படங்களும் அமைப்புத்திட்டமும் வடிவமைப்புக்கான வழிமுறைகள்

3 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

- மேற்படி கருத்துரைகளை மேலும் பல வினாக்களாக எளிமையாக விரிவாக்கலாம்: விளக்கப்படங்களுடன் தெளிவாகவும் எளிதாகவும் படிப்பதற்கு எழுத்துருவினை நாம் எவ்வாறு ஆக்கலாம்? எந்த வடிவமைப்பும் அமைப்புத்திட்டமும் எழுத்துருவினை மேம்படுத்தும்?
- தன்வயச் செயன்முறைத் தேர்வுகளுக்கும், பயன்படுத்திப்பார்த்தல் முயற்சிகளுக்கும் (கணினியிலும்) உறுதியாக ஊக்குவிக்கவேண்டும். மேற்படி கருத்துகளுக்கு மேலாக, புனைகதையற்ற எழுத்துருக்களுடன் தொடர்பாக மாணவர்கள் தம்முள் ஆக்கும் பணிப்புத்தகங்கள் மற்றும் எடுத்துரைப்புகள் இத்தேவைக்கு ஏற்றனவாகலாம்.

11 எழுத்துருவை மீள் நோக்குக்கும் திருத்தத்துக்குமான உத்திகள்

இலக்கு

மாணவர்கள் தங்கள் எழுத்துருக்களை மேம்படுத்த அவற்றை எவ்வாறு மீள்பார்வை செய்யலாம், மதிப்பாய்வு செய்யலாம் என்பது பற்றிக் கற்கவேண்டும். இது ஒரு பக்கம் பொருளுடனும் (தெளிவு, அளவையியற் கட்டமைப்பு, படிப்பவர்க்கு கவர்ச்சியான எடுத்துரைப்பு) மறுபக்கம் எழுத்துருவின் முறைமையான பண்புகளுடனும் (இலக்கணம், தொடரியல், சரியான வடிவங்கள்) தொடர்புடையதாகும். எழுத்துருக்களின் ஊன்றிய நோக்கும், மதிப்பாய்வும் கணிப்பு நிலையும் அவர்களுடைய முதல் மொழியின் எழுத்து வடிவம் பற்றிய பொதுவான விழிப்புணர்வு ஆகியவற்றில் மாணவர் தகைமையினை முன்னேற்றுகின்றன. தனியாக எழுத்துருவை மீட்டல் செய்வதிலும் இச்செயற்பாட்டில் மற்றவர்களுடன் இணைந்து செயற்படுதலும் விரும்பத்தக்கவை, ஏனெனில் ஊடகத் தொடர்பாடலூடாக மொழி விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது, இதன் பக்கநிலையாக, இரண்டு அல்லது மூன்று மாணவர்களின் மொழியியல் வளங்கள் நன்மைபயப்புக்கு பயன்படுத்தப்படுகின்றன.

1. குழுவாக செயற்பட்டு எழுதுதலும் மீள்நோக்குதலும்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
உசாத்துணை நூல்களும் அகரமுதலிகளும்

எழுத்துருவைத் தொகுக்கும் இவ்வூடாட்டச் செயற்பாடு பெருமளவு மாணவர்களுக்கு அவர்களுடைய வழக்கமான வகுப்புகளிலிருந்து அறிந்திருப்பர். மேலும், குறிப்பாக இது பாரம்பரியமொழியில் கற்பிப்பதற்கு நன்கு பொருத்தமானது. ஏனெனில் இது எழுத்துமொழி விழிப்புணர்வை மற்றும் தகைமையை ஊக்குவிக்கிறது,

அ) இப்பணிக்கு முன்தேவையாக மாணவர்கள் ஓர் எழுத்துருவினை (ஒரு பக்கத்துக்கு மேற்படாமை விரும்பத்தக்கது) உருவாக்கியிருக்க வேண்டும். தங்கள் எழுத்துருவை முடித்தவர்கள், உரத்துப் படித்துப் பயிற்சி செய்யவும். பின்னர் அவர்கள் ஒன்று அல்லது இரண்டு பங்காளிகளைத் தேடுவர், அவர்களுடன் வரைபுகளைப் பயிற்சி செய்வதுடன் மேம்படுத்துவதையும் செய்வர். (வேறுபாடு: பதிப்புக் குழுவினை ஆசிரியர் உருவாக்குவார்).

ஆ) மாணவர்கள் முறைப்படி, குழுவிலுள்ள மற்றவர்களுக்கு முழு எழுத்துருவையும் மெதுவாக வாசித்து, பின்வரும் வினாக்களையும் முன்வைப்பர் (அவற்றைப் பலகையில், தாள் துண்டுகளில் எழுதலாம், அல்லது பிரதிகளை வழங்கலாம்). நீர் எழுத்துருவை விளங்கிக்கொண்டீரா? தெளிவாக்குதற்கு எனக்கு என்ன தேவை? எது நன்று?, எது அவ்வளவு நன்றாயில்லை? படிப்பவர் பின்னர் கிடைத்த பின்னூட்டல் பற்றிய குறிப்புகளை எடுப்பார்.

இ) அடுத்து, ஒவ்வொரு வாக்கியமாக, எழுத்துரு, மதிப்பாய்வு செய்யப்படும். இந்நிலையில் உள்ள வினாக்கள்: வாக்கியம் தெளிவாகவும் விளங்கக்கூடியதாகவும் உள்ளதா? மொழியியலடிப்படையில் இது சரியா (வடிவமும் கட்டமைப்பும்)? ஒரு கருத்தை விளக்க மிக நல்ல சொற்கள் இருக்கின்றனவா? (சரிபார்க்க ஓர் அகரமுதலியைப் பயன்படுத்துக!).

ஈ) அடுத்து, இன்னொரு மாணவனின் / மாணவியின் முறை ஆகும்.

உ) குழுவின் எல்லா எழுத்துருக்களும் கலந்துரையாடியபோது, மாணவர்கள் தம் எழுத்துருவின் மேம்படுத்தப்பட்ட பதிப்பினை எழுதுவர். இந்நிறைவுப் பதிப்புகள் ஆசிரியரின் குறிப்புகளுடன் திருத்தப்படும். முடிவில், எல்லா மாணவர்களுக்கும் எழுத்துருக்கள் கிடைக்கச் செய்யவேண்டும். (கீழே பார்க்கவும் # 12: இலக்கு வாசிப்பாளர் குறிப்பு)

---

2. தனியாக ஓர் எழுத்துருவை மீள்நோக்குதல் (பின்னர் அதுபற்றி ஆசிரியருடன் கலந்துரையாடல்)

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
உசாத்துணை நூல்களும் அகரமுதலிகளும்

மற்றைய மாணவர்களுடன் இணைந்து எழுத்துரு பற்றி ஒரு கூட்டாகக் கலந்துரையாடும் வாய்ப்புகள் இல்லாதவிடத்து தனியாகவே ஓர் எழுத்துருவைப் பதிப்பித்தல் இன்றியமையாததாகும். (எ.கா. வீட்டு வேலையாக எழுத்து ஒப்படைகளில் ஈடுபடும்போது) எப்படியிருப்பினும் வாய்ப்புள்ளபோது, மாணவன் / மாணவி புறநிலைப் பின்னூட்டலைப் பெறவேண்டும் (பெற்றோர், உடன்பிறப்புகள், ஆகியோரிடமிருந்து) தனியாக தம் எழுத்துருக்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடும் மாணவர்களுக்கு பின்வரும் தெளிவான வழிகாட்டிகள் மற்றும் துணைசெய் வினாக்கள், மதியுரைகள் என்பவற்றை வழங்குவது இன்றியமையாததாகும்:

- என் எழுத்துருவின் தலைப்பை இன்னும் சுவையானதாகவும் உணர்வூட்டுவதாகவும் ஆக்குதற்கு அல்லது பொருள் பற்றிய தெளிவான அறிகுறியை வழங்குதற்கு நான் மீள் முறைப்படுத்தலைச் செய்யலாமா?
- என் எழுத்துரு தெளிவான கட்டமைப்பையுடையதா (முன்னுரை / கண்ணோட்டம், தலையாய உள்ளுடல், முடிவு / சுருக்கம்)? வளர்ச்சியடைதல் தர்க்கரீதியானதா? தலைப்புக்குள் நின்றுள்ளேனா?
- எழுத்துரு, படிப்பவரின் விருப்பினைக் கவருவதாக, சுவையான தகவலுள்ள வாக்கியத்துடன் தொடங்குகின்றதா?, அல்லது இதனை மேம்படுத்தமுடியுமா?
- மிகுதியாக மீண்டும் மீண்டும் கையாளாத தெளிவான சுருக்கமான சொற்களை நான் தேர்ந்தெடுத்துள்ளேனா?
- எனக்குத் தெளிவில்லாத இலக்கண வடிவங்கள் (காலங்கள், வினைவடிவங்கள்) உண்டா? யாரிடம் நான் அறிவுரை கேட்கலாம்? (இப்பகுதிகளைக் குறித்துவைத்து ஆசிரியரிடமிருந்து உதவி பெறலாம்.)
- என் எழுத்துரு சொல்லெழுத்துப் பிழைகளற்றதா, அகரமுதலிகளின் துணையுடன் ஐயங்களைத் தெளிவாக்கிக்கொண்டேனா? (அகரமுதலிகள் முதலியனவற்றை மாணவர்கள் அணுகக்கூடியதாக இருக்கவேண்டும், அவற்றைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது. பள்ளி மொழியின் நெடுங்கணக்குக்கு எதிராக பாரம்பரியமொழியில் உள்ள எழுத்துக்களை அடையாளம் காண்பதற்கும், எழுத்துகளின் ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வுக்குமான உத்திகளை இது உள்ளடக்கியதாகும்.)

12 பெறுநருக்கு ஏற்றவாறு எழுதுதல் கவர்ச்சியான எழுத்துகளை வடிவமைத்தலும் எடுத்துரைத்தலும்

இலக்கு

எழுதுதல் ஒரு தொடர்பாடற் செயற்பாடாகும், தன்னாட்டு மொழி வகுப்பறையிலுள்ள மாணவர்கள் இதனைக் கற்பதுடன் விளங்கிக்கொள்ளவும் வேண்டும். தங்கள் பாரம்பரியமொழியில் பல வடிவங்களிலமையும் எழுத்துருக்களை எவ்வாறு கவர்ச்சியாக வடிவமைத்து எடுத்துரைக்கலாம் என்பதை அவர்கள் கற்கவேண்டும். எனவே முடியுமாயின் ஆசிரியர் ஒப்படைக்கப்பட்ட எழுத்து வேலையின் இலக்கு, வாசகர் யார் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும், வடிவமைப்பு அல்லது முன்மொழியப்பட்ட கருத்திட்டம் பற்றித் தெளிவாகச் சுட்டவேண்டும் (அதாவது, ஒரு நூல், சுவரொட்டி, அல்லது ஒரு காணொளி இறுவெட்டு). எதிர்பார்க்கும் பெறுநரின் நோக்கையும், தயாரிப்பு நோக்கு நிலையையும் அறிந்துகொள்வதால் மாணவர்களின் எழுத்து வேலைக்கான செயல்நோக்கினைப் பெருக்கி, முறையான கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்ட எழுத்துருக்களை ஆக்குதற்குரிய அவர்களுடைய முயற்சிகளை மிகைப்படுத்துகிறது. எனவே மாணவர்கள் தாம் வெறுமனே ஆசிரியருக்காக எழுதவில்லை, தம் எழுத்துருக்கள் உண்மையில் மெய்யான பெறுநரைக் கொண்டிருக்கும் என்பதை அறிந்துகொள்வர்.

1. எழுத்துருவை யாருக்கெல்லாம் எழுதலாம். சாத்தியங்கள்

கருவிகள்:
வேறுபாடுகளைப் பொறுத்து அமையும் (வலதுபக்கம் பார்க்கவும்)

- ஒரு வகுப்புக்கு அல்லது குழுவுக்கு: எழுத்துருக்கள் (எ.கா. கதைகள், கவிதைகள்) வகுப்புக்கு உரத்துப் படிக்கப்படும், அல்லது 2 – 3 வாசிப்புக் குழுக்களுக்குப் பகிரப்படும்.
- எடுத்துரைப்புகளில் ஈடுபடும் ஒருவருடைய வகுப்புக்கு அல்லது குழுவுக்கு (எ.கா. பிறந்த நாடு பற்றிய ஒரு குறிப்பிட்ட தலைப்புப் பற்றி, முடியுமாயின் பவர் பொயின்ற் உதவி அல்லது சுவரொட்டிகளுடன்)
- இளம் மாணவர்களுக்கு: மூத்த மாணவர்கள் தம் இளைய வகுப்புக்காரருக்கு அல்லது வீட்டிலுள்ள உடன்பிறப்புகளுக்கு ஒரு கதையினை எழுதுவர், அல்லது ஒரு நூலினை ஆக்குவர்.
- பள்ளி அமைப்புக்கு புறநிலையிலுள்ள உண்மையான இலக்கு வாசிப்பாளர்களுக்கு: அன்னையர் நாள் மடல், வாழ்த்து மடல் (கிறிஸ்மஸ், புத்தாண்டு முதலியன), பிறந்த நாட்டிலுள்ள உறவினர்களுக்கு அல்லது தெரிந்தவர்களுக்கு அஞ்சல்கள், தாய் நாட்டின் தூதரகம் அல்லது அங்கு அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு.
- பேனா நண்பர்களாக பிறந்த நாட்டிலுள்ள இன்னொரு வகுப்புடன் அல்லது வெளிநாட்டிலுள்ள இன்னொரு பாரம்பரியமொழி வகுப்புடன் தொடர்புகொள்ளல் (அஞ்சல் அல்லது மின்னஞ்சல்).
- ஒரே பள்ளியிலுள்ள மற்றைய மாணவர்களுக்கு: பன்மொழி அறிவித்தல் பலகை ஒன்றினைப் பரிந்துரைக்குக. பாரம்பரியமொழியில் எழுதப்பட்ட பங்களிப்புகளை இணைக்கவும் (உள்ளூர் அல்லது பள்ளி மொழியில் எழுதப்பட்ட ஒரு சிறிய சுருக்கத்துடன்). வேறுபாடுகள்: சமையற்குறிப்பு அல்லது வீர தீரங்கள் பற்றிய பன்மொழி நூல். மேலும் பார்க்கவும் மதியுரைகள் #21.
- மாணவர்களின் பண்பாட்டைச் சேர்ந்த மூத்தவர்களுடனான பண்பாட்டு நிகழ்வுகளுக்கு (பெற்றோர் அல்லது பண்பாட்டு மாலை நேரம் முதலியன): மாணவர்கள் கவிதைகள், மிகச் சிறிய கதைகள் அல்லது எழுத்துப் பகுதிகள், நகைச்சுவைகள் முதலியவற்றை எழுதி எடுத்துரைத்தல்.

2. எழுத்துருக்களின் வடிவமும் பயன்படுத்தப்பட்ட முறைகளும்

கருவிகள்:
வேறுபாடுகளைப் பொறுத்து பார்க்க.
(வலதுபக்கம் பார்க்கவும்)

- மரபுவழி எடுத்துரைப்பு வடிவம்: எழுத்துரு ஒரு பயிற்சிப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் இல்லாதிருத்தலால் இது ஊக்கமளிப்பதாக இல்லை.
- விடுமுறைக் கதைகள், நகைச்சுவைகள், சமையற் குறிப்புகள் போன்ற பொருள் சார்ந்த எழுத்துருக்கள். ஒரு மாணவன்/மாணவி தலைப்புப் பக்கத்தை வடிவமைக்கிறான்/வடிவமைக்கிறாள், எழுத்துருக்கள் கோர்க்கப்படும் அல்லது நூலாகக் கட்டப்படும். இதனை மாணவர்கள் கடனாகப் பெறலாம் (ஒரு நூலக நூல் போல) #53 யும் 54 யும் பார்க்க.
- சுவரொட்டி அல்லது படம் வடிவத்தில் வழங்கல் (A3 வடிவத்தில் அல்லது பெரிதாக), இயற்கை மற்றும் நாகரிகம் பற்றிய தலைப்புகளுக்கு (மற்றும் வாய்வழி எடுத்துரைப்புகள்) ஆகியவற்றுக்குப் பொருத்தமாக.
- கவிதைகள் முதலான கலை விளக்கங்கள்: நிறத் தாள்களில், முடியுமாயின் பல வடிவங்களில் வெட்டி ஒப்பனை செய்யப்பட்டவை. இதனை ஒரு வடிவமைப்பு போட்டியாகவோ சிறந்த ஒப்பனை செய்யப்பட்ட எழுத்துருத் தேர்வாகவோ மாற்றியமைக்கலாம்.
- மின்னணு ஊடகப் பயன்பாடு: முதல் மொழியில் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தல்.
- உங்களுக்குரிய மொழியில் கலந்துரையாடு மன்றங்கள், வலைப்பதிவுகள், அரட்டை அறைகள் ஆகியவற்றில் பங்கேற்றல். மற்றைய மாணவர்களும் வகுப்புகளும் பதிவுசெய்ய இசைவுதரும் இணையத்தளம் ஒன்றை வடிவமைத்தல்.

3.தமது எழுத்துருக்களை செயல்படுத்தவும், எடுத்துரைக்கவும் மேலும் பல வழிமுறைகள்.

- தொழில்நுட்பம் மூலம் வடிவமைத்தல், கதைகளை ஒலிப்பதிவு செய்தல் (இறுவெட்டு மூலம்) செய்தி விவரணம் (அறிக்கை) ஒளிப்பதிவு (காணொளி).
- காட்சிமுறையில் விவரித்தல், நாடகம் மூலம், நடனம் மூலம், பாடல் மூலம், உரைநடைப்பாடல் மூலம் எடுத்துரைப்பு செய்தல்.

II

13 மாணவர்களுக்கான வழிமுறைகள்: பணித்தாள்கள் 1+2

இலக்கு

ப.தா.1 மற்றும் ப.தா.2 ஆகிய இரு பணித்தாள்களும் மாணவர்களுக்கு நேரடியாகக் கொடுப்பதற்கு வடிவமைக்கப்பட்டன. அவை அவரவர்களுடைய எழுத்துருக்களை எழுதுவதற்கும் பயனுள்ள சிறுகுறிப்பு விவரங்கள் மற்றும் பரிந்துரைகளுடன் தம் துணைவேண்டா எழுத்தினை முன்னெடுக்கவும் துணைசெய்யும் நோக்குடையன. பணித்தாள்கள் கற்றல் உத்திகள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்புடையன, அவை மாணவர்களுக்கு அவர்களுடைய வழக்கமான வகுப்பறைக் கற்பித்தலிலிருந்து பழக்கப்பட்டவை, அதன் விளைவாக பெரும்பகுதிக் கல்வியினையும் பாரம்பரியமொழிக்கற்பித்தலையும் நெருக்கமான இணைப்புக்குக் கொண்டுவருதற்குப் பங்களிக்கின்றன. இப்பணித்தாள்கள் #8 – 12 இல் வழங்கப்பட்டுள்ள கற்பித்தல் மதியுரைகளின் குறைநிரப்பிகளாகின்றன, ஆனால் அவை எவ்விதத்திலும் அவற்றுக்குப் பதிலாக அமைவனவல்ல.

பொது அறிமுகம்:

மொழித் தேர்ச்சி அடிப்படையில், இரண்டு பணித்தாள்களும் 4 ஆவது தரத்துக்கு மேலான மாணவர்களுக்குப் பொருத்தமாக அமையக்கூடியன. இளைய மாணவர்களுக்கு, முன்னரே மேலும் தெளிவுபடுத்தியவையும் விளங்கப்படுத்தியவையும் ஆன சில தெரிவுசெய்யப்பட்ட பகுதிகள் பரிந்துரைக்கப்படுகின்றன. தகுதிநிலையைப் பொறுத்து இது மூத்த மாணவர்களுக்கும், குறைந்தது தொடக்க வரிசையிலாயினும், (வரையறையுடைய சில குறிப்புகளையும் முன் விளக்கத்தையும் பொறுத்து) பொருந்துவதாகும். பணித்தாளை அறிமுகப்படுத்தும்போது, மிகத் தெளிவாக இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது. மாணவர்கள் உண்மையாக விளங்கி குறிப்பாகப் பயிற்சி செய்த ஒப்படைகள் மட்டுமே அவர்களுடைய துணைவேண்டா வேலைக்குத் துணைசெய்யும். பணித்தாள்களின் செயற்படுமுறைகள் பற்றிய அறிமுகம் செய்பவரின் விளக்கத்தைத் தொடர்ந்து, மாணவர்களுக்கு அவர்களுக்குரிய படியைக் கொடுக்கவேண்டும், அதனால் அவர்கள் வீட்டில் அவற்றுடன் வேலை செய்யலாம். ஒரே நேரத்தில் இரண்டு பிரதிகளையும் அவர்களுக்கு வழங்கக்கூடாதெனப் பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் முறைகளைக் கற்கவும் பயிற்சி செய்யவும் மாணவர்களுக்கு நேரத்தை வழங்குதற்காக, தனித்தனியாக, 2 – 3 கிழமைகளுக்குப் பின்னர் வழங்கலாம்.
பணித்தாள்களில் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டப்பட்ட பல கூறுகள், இந்நூலின் மற்றைய இயல்களில் (#8 – 12) மேலும் உறுதியான ஆழமான பரிந்துரைகள் மற்றும் பயிற்சிகளுடன் தொடரப்பட்டுள்ளன. இப் பரிந்துரைகளும் பயிற்சிகளும் ஏற்கெனவே வகுப்பில் விளக்கப்பட்டும், பயிற்சிசெய்யப்பட்டும் இருந்தால், பணித்தாள்களின் அறிமுகத்தையும் அவற்றை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுதலையும் இயல்பாகவே எளிதாக்கும்.

பணித்தாள் 1 "எழுத்துருவைத் திட்டமிட கட்டமைக்க, உருவாக்க படிப்படியான வழிகாட்டி"

உண்மையான எழுத்துப் பணிகளைப் பயன்படுத்தி, பணித்தாளின் ஆறு வேறுபட்ட வழிகளை ஒரு தடவைக்கு மேலாகப் பயன்படுத்துவது மிக நன்று. 1½ பக்கங்களில் ஓர் எழுத்துரு எழுதுக, அதன்பின் 5 – 10 மணித்துளி அது பற்றி எடுத்துரைப்பு வழங்குக.
ஆறு வழிகளையும் இலக்கியத்தில் அல்லது ஒரு கற்பனைத் தலைப்பிலிருந்து ஒரு பொருளினூடாக பயிற்சி செய்யவேண்டும் ("எம்முடைய நாட்டைப் பற்றி ஒரு கதையைக் கண்டுபிடிக்கப்போகிறோம்", "என் விடுப்புக்கால மிகவும் உணர்வூட்டும் துணிகரச் செயல்", "பொய்களின் கதை/பொய் பற்றிய கதை"). ஆறு வழிகளுள் ஒவ்வொன்றும் கலந்துரையாடப்பட்டு பயிற்சி செய்யப்படவேண்டும். இதற்கு நீண்ட நேரம் தேவைப்படலாம், ஆனால் மாணவர்கள் தம்முடைய எதிர்கால ஒப்படைகளுக்கு துணைசெய்யக்கூடிய மதிப்பான திறன்களை கற்றுக்கொள்வதால் இது மிகுந்த பயனுடையதாக மதிப்பானதாக அமைகின்றது.
முதலாவது சுற்றினை எளிமைப்படுத்தின், தடித்த எழுத்திலுள்ள ஆறு வழிகளின் தலைப்புகளையும் துணைத்தலைப்புகளையும் மட்டும் கலந்துரையாடுக.
தொடர்ந்துவரும் குண்டுப்புள்ளிகள் பணித்தாளுடன் இரண்டாவது சுற்றுப் பயிற்சியின்போது மதிப்பிடலாம்.

பணித்தாள் 2
"எழுதும்போது ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ளல்"

இந்தப் பணித்தாள் ப.தா.1 உடன் சேருவதாகக் கருதப்படுகிறது. பணித்தாளை மாணவர்களுக்குப் பகிர்வதன் முன், எழுதும்போது அவர்கள் எதிர்கொண்டிருக்கக்கூடிய சிக்கல்கள் எவை? அவற்றை அவர்கள் எவ்வாறு நன்றாக எதிர்கொண்டனர் என்பதை மீள்பார்வை செய்தல் ஒரு நல்ல எண்ணமாகும். பின்னர் பணித்தாள் 2 வாசிக்கப்பட்டு கலந்துரையாடப்படும். இங்குகூட, சில பரிந்துரைகளை உண்மையான எடுத்துக்காட்டுகளுடன் பயிற்சிசெய்து, அதன்பின்னர் மாணவர்களுடைய பட்டறிவுகளை அவர்களுடன் கலந்துரையாடுதல் ஒரு நல்ல எண்ணக்கருவாகும். இது கற்றலை ஆழமாக்குவதுடன் திடமாக்கி, பின்னர் பணித்தாள்களை முற்றாகவும் துணையின்றியும் பயன்படுத்துவதற்கு மாணவர்களின் திறனுக்குப் பங்களிக்கிறது.

II

ப.தா.1 படிப்படியாக ஓர் எழுத்துருவைத் திட்டமிடலும், வடிவமைத்தலும், பதிப்பித்தலும்

மாணவர்களுக்குப் பணித்தாள்

படிநிலை 1

உங்கள் தலைப்புக்கு நல்ல கருத்துகளை அறிக

செய்யக்கூடியன:

- ஒரு தாள் அல்லது பல சிறிய துண்டுகள் எடுக்கவும். தலைப்புத் தொடர்பாக மனத்தில் வருவதை எழுதுக. உங்களுக்கு எளிதாயிருப்பின் குறிப்புகளை உங்கள் பள்ளி மொழியில் எழுதலாம்.
- நேரமிருப்பின், தலைப்பினைப் பலருடன் கலந்துரையாடி, அவர்களுடைய எண்ணங்களை குறித்துவைக்கவும்.
- இம்முறைகளுடன் உங்களுக்கு ஏற்கெனவே பழக்கமிருப்பின், மன வரைபடம் ஒன்றினை உருவாக்குக.



படிநிலை 2

உங்கள் கருத்துகளை ஒழுங்குபடுத்துக, உங்கள் எழுத்துருவின் கட்டமைப்பினைத் திட்டமிடுக.



- உங்கள் குறிப்புகளையும் தாள் துண்டுகளையும் பார்வையிடவும். உங்களால் பயன்படுத்த முடியாதவற்றை நீக்கிவிடவும்.
- ஒரு தாளினை எடுத்து அதனை மூன்று பகுதிகளாக மடிக்கவும்: முன்னுரை / கண்ணோட்டம் – பெரும்பகுதி (பெரும் பரப்பு) – முடிவு/சுருக்கம்
- பொருத்தமான பரப்பில் உங்கள் கருத்துகளை எழுதவும். எது விடப்பட்டு இருக்கலாம் என்பதை மனங்கொண்டு சேர்க்கவும்.
- உங்கள் எழுத்துரு / கதை ஓரளவு எதனை உள்ளடக்கும் என்பதை அறியும் வரையில் இப் படிநிலையில் தொடர்ந்து உழைக்கவும்.
- எழுத்துருவை எழுதுதல் பற்றியும் எண்ணுக (தாளில், சித்திர வடிவமாக, கணினியூடாக…)

படிநிலை 3

எழுத்துருவின் முதல் வரைபினை எழுதுக.

- எழுத்துருவை எழுதுக.
- உங்கள் எழுத்துருவை வாசிக்கவும். கட்டமைப்புச் சரியா? நீங்கள் இதனை மேம்படுத்த ஏதும் சொற்களை, வடிவங்களை, வாக்கியங்களை மாற்ற விரும்புகிறீரா?

படிநிலை 4

கவர்ச்சியான தலைப்பு ஒன்றினைக் கண்டு பிடிப்பதும் தொடக்கமும்

- நல்லதொரு தலைப்புடன் உங்கள் எழுத்துருவை வாசிப்பவர்கள் அல்லது கேட்பவர்களின் ஆர்வத்தை உங்களால தூண்டமுடியும். "என் விடுப்புக்கால வீரதீரம்" என்பதைவிட "காப்பாற்றுங்கள், நான் தாழ்கிறேன்!" என்பது மிகவும் உற்சாகமாக ஒலிக்கின்றது.
- எழுத்துருவின் முதலாவது வாக்கியம் அல்லது முதலாவது பந்திக்கும் அதுவே பொருந்தும், இங்கு நீங்கள் ஆர்வத்தையும் சூழ்ச்சியையும் உருவாக்கலாம். ஒரு கதையில், வியப்பையும் ஆர்வத்தையுமுடைய தொடக்கத்தால் இதனை விளைவிக்கலாம், உண்மை எழுத்துருக்களெனின், அது தெளிவான உண்மைத் தகவல்களை வேண்டிநிற்கும்.
- நீண்ட எழுத்துருக்களுடனும் எடுத்துரைப்புகளுடனும், தெளிவான தகவல்தரு துணைத்தலைப்புகளைப் பயன்படுத்துதல் இன்றியமையாததாகும். வாசகர் ஒரு கண்ணோட்டத்தைத் தக்கவைப்பதற்கு இது துணைசெய்யும்.

படிநிலை 5

முதல் வரைபினை பதிப்பிக்கவும்

பலவகையில், "எழுத்து மாநாட்டில்" இணைகளாகவோ மூன்றுபேர் உள்ள குழுக்களாகவோ இது இடம் பெறலாம். இவ்வகையில் நீங்கள் ஒருவருக்கொருவர் துணைசெய்யவும் அறிவுறுத்தவும் முடியும். எனினும், எழுத்துருவை நீங்களே பதிப்பிக்கலாம். பின்வரும் வினாக்கள் உங்களுடைய பதிப்பு முயற்சிகளில் துணைசெய்யும்:

- ஒட்டுமொத்தமாக, என் எழுத்துரு ஆர்வமுடையதாகவும் விளங்கிக் கொள்ளத்தக்கதாகவும் உள்ளதா? அதை இன்னும் தெளிவாக ஆக்குதற்கு எனக்கு என்ன தேவை? எது நல்லது அல்லது அவ்வளவு நன்றாயில்லை? நான் தலைப்புக்குள் நின்றுகொண்டேனா?
- என் எழுத்துரு தெளிவான கட்டமைப்பையுடையதா? (முன்னுரை / கண்ணோட்டம், தலையாய உள்ளுடல், முடிவு / சுருக்கம்); ஒழுங்மைப்புத் தெளிவாயுள்ளதா? கருப்பொருளிலிருந்து விலகிப்போவதைத் தவிர்த்துள்ளேனா?
- என் எழுத்துருவின் தலைப்பினை இன்னும் ஆர்வமுடையதாகவும் உற்சாகமூட்டுவதாகவும் திரும்ப எழுதலாமா, அல்லது அதன் பொருள் பற்றி மிகத் தெளிவான தகவலை வழங்கலாமா?
- படிப்பவர் தொடர்ந்து படிக்கச் செய்வதான ஆர்வமான தகவலுடைய வாக்கியத்துடன் எழுத்துரு தொடங்குகிறதா, அல்லது அதை மேம்பாடடையச் செய்யலாமா?
- வாக்கியங்கள் விளங்கிக்கொள்ளத்தக்கனவா? இலக்கணப்படி சரியானவையா? (சொற் பயன்பாடு, சொற்றொடர், காலம்)? ஐயங்களை கோடிட்டு அவற்றை ஆசிரியருடன் அல்லது தெரிந்த வேறு ஒருவருடன் கலந்துரையாடுக.
- நான் தெளிவான, பொருத்தமான சொற்களை தெரிவுசெய்துள்ளேனா? ஒரே சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளேனா? எழுத்துப்பிழை சரிபார்க்கப்பட்டதா? (அகரமுதலியில் பார்க்கவும்)

படிநிலை 6

எழுத்துருவின் நிறைவு வரைபினை வடிவமைக்குக

- உங்கள் எழுத்துருபின் வடிவமைப்பு வாசகர்களை அல்லது கேட்பவர்களை ஈர்ப்பதை உறுதிசெய்யவும்!
- மேலும் புதிய வடிவங்களை சேர்த்துக்கொள்க (படங்கள், கணினியில் எழுதி, ஒலிவடிவம் (ஒலிவடிவகோப்பு) முதலியன)

ப.தா.2 எழுதும்போது எழும் சிக்கல்களை எதிர்கொள்ளல்

மாணவர்களுக்குப் பணித்தாள்

எழுத்துருவினை எழுதும்போது அடிக்கடி ஏற்படும் சிக்கல்கள் சிலவற்றை நீங்கள் எப்படித் தீர்க்கலாம் என்பதை இப்பக்கம் காட்டுகிறது.

- உங்களுக்கு எதைப்பற்றி எழுதுவது என்று தெரியாதபோது அல்லது உங்கள் எழுத்துருவை திட்டமிடல் ஒழுங்கமைத்தல் தொடர்பாக உங்களுக்கு இடர்பாடுகள் இருப்பின், பணித்தாள் 1 இனை மீண்டும் பார்க்கவும்.

சிக்கல் 1

என் தாய் மொழியில் எழுதுவதில் எனக்கு இடர்பாடுகள் உள்ளது

- உங்களுக்கு எளிதாக இருக்குமாயின், எண்ணங்களை ஒருங்குகூட்டி எழுத்துருவைத் திட்டமிடும்போது, உங்கள் பள்ளிமொழிச் (எ.கா. யேர்மன்) சொற்களையும் பயன்படுத்தலாம்.
- உங்கள் தாய்மொழியில் உமக்கு தோன்றுவதுபோல பேச்சுமொழி எழுத்துமொழி வசன அமைப்பில் ஏதோ ஒன்றை எழுதவும். பின்னர் உங்கள் வரைபினை ஆசிரியருடன் அல்லது மொழிப்புலமை உள்ள ஒருவரிடம் ஏன் அது மாற்றி எழுதப்படவேண்டும் என்பதை கலந்துரையாடவும்.
- நீர் சிறிய பந்தி ஒன்றை எழுத ஆசிரியருக்கு ஒப்புதல் அழிக்கலாம். முடிந்தவரை மிகச்சரியான எழுத்து வடிவில் அல்லது எ.கா முதல் ஐந்து வசனங்களை எழுத்து வடிவில் திருத்தி எழுதலாம்.
- நீங்கள் உங்கள் மொழியில் எழுத்துப்பிழையினை சரிபார்க்க கட்டாயமாக ஓர் அகரமுதலியினைப் பயன்படுத்தவும்.



சிக்கல் 2

என் எழுத்துருவுக்கு உற்சாகமான கவர்ச்சியுடைய ஒரு தொடக்கத்தினை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை



- முதல் வாக்கியத்தை எழுதுதற்கு முன்னரே கவர்ச்சியான தலைப்பொன்றினை வைத்திருத்தல் இன்றியமையாததாகும். எடுத்துரைப்புகளும் நீண்ட எழுத்துருபுகளும் துணைத்தலைப்புகளுடன் கட்டமைக்கப்பட வேண்டும்.
- எழுத்துருபுகள் அல்லது எடுத்துரைப்புகளின் பொருள் பற்றிய சிறிய கண்ணோட்டம் ஆரம்பத்திலேயே அமையவேண்டும். இது படிப்பவர்கள் அல்லது கேட்பவர்கள் தங்களை நோக்குநிலைப்படுத்த துணைசெய்கிறது.
- பட்டுணர்வு பற்றிய ஒரு கதை அல்லது எடுத்துரைப்பும் கூட சிறிய கண்ணோட்டத்துடன் தொடங்கலாம்: "நான் எப்படி… என்று உங்களுக்கு ஒருமுறை நான் சொல்லப்போகிறேன்", "என்னுடைய கதை எதைப்பற்றியதெனின்"
- ஒரு கதை "இடைப்பகுதி" யிலிருந்தும் தொடங்கலாம், அது சிலவேளை விறுவிறுப்பாக அமையலாம்: "நான் நிலத்தில் இறந்தது போலக்கிடந்தேன். என்ன நடந்திருக்கலாம்? மெதுவாக, நான் நினைவுபடுத்தத் தொடங்கினேன்".
- படிப்பவரிடம் அல்லது கேட்பவரிடம் ஒரு வினாவைத் தொடுப்பதாக ஒரு கதையைத் தொடங்குவதும் ஒரு நல்ல வழியாக அமையலாம்.: "சென்ற கோடை காலத்தில் எனக்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிய விருப்பமா? இதை ஒரு தடவை கேளுங்கள்! இது அன்று…".

சிக்கல் 3

நான் இனி என்ன எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும் எனத் தெரியவில்லை



- ஏற்கெனவே நீங்கள் எழுதியதை யாருக்காவது வாசித்துக்காட்டவும், அல்லது சொல்லவும். பின்னர் அந்த ஆளுடன் உங்கள் எழுத்துருவை எவ்வாறு தொடரலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுக.
- எழுத்துருபு அல்லது எடுத்துரைப்பு கருப்பொருளின் ஒரு புதிய விடயம், வேறுபட்ட அல்லது இதுவரை கையாளப்படாத புதிய துணைத் தலைப்புப் பற்றி எண்ணுக.
- ஒரு கதையை படிப்பவர்கள் எதனை விரிவாக அறிய விரும்புவார்கள் என்பதைச் சிந்திக்கவும், அடுத்து அது பற்றி ஏதாவது எழுதுக. ("அறிவன் கட்டிலில் படுத்து உறங்கிவிட்டான்" → "அறிவனுடைய கட்டில் அறை பற்றி நீங்கள் சிலவேளை அறிய விரும்பலாம் நான் உங்களுக்கு மகிழ்வுடன் சொல்கிறேன்…")
- ஒரு கதை "இடைப்பகுதி" "யிலிருந்தும் தொடங்கலாம், அது சிலவேளை உற்சாகமூட்டுவதாக அமையலாம்: "நான் நிலத்தில் இறந்ததுபோலக் கிடந்தேன். என்ன நடந்திருக்கலாம்? மெதுவாக, நான் நினைவுபடுத்தத் தொடங்கினேன்;…"
- உங்கள் எழுத்துருவின் கடைசி வாக்கியத்தைப் படிக்குக. அந்த வாக்கியத்திலிருந்து ஒரு சொல்லினை அடிப்படையாகக் கொண்டு இன்னொரு வாக்கியம் எழுதுக. ("அறிவன் கட்டிலில் படுத்து உறங்கிவிட்டான்" → அவன் திடீரென விழித்து எழுந்து ஏதோ ஒன்று நினைவு வரும்வரை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

சிக்கல் 4

எனது எழுத்துருவுக்கு நல்ல முடிவுரையினை கண்டுபிடிக்க முடியவில்லை



- உண்மையான எழுத்துருவினை எப்போதுமே ஒரு சிறிய சுருக்கத்துடன் முடிப்பது நல்ல கருத்தாகும். ("இத் தலைப்பின் மிக முக்கிய பண்புகள்….")
- அடிக்கடி, எழுத்துருவின் முடிவில் உங்களுடைய கருத்தினை வழங்குதல் நன்று. "இந்தக் கதை/தலைப்புப் பற்றி நான் விரும்புவது….", "என்னுடய கருத்தில்…"
- இயலுமாயின் படிப்பவர்களை நேரடியாக அணுகுவதும் நன்று. "நான் என்ன சொல்ல விரும்பினேன் என்பதை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொண்டீர்கள் என நான் நம்புகிறேன்." "இந்நிலையில் நீங்கள் எப்படி நடந்துகொள்வீர்கள்.?"

சிக்கல் 5

துணைசெய்யுங்கள், என் எழுத்துரு மிகச் சிறியதாயுள்ளது!

(மேலேயுள்ள சிக்கல் 3யும் பார்க்க)

- கதைகளுக்கு: பெரும்பங்கு வகிக்கும் ஒரு புதிய கதைமாந்தரை (அதாவது, ஒரு குறும்புப் பூனை) உருவாக்குக.
- உங்கள் எழுத்துருவில் உள்ள சில வாக்கியங்களை கூடிய விவரங்களுடன் நீட்டுக., அல்லது மேலதிக வாக்கியம் ஒன்றை எழுதுக. (எடுத்துக்காட்டு: "அப்பொழுது நான் இன்னும் மிகச் சிறியவராக இருந்தேன்" → "அப்பொழுது, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் இன்னும் மிகச் சிறியவராக இருந்தேன். நான் ஆகக் கூடியது ஆறு வயதுடையவராக இருந்தேன், அப்பொழுதுதான் முன்பள்ளிக்குப் போகத் தொடங்கினேன்."
- கதையின் முடிவை விரிவாக்குக. உண்மை எழுத்துருவெனில், நீங்கள் நல்லதொரு சுருக்கத்தினை வழங்கலாம்; ஒரு கதையெனில் வாசகர்களுக்கு உங்கள் தனிப்பட்ட பார்வையை அல்லது கருத்தை வழங்கலாம்.



எழுதுதலின் பகுதி நிலைகளை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள்

III

14 சொற்கோவைக் கட்டமைப்புக்கான பரிந்துரைகள் I: சொற்பரப்புகளுடனும் விரிவாக்கப்பட்ட மொழிக் கருவிகளுடனும் செயற்படுதல்

இலக்கு

குடியகன்ற பெருந்தொகை மாணவர்களுக்கு, தாய்மொழிச் சொற்களஞ்சியம் முறைசாரா, குடும்பம் தொடர்பான பண்புகள், பேச்சுமொழி ஆகியவற்றுடனேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பாரம்பரியமொழிக் கல்விக்கான அறைகூவலானது, மாணவர்கள், இளையவர்களின் (பள்ளி தொடர்பான மற்றும் வெவ்வேறு வகைப்பட்ட முகப்புக்கூறுகளையும் சேர்த்துக்கொள்ளல்) எழுத்து வடிவ சொற்களஞ்சியத் தகைமையினை கட்டியெழுப்புவதும் வளர்ப்பதுவும் ஆகும். இவ்வாறு முயற்சிக்கும்போது மாணவர்கள் எத்தகைய சொற்களையும் தொடர்களையும் தமதாக்கிக்கொள்வர் (செயலி அல்லது ஆக்கவள சொற்களஞ்சியம்). தாம் விளங்கிக்கொள்ளத்தக்க ஆனால் தாம் அவற்றைப் பயன்படுத்துவது என்பது கட்டாயமல்ல (விரும்பிக்கொள்ளும் அல்லது விளங்கிக்கொள்ளும் சொற்களஞ்சியம்) என்பன பற்றி முடிவுசெய்தல் இன்றியமையாததாகும். முன்னையதை ஆழமாகப் பயிற்சிசெய்ய வேண்டும், ஆனால் பின்னையதை விளங்கிக்கொண்டால் போதும். பின்வரும் மதியுரைகளும் பயிற்சிகளும் சொற்களஞ்சியத்தைக் கட்டிடவும் எல்லா மட்டத்திலும் இதற்காக விரிவாக்கப்பட்ட கருவிகளுடன் உழைக்கவும் துணைசெய்யும்.

1. தலைப்புச் சார்ந்த சொற்களை சேர்த்தலும் சொற்களஞ்சியத்துடன் செயற்படுத்தலும்.

1 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

பொருட்கள்:
இயலுமாயின் A2 தாள்

ஒரு கருப்பொருள் அல்லது தலைப்புத் தொடர்பான சொற்களை ஒருங்குசேர்த்தலும் எழுதுதலும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஒருங்குசேர் அறிவையும் வளங்களையும் பயன்படுத்துவதற்கு ஒரு நல்ல முறையாகும். இச் செயன்முறை எல்லா அகவைக் குழுக்களுக்கும் வேறுபட்ட முறைகளுக்கும் பொருத்தமானதாகும். பேச்சுமொழிக்கும் எழுத்து வடிவத்துக்குமிடையே உள்ள சொற்களஞ்சிய வேறுபாடுகளை முனைப்புறுத்தவும் விளக்கமளிக்கவும் இது ஏற்ற வாய்ப்பினை வழங்குகிறது. ஒரு கருப்பொருளுடன் இணைந்த மிகவும் பொதுவாக பயன்படுத்தப்பட்ட சொற்களை எழுத்துக்கூட்டுப் பயிற்சிகளுக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தலாம். இவ்வளர்ச்சியின் ஒரு மேலான நிலையானது சிறிய தாள் ஒட்டிகள் மற்றையமொழிக் கருவிகளான வாக்கியத் தொடக்கங்கள் அல்லது குறிப்பிட்ட எழுத்துருத் தொடர்கள் என்பனவற்றை ஒருங்குசேர்த்தலை உள்ளடக்கும் (பார்க்கவும் # 15).

இன்றியமையாதது: மாணவர்கள் தாய் மொழியிலன்றி பள்ளி மொழியில் மட்டுமே ஒரு சொல்லை அறிந்துள்ளாராயின், அதே வடிவில் அவர்கள் இயல்பாக சொல்லலாம் அல்லது எழுதலாம். இது மற்றைய மாணவர்கள் மொழிபெயர்க்க துணைசெய்யவும் அல்லது அகரமுதலியை உசாவவும் உட்படுத்துகின்ற ஓர் உண்மையான கற்றல் வாய்ப்பினை வழங்குகிறது.

எடுத்துக்காட்டு:



- **சொற்களை ஒருங்குசேர்த்தல் (ஏற்கெனவே எனக்கு என்ன தெரியும்?) (முன்பள்ளியிலிருந்து)**

  ஆசிரியருடைய வழிகாட்டலில் மாணவர்கள் தமக்குத் தெரிந்த தம்முடைய தாய்மொழியில் விலங்குகள், செடிகள், வீடுகள், பள்ளி முதலிய பொருள்களைக் குறிக்கும் எல்லாச் சொற்களையும் ஒருங்குசேர்த்து பதிவுசெய்வர். ஆசிரியர் சொல்லினுடைய சரியான எழுத்து வடிவத்தை வழங்குவதுடன் மிக இன்றியமையாத சொற்களைப் பலகையில் எழுதுவார். தனியே பெயர்களை மட்டுமன்றி வினைகளையும், அடைகளையும் சேர்க்கவேண்டியது இன்றியமையாதது.

  நீட்டிப்புச் செயற்பாடுகள்:
  அ) இச் சொற்களைப் பயன்படுத்தி, சிறிய வாக்கியங்கள் ஆக்கவும், முடியுமாயின் அவற்றை எழுதவும்.
  ஆ) இவ் ஒருங்குசேர்ப்பிலிருந்து 5 அல்லது மேற்பட்ட சொற்களைக் கொண்ட ஓர் எழுத்துருவை எழுதுக. சொற்களை சிவப்பில் குறிக்குக. (இது #4 இல் உள்ள கதை புனைதலின் மாற்று ஆகும்).

- **ஒரு படத்துக்குரிய சொற்களை ஒருங்குசேர்த்தல் (முன்பள்ளி – உயர் தரம்)**

  தொடக்கப் புள்ளியாக, படம் பல விவரங்களைக் கொண்டிருக்கவேண்டும். வகுப்பில் தற்போது கையாளப்பட்ட கருப்பொருளுடன் தொடர்புற்றதாகவும் இருக்கலாம், அதாவது, பிறந்த நாடு அல்லது விளையாட்டுத்திடல் பற்றிய சுவரொட்டி. நடுத்தர உயர்தர நிலைகளில், இது குறிப்பிட்ட சொற்களஞ்சியத்தை வேண்டிநிற்பதான ஒரு படத்தை அல்லது ஒளிப்படத்தை உள்ளடக்கியதாகலாம். வகுப்பில் அல்லது குழுவில், மாணவர்கள் படத்தை விவரிக்கின்றனர் (பெயர்கள், வினைகள், அடைகளைப் பயன்படுத்தி), ஒட்டுத் துண்டுகளில் எழுதி படத்திலோ பலகையிலோ ஒட்டுவர். மாற்று: முதலில், மாணவர்கள் தமக்குத் தெரிந்ததை தனித்தனியாக விவரத்துணுக்கில் எழுதி பின்னர் மற்றவர்களுடன் ஒப்பிட்டு தம் விவரத்துணுக்குகளை பரிமாற்றம் செய்வர் புதிய சொற்கூறுகளை ஒன்றாக்குதற்கு ஓர் எழுத்து ஒப்படை தொடரவேண்டும். எடுத்துக்காட்டு: முடியுமான அளவு மிக விவரங்களுடையதாக விவரிக்கவும்/படத்துடன் இணைந்ததாக ஒரு கதை எழுதவும்/படத்திலுள்ள ஓர் ஆளின் கதாபாத்திரமாக உங்களை இட்டுக்கொண்டு அவர்களுடைய உளக்காட்சியாக படத்தை விவரிக்கவும் ("மஞ்சள் கம்பளிச்சட்டையிலுள்ள பெண் நான்தான். நான் நடுவில் நிற்கிறேன். எனக்குப் பின்...").

- **ஒரு தலைப்புக்குரிய சொற்களை தேர்ந்தெடுத்து அட்டவணை அமைத்தல்**

  மாணவர்களுக்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட கருப்பொருளில் ("நான் ஓர் உழவனாக இருந்தால்", "எங்கள் நாட்டின் அரசியல் அமைப்பு" முதலியன) எழுத்து ஒப்படைகள் இருக்கும்போது, அவர்கள் உண்மையாக எழுதுவதற்கு முன்னரே (வகுப்பில் அல்லது குழுவில்) ஒருங்குசேர்த்து இன்றியமையாத சொற்கள், தொடர்கள், வெளிப்பாடுகள் (பெயர்கள், வினைகள், அடைகள்) ஆகியனவற்றை செயன்முறைக்குப் பயன்படுத்தல் ஒரு நல்ல கருத்தாகும். பொருளுடன் தொடர்புடைய சொற்கள் மற்றும் தொடர்களின் இந்த ஒருங்குசேர்ப்பு பொருள், எழுத்தியல் தொடர்பாக மாணவர் மேலுள்ள அழுத்தத்தினை குறைத்துவிடுகிறது. மாணவர்கள் இச்சொற் பரப்புகளை தனித்தனியாக உண்டாக்கலாம் பின்னர் ஒப்பிடலாம். விளக்கப்படமுறைகள், மனவரைபடங்கள் ஆகியன இவ்வொப்படைகளுக்கு ஏற்றதாக அமைகின்றன.

2. மேலதிகமான மொழிக் கருவிகளை அறிமுகப்படுத்தல் (வாக்கியத் தொடக்கங்கள், இணைப்புச்சொற்கள் விசேட சொற்கள் முதலியன)

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

சொற்கள் மட்டுமன்றி, சில எழுத்து ஒப்படைகளுக்காக முன்னேற்பாடாக விரிவாக்கப்பட்ட மொழிக்கூறுகளை வாய்வழி அல்லது எழுத்தில் மாணவர்களிடமிருந்து ஒருங்குசேர்க்கும் முறை அவர்களின் வெளியீட்டுத் திறனை விரிவாக்கும் விலைமதிப்பற்ற பங்களிப்பாகும். அத்தகைய பட்டியல் ஒன்றினை நிறுவுதல் பேச்சு ஒப்படைகளிலிருந்தே என்பது பெரும்பாலும் அறியப்படுகின்றது (அதாவது, உரையாடல்களுக்கான பயன்மிகு தொடர்கள்), ஆனால் எழுத்து வேலைகள் தொடர்பாகவும் அதேமாதிரி பயன்பாடுடையது. மொழிக் கூறுகளின் தெரிவு உண்மையான எழுத்து ஒப்படையிலேயே தங்கியுள்ளது என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்:

- ஒரு பட்டறிவு (விடுமுறை, சிறுபயணம், வீரதீரம், முதலியன) பற்றி அறிக்கையிடு முன்னர், "அதன் பின்னர்…." என்னும் பொதுவான பன்முறைக் கையாள்கையைத் தவிர்த்துக்கொள்வதற்காக பல்வகை வாக்கியத் தொடக்கங்களை அறியவும்.



எழுத்துருவை எழுதுவதற்கு முன், காட்சிப்படு எடுத்துக்காட்டுகளை வாய்வழி பயிற்சி செய்வது ஒரு நல்ல திட்டமாகும். எழுத்து ஒப்படைகளில், மாணவர்கள் பட்டியலிலுள்ள மூன்று வாக்கியத் தொடக்கங்களை பயன்படுத்த அறிவுறுத்தப்படுகின்றனர். விவரண வேலையைத் தொடங்கு முன்னர் (ஒரு படத்தை அல்லது இயற்கை நிலக்காட்சியை விவரித்தல்) மாணவர்கள் பொருத்தமான வேற்றுமை உருபுகளுடன் இருப்பிட அடையாளங்காட்டிகள், இடங்கள், நிலைகள் ஆகியனவற்றைத் திரட்டவேண்டும். ("வீட்டுக்கு முன்னால் நிற்கின்றது…", "பின்னணியில் நான் பார்க்கமுடிகிறது…", "மலைகளுக்கு மேல்…") அல்லது ஒருவரின் உணர்வுகளைப் புலப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் ("நான் குறிப்பாக விரும்புவது…", "அது நல்லது என நான் எண்ணுகிறேன்…", "ஏன் என எனக்கு நன்றாக விளங்கவில்லை…", "கலைஞன் …என்னால் கற்பனை பண்ண முடிகிறது" முதலியன.

- எடுத்துக்காட்டாக, குடிபுகுந்தவர் என்ற வகையில் வாழ்வின் நன்மைகள், குறைபாடுகள் என்னும் பொருள் பற்றிய ஓர் எழுத்துருவை எழுத முன்னர், வெறுமனே "நான் நினைக்கிறேன்;…" எனப்பட்ட: "…என நான் நம்புகிறேன்", "என் பட்டறிவில்;…", "என் பார்வையில்;…", "என் முன்னோக்கில்…", "…என நான் நம்புகிறேன்", "…என நான் ஐயுறுகிறேன்" என்பவற்றை விட ஒருவருடைய உணர்வுகளை நம்பத்தகு முறையில் வெளிப்படுத்தக்கூடிய பெருமளவு பல்வகைத் தொடர்களைத் திரட்டவேண்டும். இங்குங்கூட, இவ்வெளிப்பாடுகளை முதலில் மாணவர்கள் வாய்வழியாகப் பயிற்சி செய்யவேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகிறது. பின்னர் அவர்களுடைய எழுத்து ஒப்படைகளில், திரட்டிய பட்டியலிலிருந்து குறைந்தது மூன்று தொடர்களையாவது பயன்படுத்தவேண்டும்.

15 சொற்கோவைக் கட்டமைப்புக்கான பரிந்துரைகள் II: இடைவெளி நிரப்பல் பயிற்சிகளுடனும் மாற்றுச்சொல் தேர்வுகளுடனும் செயற்படுதல்

இலக்கு

#14 இல் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளுக்கு மாறாக, பின்வருவன மிகத் தெளிவான வழிகாட்டல்களுடன் பெருமளவு கட்டமைக்கப்பட்டன.

1. இடைவெளி நிரப்பும் பயிற்சிகளுள்ள எழுத்துருக்கள்

1 - 9 ஆந் தரம் | 15 மணித்துளிகள்

கருவிகள்:
உருவாக்கப்பட்ட இடைவெளி நிரப்புப் பயிற்சிகள்

மந்த நிலைப்பட்ட ஆக்கவளமுடைய அணுகுமுறைக்கு மாறாக இடைவெளி நிரப்பல் பயிற்சிகளுடன் செயற்படுதல் மரபுவழிப்பட்டது. எவ்வளவு கற்றல் நடைபெற்றுள்ளது என்பதை மதிப்பிட இதனையும் பயன்படுத்தலாம். பயன்படு சூழலில் இலக்குச் சொற்களுடன் மேலதிகப் பயிற்சிப்பழக்கம் இருப்பதால் மட்டுமே இத்தகைய பயிற்சி மாணவர்களின் செயற்படு சொற்களஞ்சியத்தை பெருக்குதற்கு பங்களிக்கும்.

செயன்முறை: இல்லாத சொற்களை நிரப்பவேண்டிய இடைவெளிகளுடைய ஓர் எழுத்துருவுடன் கூடிய ஒரு பணித்தாளை ஆசிரியர் உருவாக்குகிறார். ("அறிவன் தோட்டத்தில் __________ பறித்தான்", "மற்றிட் ஸ்பெயினின் __________"). விளக்கப்படங்களையும் பயன்படுத்தலாம், அவை விவரத்துணுக்குடையனவாக அமையவேண்டும்.

அறிவன் தோட்டத்தில் ____ பறிக்கிறான்.

மற்றிட் ஸ்பெயினின் ____.

அம்மா ____ பாண் வாங்குகிறாள்.

நான் பால் ____ விரும்புகிறேன்.

ஓர் உற்சாகமான திரைப்படம் ____ காட்டப்படுகின்றது.

மருத்துவர் மருந்து ____.

____நாங்கள் கடற்கரைக்குச் செல்கிறோம்.

மறவன் ____ அணிவான்.

கொடி காற்றில் ____.

குடிக்க | படபடக்கின்றது | தக்காளிப்பழத்தை | கடையில் | குறித்துக்கொடுக்கிறார் | போருடை | கோடைகாலத்தில் | திரையரங்கில் | தலைநகர்

- எளிதாக்கப்பட்ட மாற்று: கீழேயுள்ள பட்டியலிலிருந்து பொருத்தமான சொல்லால் இடைவெளிகளை நிரப்புக. இவ்வணுகுமுறை 1ஆம் 2ஆம் தரத்தினர்க்கு ஏற்றதாகும் (எளிமையான வாக்கியங்களும் சொற்களும்), அதே வேளை உண்மையான தலைப்புகளுக்கு குறிப்பிட்ட சொற்களஞ்சியம் வேண்டப்படுகிறது. எடுத்துக்காட்டு: பயிர்ச்செய்கை, மனித உடலின் கீற்றுவடிவம், ஆறுகளின் வரைபடம் பற்றிய உண்மையான எழுத்துருக்களுக்கு சரியான சொற்களை சரியான இடங்களில் எழுதிவிடலாம்.
முன்தேவை: பொருட்கள் பற்றி முன்கூட்டியே வகுப்பில் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும்.
பின்னூட்டல்: அதன்பின் மாணவர்கள் பயிற்சிகளிலிருந்து சொற்களைப் பயன்படுத்தி, தம்முடைய வாக்கியங்களை எழுதுவர்.

III

- மிகக் கடினமான மாற்று: மாணவர்கள் தாங்களாகவே விடுபட்ட சொற்களை கண்டுபிடித்து இடைவெளிகளை நிரப்ப வேண்டும். இங்குகூட, பொருள் முன்னரே கற்றிருக்கவேண்டும் என்பது முன்தேவையாகும் (எழுத்துமொழியிலும் ஒலியமைப்பிலும் உள்ள சொற்கூறுகளும் உள்ளடங்கின). எச்சொற்கூறுகள் இடைவெளிகளில் உட்புகுத்த வேண்டுமென்பது தெளிவாயிருப்பின் இவ்வணுகுமுறை கற்றல் மதிப்பீட்டுக்கு ஏற்றதாகும் (எ-டு. தேசிய வரலாற்றுச் சொற்கூறுகள்). ஏனைய வழக்காறுகளில் பல்வேறு விடைகளுக்கு வாய்ப்புண்டு அவை கலந்துரையாடப்படலாம் (எ-டு. "திண்ணன் புதருக்குள்ளிருந்து __________, அவன் மிகவும் அச்சமடைந்திருந்தான்". விடைகள்: விரைந்தான், ஓடினான், ஒளித்துவந்தான்…).

- மாற்று "கவிதைகள் / இயைபுச் சொற்கள்": இடைவெளிகளை இயைபுபெற்ற சொற்களால் நிரப்பல். மாணவர் திறமை மட்டத்தினையொட்டி கடின நிலையினை மேலும் கூட்டலாம். எடுத்துக்காட்டு (கீழ் நிலைகளுக்கு): "அந்த வீட்டு பிள்ளை / ஒரு __________ பாடியது."

- இடைவெளி நிரப்புப் பயிற்சிகள் மொழியைக் கண்டறியும் சிறப்பான கவர்ச்சியான செயற்பாடுகளை நிறைவடையைச் செய்யும். அவ்வேளையில் இலக்கண அடிப்படையில் இன்றியமையாத கூறுகளாகிய வேற்றுமை உருபுகள், அல்லது எண் அடைகள் விடுபட்டிருப்பின் அவை இடைவெளிகளில் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: "தேனவன் ஒரு __________ யைக் கண்டான்" "நான் __________ உடைய அம்மாவுக்கு ஒரு முத்தம் கொடுக்கப்போகிறேன்." இப் பயிற்சிக்கு, ஒரு வினையின் அடிநிலை வடிவத்தினை அடைப்புக்குறிக்குள் கொடுக்கலாம், அது சரியான வடிவத்துக்கு மாற்றியமைக்கப்படவேண்டும்: "பூவிழி தாயகம் சென்றாள். அங்கு தன் உறவினரை __________ (காண்)". விளைவுகள் மாணவர்களின் முதல்மொழியில் அவர்களுக்குள்ள திறன் பற்றிய மதிப்புள்ள தகவல்களை வழங்குகின்றது.

---

2. மாற்றுச் சொல் தேர்வுகளுடன் செயற்படுதல்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
உருவாக்கப்பட்ட பயிற்சிகள்
(வலம் பார்க்கவும்)

மாற்றுச் சொல் தேர்வுகளில் சில சொற்களுக்கு நிகரான வேறு சொற்கள் (அடிக்கடி ஒருபொருட்சொற்கள்) அமைக்கவேண்டும். இது செயற்படு சொற்களஞ்சிய விரிவாக்கத்தை வழங்கும் – அதன்படி எல்லா மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர். சொற்கள் மீட்டுரைப்பதுடன் பயிற்சியும் மேற்கொள்ளப்படும்.

மாற்றுகள்: (சிக்கலைப் பொறுத்து, கீழ் மற்றும் உயர் நிலைகளுக்குப் பொருத்தமாக).

- ஆசிரியர் அட்டவணையுள்ள ஒரு தாளினை வழங்குகிறார், அதன் மேற்பகுதியில் ஒரு வாக்கியம், எடுத்துக்காட்டாக, "இன்று பெரிதும் பனி பொழிகின்றது" அல்லது "என் அம்மா பெரும்பாலும் நீலக் கண்ணாடிக் குவளையில் தண்ணீர் குடிப்பாள்" என்பது அமைந்திருக்கும். அதில் ஒவ்வொரு சொல்லுக்கு அல்லது வாக்கியத்துக்கு ஒரு பத்தி இருக்கின்றது. அட்டவணையின் அடுத்த பத்தியில் மாணவர்கள் அதேமாதிரி வாக்கியங்களை அல்லது வாக்கியப் பகுதிகளை (அல்லது எதிரான) பின்வருமாறு எழுதவேண்டும்: "நேற்று சிறிது மழை பெய்தது", "உன் அக்கா சிவப்புக் கண்ணாடிக் குவளையில்தான் தண்ணீர் குடிப்பாள்".

- ஆசிரியர் ஒரு சிறிய எழுத்துருவை வழங்குகிறார் (½ பக்கம்; பரந்த கிடைநிலை) பின்வரும் அறிவுறுத்தல்களுடன்: "கீழ்க்கோடிடப்பட்ட எல்லாச் சொற்களுக்கும் (அல்லது எல்லா பெயர்களுக்கும், வினைகளுக்கும், அடைகளுக்கும்) ஏறத்தாழ அதே கருத்துள்ள சொற்களைப் பதிலிடுக."

- மேலுள்ளதுபோல், ஆனால் எல்லாச் சொற்களுக்கும் அவற்றின் எதிர்ப்பதங்களைப் பதிலிடுக என்னும் அறிவுறுத்தல்களுடன், (எடுத்துக்காட்டு: "சிறிய நாய் → பெரிய பூனை", "அவன் காட்டுக்குள் ஓடினான் → அவள் சதுப்பு நிலத்தில் ஊர்ந்துசென்றாள்"). ஒரு பொழுதுபோக்கு நீட்டிப்பு, இணையர்களாகச் செயற்படுதலுக்கு ஏற்றது, "எதிர் எழுத்துருக்கள்" எழுதுதல் அதாவது, ஒரு கதை அல்லது செய்திப் பத்திரிகைக் கட்டுரை முழுவதையும் எதிர்க்கருத்தில் மீள எழுதுதல்.

- மேலுள்ளதுபோல், ஆனால் இலக்கணம் சார்ந்தது: "எல்லாப் பெயர்களையும் ஒருமையிலிருந்து பன்மைக்கு மாற்றி வினைகளை இயைபுபடச் செய்க!", "எல்லா வினைகளையும் நிகழ்விலிருந்து இறப்புக்கு மாற்றுக" "அடைகளைச் சிறப்பு அடைகளாக மாற்றுக (நல்லது → மிகநல்லது), முதலியன.

- நடையியல் கற்பித்தல்: மாணவர்கள் ஓர் எழுத்துருவைப் பெறுகின்றனர் (ஆசிரியரால் ஆக்கப்பட்டது), அது ஒரே சொற்களைப் பலதடவை திரும்பக்கூறல்களையும் மற்றும் பிழைகளையும் கொண்டுள்ளது (எ-டு. ஒவ்வொரு வாக்கியமும் "அதன் பின்னர்" என்று தொடங்குகிறது, பொதுச் சொற்களாகிய "போ", "செய்" பெருந்தொகையாக உள்ளன. மாணவர்கள் இணையர்களாக எழுத்துருவை அணுகி, மேம்படுத்தப்பட்ட எழுத்துருக்கள் ஒப்பிடப்படுகின்றன.

- மாற்றுச் சொல் பயிற்சியின் மிக விரிவாக்கப்பட்ட வடிவமானது ஒரு கதையை அல்லது எழுத்துருவை தரமான மீள் எடுத்துரைத்தல் ஆகும். இப் பயிற்சியில், மாணவர்கள் மூலத்தை 1 – 3 மணித்துளிகள் கேட்டபின்னர் ஓர் எழுத்துருவை (கதை, உண்மையான எழுத்துரு, கிளைக்கதை, சிறிய பெண்கடவுட்கதை) தமக்கேயுரிய சொற்களில் மீளச் சொல்லுதல். இதனுடைய ஒருவகைச் செயற்கைத் தன்மையால், இவ்வடிவம் ஒரு பயிற்சி என்ற முறையில் பெரிதும் கவர்ச்சியானதல்ல, ஆனால் சொற்களஞ்சியத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் நன்மை பயப்பதாகும். தொடர்பாடல் மற்றும் ஊக்குவிக்கும் மாற்றுகள்: ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒரு சிறிய எழுத்துருவை (அதாவது, ஒரு செய்தித்தாள் கட்டுரை) பெறுகின்றான்/பெறுகின்றாள். அவர்கள் அதை இரண்டு தடவை வாசித்து, பின்னர் கருத்தைத் தமக்கேயுரிய சொற்களில் மீட்டுரைக்கின்றனர். மூலக் கட்டுரைகள் எண்ணிடப்பட்டு வகுப்பறையின் வலது பக்கத்தில் காட்சிப்படுத்தப்படும். மீள் எடுத்துரைப்புச் செய்யப்பட்ட பதிப்புகள் எழுத்துக்களுடைய (அ, ஆ…) சிட்டைகளுடன் இடது பக்கத்தில் தொங்கவிடப்படும். மாணவர்கள் மீள எடுத்துரைப்புச் செய்யப்பட்ட எழுத்துருக்களைப் படித்து மூல எழுத்துருக்களுடன் பொருத்திப்பார்ப்பர். அவர்கள் விடப்பட்டவைகள் அல்லது பிழையாக மீள் எடுத்துரைக்கப்பட்டவை பற்றிக் குறிப்புகள் எடுப்பர். ஒரு குழுக் கலந்துரையாடலுடன் பயிற்சி நிறைவுறும்.

- # 16.3 யும் பார்க்கவும்: இணை எழுத்துருக்கள்/பிறப்பாக்க எழுத்து.

---

3. வேறு பரிந்துரைகள்

- விளையாட்டு சொற்களஞ்சியத்தை கட்டியெழுப்ப, பார்க்கவும் மேலே # 6.3 இல் அ, ஆ, இ – கதைகள் (எடுத்துக்காட்டு: அணில் ஆலமரத்திலிருந்து இறங்கியது. ஈ எறும்பை ஏற்றியது).

நகரம்	தொழில்	வினை	விலங்கு	அடை	புள்ளிகள்
வவுனியா	வணிகம்	வரைதல்	வரிக்குதிரை	வடிவான	5
கனோபர்	கற்பித்தல்	கட்டு	கழுதை	கரிய	5
பேர்ண்	பேராசிரியர்	பேசு	–	பேர்	4

- தரமான "புவியியல் விளையாட்டு" க்கும் அதுவே பயன்படும். அதில் விளையாடுபவர்கள் நெடுங்கணக்கின் ஒவ்வொரு எழுத்துக்கும், நகரம், நாடு, ஆறு, என்பனவற்றை எழுதவேண்டும் (விதிகள்: எல்லா விளையாட்டாளர்களும் தலைப்புகளுடனான, எ-டு. நகரம், நாடு முதலியன, ஒரு விளக்கப் படத்தினைப் பெறுவர். ஒரு மாணவன்/மாணவி நெடுங்கணக்கு எழுத்துக்களை உரத்து சொல்வான்/சொல்வாள். இன்னொரு மாணவன்/மாணவி நிறுத்து" என உரத்து கூறுவர், உடனே அவ்வாறு தேர்ந்தெடுத்த எழுத்துடன் தொடங்கும் ஒரு சொல் தேர்வுசெய்யப்படுகிறது. விளக்கப்படங்கள் திருத்தியமைக்கலாம், கட்டாயமாக, ஒரு பெயர், வினை, அடை, ஓர் உணர்வு ஆகியன உள்ளடக்கப்படவேண்டும்.

16 எழுத்துருக் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்துக்குமான பரிந்துரைகள்

இலக்கு

இல. 9இல் "கால வரிசை", "திட்ட முன்னுரை / பெரும்பகுதி / நிறைவு" என்பவற்றில் விவரிக்கப்பட்ட உத்திகளுக்கு மேலாக பின்வரும் செயற்படுமுறைகள் எழுத்துருவைக் கட்டுதலையும் கட்டமைத்தலையும் திட்டமிடல் மற்றும் பயிற்சித்தல் மீது கவனம் செலுத்துகின்றன. அவை உத்திகளை கவர்ச்சியுள்ள சூழல்களில் பயிற்சி செய்ய மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் நோக்குடையன.

1. வெட்டிய எழுத்துருக்களுடன் செயற்படல்

2 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கீற்றுகளாக (ஒரு கீற்றில் ஒரு வாக்கியம்) வெட்டப்பட்ட எழுத்துருக்களை ஆசிரியர் (5 – 10 வயதுக்குப் பொருத்தமான வாக்கியங்கள்) பகிர்கிறார். தெரிவுசெய்யப்பட்ட எழுத்துரு தெளிவான தொடர் கட்டமைப்புடன் செயல் சார்ந்ததாக இருக்கவேண்டும். பணி: வாக்கியங்களை வகைப்படுத்தி எழுத்துருவை திரும்ப ஒருங்கு சேர்த்து ஒட்டுக. நிகழக்கூடிய மேலதிக பணி: கூடுதல் வாக்கியங்களாலும் கீற்றுகளாலும் எழுத்துருவைப் பெருப்பிக்குக, அல்லது கீற்றுகளை எழுத்துருவின் முன்னுரை / பெரும்பகுதி / நிறைவு என்னும் பகுதிகளில் எவற்றைச் சார்ந்தன என அடையாளமிடுக.

---

2. படக்கதைகளுடன் செயற்படல்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
வெட்டிய படக்கதை

தனியாக அல்லது இணையராக, மாணவர்கள் ஒரு வெட்டிய படக் கதையை (4 – 8 படங்கள்) பெறுகின்றனர். அவர்கள் படங்களைச் சரியான தொடரில் ஒழுங்கமைத்து, ஒரு தாளில் அவற்றை ஒட்டி, ஒரு படத்துக்கு 1 – 2 வாக்கியங்களால் நிகழ்வுகளை விவரிக்கப் பணிக்கப்பட்டனர். நிகழக்கூடிய மேலதிக பணி: ஒரு முன்னுரையும் முடிவுரையும் எழுதுக. படக்கதைகளுக்கு மூலங்கள்: இதழ்கள், செய்தித்தாள்கள், நகைச்சுவைகள், இணையம், படக்கதை அட்டைகள் (எ.கா. Verlag Schubi Lernmedien, Schaffhausen, in vielen Schulhäusern vorhanden).



3. ஒரு எழுத்துருவுக்கு இணைநிலை எழுத்துரு எழுதுதல்,

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
எழுத்துருக்கள் (வலம் பார்க்கவும்)

மாணவர்கள் ஓர் எழுத்துரு வார்ப்பினைப் (ஒரு சிறு கதை அல்லது கவிதை) பெறுகின்றனர். அவ் வார்ப்பினை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் ஒரு மாற்றினை எழுதுவர். மாற்று என்பது மாற்றி அமைக்கப்பட்ட கதைத் தலைமைப் பாத்திரமாகலாம் (குலைக்கும் நாய், கத்தும் பூனைக்குப் பதிலாக). ஏனைய நல்ல பயன்பாடுகள் ஒரு வார்ப்புக்கு அமைய மாற்றப்பட்ட கடிதங்கள், மன்னிப்புக்கள், விண்ணப்பங்கள் முதலியன. இணைநிலை எழுத்துருக்களுடன் செயற்படல் குறிப்பாக திறன்குறை மாணவர்களுக்கு பொருத்தமானதாகும், ஏனெனில் மொழி ஆக்கத்துக்கான கடின நிலை கணிசமான அளவு குறைவாகும். மேலே 15.2 எடுத்துக்காட்டையும் பார்க்க: மாற்றுச் சொல் தேர்வு, அத்துடன் எம்.லூத்தின் பிறப்பாக்க எழுத்து பற்றிய சிறந்த கட்டுரையினை http://www.kompetenzzentrum-sprachfoerderung.de/fileadmin/user_up-load/didacta-Version.pdf என்பதில் பார்க்கவும்.

---

4. எழுத்துருக் கட்டமைப்பை பகுப்பாய்வு செய்தல்

4 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
எழுத்துருக்கள்
(வலம் பார்க்கவும்)

மாற்று 1: மாணவர்கள் ஒன்று அல்லது பல எழுத்துருக்களைப் (தெளிவாகக் கால ஒழுங்கில் கட்டமைக்கப்பட்ட) பெறுகின்றனர், அதனுடன் ஒரு தாளும், அதில் அவர்கள் காலவரிசையைக் கீறுவர் (பார்க்கவும் #9). பின்னர் அவர்கள் எழுத்துருவிலிருந்து திறவுச் சொற்களை கால ஒழுங்கில் வெவ்வேறு முனைகளில் காலவரிசையில் எழுதுவர்.

மாற்று 2: பல்வகைப்பட்ட பெருஞ்சவால் மிகுந்த எழுத்துருக்களைப் பெறுகின்றனர். எழுத்துருக்களை அவர்கள் குறைந்தது மூன்றாகப் பிரித்து முன்னுரை, பெரும்பகுதி, நிறைவு என்பவற்றை வெவ்வேறு நிறங்களால் அடையாளப்படுத்துவர்.

---

5. தொடக்கத்துக்கு முடிவு காணலும் முடிவுக்கு தொடக்கம் காணலும்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
எழுத்துரு
தொடக்கங்களுடன்
தாள்களுடன்

மாணவர்கள் எழுத்துரு ஒன்றின் தொடக்கத்தினைப் (எ-டு. ஒரு கதையின் முதல் வாக்கியங்கள் அல்லது ஒரு செய்தித்தாள் கட்டுரையின் முதல் பந்தி) பெறுவர். தனியாக, இணையராக, மூன்றுபேர் கொண்ட குழுக்களாக செயற்படும்போது, அவர்கள் எழுத்துருவின் மிகுதிப் பகுதியை எழுதுவதுடன் அதன் பெரும்பகுதியையும் முடிவையும் அல்லது சுருக்கத்தையும் தெளிவாக உயர்வுபடுத்த வேண்டும். எழுத்துரு நீண்டதாயின் துணைத் தலைப்புகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். முடிவில், அவர்கள் தங்கள் எழுத்துருவின் கருத்துப்பாங்குகளை எடுத்துரைப்பர். இத்தகைய பல்வேறுபட்ட கருத்துப்பாங்குகளை எடுத்துரைக்கும்போது அது பெரும்பாலும் உற்சாகமூட்டுவதாக அமையும், ஏனெனில் அவை எல்லாமே ஒரு பொதுத் தொடக்கத்திலிருந்தே மேற்கிளம்பின.

மாற்று 1: மாணவர்கள் ஓர் எழுத்துருவின் முடிவினைப் பெறுகின்றனர், அவர்கள் எழுத்துருவின் தொடக்கத்தையும் பெரும்பகுதியையும் எழுதவேண்டும்.

மாற்று 2: "இடையீட்டுக் கதைகள்": மாணவர்கள் ஓர் எழுத்துருவின் (கதை, நகைச்சுவை, உண்மை ஆவணம்) தொடக்கத்தையும் முடிவையும் பெறுவர், எழுத்துருவின் பெரும்பகுதியை கண்டுபிடிக்கவேண்டும்/எழுதவேண்டும்.

---

6. விளையாட்டு விதிகள், கைவினைப் பொருட்கள் செய்யும் அறிவுறுத்தல்கள், சமையல் செயன்முறைக் குறிப்புகள் எழுதுதலும் சேர்த்தலும்

2 - 9 ஆந் தரம் | 40 மணித்துளிகள்

விளையாட்டு விதிகள், தொடர்விசைகளைக் கட்டுதல், கைவினை அறிவுறுத்தல்கள், செயன்முறைக் குறிப்புகள் முதலியன போன்று தெளிவான தொடர்வரிசையில் செயல் சார்ந்த விதிகளை எழுதுதற்கு குறிப்பாக தெளிவான, தொடர்வரிசை வடிவமும் எழுத்துருக் கட்டமைப்பும் வேண்டியதாகும், இல்லாவிடில் எழுத்துரு வாசகனுக்கு வழிகாட்டுவதாகவன்றி குழப்புவதாக அமையலாம். அத்தகைய எழுத்துருவின் தரத்தினை அதன் செயல்திறன் அல்லது அது எப்படி நன்றாக "செயற்படுகிறது" என்பதனால் அளவிடலாம். செய்முறைகள், மன்ற அறிவுறுத்தல்கள் ஆகிய எழுத்துருக்களை ஒரு வகுப்பாகத் திரட்டுதல் குறிப்பாக ஒரு மகிழ்வுறும் கருத்திட்டமாகும், ஏனெனில், எழுத்துருக்கள் பயனுடையன மற்றும் நடைமுறைத்தன்மையுடையன. வழக்கமான வகுப்புகளின் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இருமொழி திரட்டுகள் செய்தல் பயனுள்ள வேறு கருத்திட்டங்களாகும். (கீழே #21 ஐயும் பார்க்கவும்)

III

17 எழுத்து நடையினை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள்: I ஒன்றை கண்டுபிடித்தலும் அதை கையாளுதற்குமான ஒருவகை கற்பித்தல் முறை

இலக்கு

நடையியல் மற்றும் எழுத்து நடை என்பவற்றின் பல கூறுகள் பல்வகை எழுத்து ஒப்படைகளின் உள்ளார்ந்த பகுதிகளாக அமைகின்றன. பின்வரும் பரிந்துரைகள் மொழியியல் நடையியல் எழுத்துரு வகையான நிலையில் அதாவது, வாக்கிய, முழு எழுத்துரு மாற்றுகளில் வெளிப்படையான பயிற்சி வாய்ப்புகளை வழங்கும், தங்களுடைய முதல் மொழியில் பல்வேறு முகப்புக் கூறுகளையும் பல் வகை எழுதுதலையும் மாணவர்கள் அறிந்துகொள்ள வைப்பதே நோக்கமாகும்.

1. எழுத்துருக்களை விரித்தல் அல்லது சுருக்குதல் பற்றி பயிற்சித்தல்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
சொற்கள் எழுதப்பட்ட முன்னரே ஆக்கப்பட்ட அட்டைகள் (நீண்ட வாக்கியங்கள் 8 – 10 சொற்கள்). மாணவர்கள் தம் வாக்கியங்களை எழுத வெற்று அட்டைகள் அல்லது தாள் கீற்றுக்கள்.

விரித்தற் பயிற்சி மேலதிகக் கூறுகளைச் (அடைகள், தொடர்கள், (உட்பிரிவுகள்) சேர்ப்பதனால் ஒரு வாக்கியத்தினை மேலும் விரிவடையவைக்கும் நோக்குடையது. எடுத்துக்காட்டாக, "ஒரு பெண் பாடினாள்" → "ஒரு தொழின்முறைப் பாடகியாக வருவதற்கு ரோமில் படித்த அழகாக உடையணிந்த இளம்பெண் அலங்கரிக்கப்பட்ட அரங்கில் அழகான பாடல்களைப் பாடினாள்" எழுத்துருக்களை சுருக்கும்போது எதிர்நிலை இடம்பெறும். அதாவது, வாக்கியங்களை அவற்றின் இன்றியமையாத அடிப்படைக்கு சுருக்குதல். எடுத்துக்காட்டு: "தன் உரிமையாளரை விட்டுத் தப்பி ஓடிய தவிட்டு நிற நாய் பெரிய எலும்பைத் தின்கிறது." → "ஒரு நாய் தின்கிறது".



எழுத்துருக்களை விளையாட்டு முறையில் விரிக்கவும் சுருக்கவும் பயிற்சி செய்வதால், வாக்கிய நிலையில் மொழி மற்றும் நடை தொடர்பான ஆய்வுகளுக்குரிய வாய்ப்புகளுக்கான "ஓர் உணர்வினை" மாணவர்கள் உருவாக்குவர்.

மாற்றுகள்:

- ஆசிரியர் முதலில் வகுப்பில் ஒன்று அல்லது பல எடுத்துக்காட்டுகளை விளக்குவார். பின்னர், ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் (அல்லது இணையர்) ஒரு சிறு வாக்கியத்தையும் சில தாள் கீற்றுக்களையும், வாக்கியத்தை விரிவாக்கி, மிக நீண்ட வாக்கியமாக எழுதும்படியான அறிவுறுத்தலுடன் பெற்றுக்கொள்வர். (விரித்தல் ஆய்வு).
- பின்னர் மாணவர்களுக்கு "நாய் குரைக்கிறது" என்னும் ஒரு சிறிய வாக்கியம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அந்த வாக்கியத்துடன் ஓர் உறுப்பினைப் (அடை, தொடர்கள், முதலியன) பின்வருமாறு சேர்க்கவேண்டும்: "பசியுள்ள நாய் குரைக்கின்றது", "பசியுள்ள நாய் நாள் முழுவதும் குரைக்கின்றது", "பசியுள்ள நாய் உணவு இன்மையால் நாள் முழுவதும் குரைக்கின்றது", முதலியன. இது வாய்மொழியாக, பின்னர் எழுத்து வடிவில் பயிற்சி செய்யப்படும்.

- சுருக்கல் பயிற்சிக்கு கதைகள் முதலியனவற்றிலிருந்து வாக்கியங்களைத் தேர்ந்தெடுக்கலாம், இதனூடாக தேவையற்ற எல்லா உறுப்புகளும் தவிர்க்கப்படுகின்றன.
- சிறிய வாக்கியங்களை மட்டுமே உள்ள ஒரு முழுமையான எழுத்துருவை உருவாக்க விரித்தற் பயிற்சியினை பயன்படுத்தலாம். செயற்பாடு: எழுத்துருவின் நீளத்தைக் குறைந்தது மூலத்தின் நீளத்தைவிட இரண்டு மடங்காகப் பெருக்க வேண்டும்.

---

2. வாக்கியங்களை இணைக்கவும் சுருக்கவும் பயிற்சிகள்

3 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
சிறிய வாக்கியங்களுடன் முன்னேற்பாடாகச் செய்த கையேடுகள்

வாக்கியங்களை இணைக்கும், வேறு வேறாக்கும் பயிற்சிகள் தொடரியல், நடையியல், மொழித்திறமை தொடர்பாக மாணவர்களின் மொழித் தகைமையினை மேலும் கூட்டுகின்றன. விளங்கிக்கொள்ளலையும் வலுப்படுத்தலையும் மேலும் கூட்டுதற்கு இப் பயிற்சிகள் மீண்டும் மீண்டும் நடத்தப்பட வேண்டும். சொற்கூறுகளான "இணைப்பு/சொற்களைப் புணர்த்தல்" அல்லது "துணை உட்பிரிவுகள்" இவ்வேளையில் அறிமுகம் செய்ய வேண்டியதில்லை, ஏனெனில், செய்முறைப் பயன்படுத்தலே இன்றியமையாதது.

மாற்றுகள்:

ஆசிரியர் பல சிறிய இணைவாக்கியங்கள் உள்ள ஒரு தாள் துண்டினைப் பகிர்கிறார். எடுத்துக்காட்டு: "எனக்குப் பசிக்கிறது. ஏதாவது உண்ண விரும்புகிறேன்", "எனக்குக் களைப்பாயுள்ளது. நான் நீண்ட நேரம் உறங்கவில்லை", "அவன் எனக்கு வாக்குறுதியளித்தான். என்னுடன் அவன் திரைப்படத்துக்கு வருவதாக.", "நான் குழம்பிவிட்டேன். உண்மையாக நீங்கள் இதை விளங்கிக்கொண்டீர்களா?", "நீங்கள் விரையவேண்டும். நீங்கள் ஓட்டத்தில் வெல்வீர்கள்.", "பிந்திவிட்டோம். நாம் நம்முடைய ஊர் வீட்டுக்கு வந்தோம்." ஒரு தொடக்க உரையாடலுக்குப் பின்னர், வாக்கியங்களை ஒன்றாக இணைக்கக்கூடிய இணைப்புகளை வகுப்பு திரட்டுகிறது, அவை: மற்றும், பின்னர், உம், ஏனெனில், அப்படியாயின், அது, முன்னர், நேரம், அதனால், பதிலாக, முதலியன. அடுத்து மாணவர்கள் பொருத்தமான இணைப்புகளுடன் வாக்கிய இணைகளை ஒன்றாகச் சேர்த்து எழுதிக்கொள்வர். விரிவாக்கம்: வகுப்பில் தாம் உருவாக்கிய நிரலிலுள்ள இணைப்புகளுடன் (சிவப்பு நிறத்தில் கீழ்க் கோடிடப்பட்டன) மாணவர்கள் தம்முடைய வாக்கியங்களை அமைப்பர். மாற்றாக: தனித்தனி மாணவர்கள் ஒருவருக்கொருவர் இணை வாக்கியங்களை எழுதி அவை பின்னர் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.
வாக்கியங்களைப் பிரித்து வேறாக்கல்: இப்பயிற்சியில், மாணவர்கள் நீண்ட வாக்கியங்களைப் பெறுகின்றனர், அவற்றை இரு தனி வாக்கியங்களாகப் பிரிக்கவேண்டும். எடுத்துக்காட்டு: "ஒரு வாய் கூட என்னால் விழுங்க முடியவில்லை, ஏனெனில் கீரை எனக்குப் பிடிக்காது".

---

3. தாள்கீற்றுகளோடு மேம்படுத்தப்பட்ட பயிற்சிகள்

3 - 6 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் 3 – 4 தாள் கீற்றுகள்

பின்வரும் பயிற்சிச் செயற்பாடுகள் நடையின் வெவ்வேறு கூறுகளை செயல் சார்ந்த விரைவுக் கற்றலுடன் இணைக்கும்.

செயல்முறை:

அ) ஆசிரியர் ஒரு படத்தைக் காட்சிப்படுத்துகிறார். ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் 3 – 4 தாள் கீற்றுகளைப் (A3 தாள் கிடைநிலையில் 4 – 5 கீற்றுகளாக வெட்டப்பட்டது) பெறுவான்/பெறுவாள், படத்தின் ஒரு கூறு பற்றி ஒவ்வொரு கீற்றிலும் ஒரு வாக்கியம் எழுதுவான்/எழுதுவாள்.

ஆ) பின்னர் தாள் கீற்றுகள் ஒருங்குசேர்க்கப்பட்டு முழுமையாக மாற்றி மாற்றிக் கலக்கப்படும். மாணவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிகின்றனர். ஒவ்வொரு குழுவும் 9 – 12 கீற்றுகளைப் பெறுகிறது. இக் கீற்றுகளுடன் படம் பற்றிய ஓர் எழுத்துருவினை அவர்கள் உருவாக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது தங்கள் எழுத்து நடை பற்றி அவர்கள் ஆழமாக ஈடுபடவேண்டும்: திரும்பத்திரும்பப் பயன்பட்ட வாக்கியங்களையும் வாக்கியத் தொடக்கங்களையும் சொற்கோவையையும் வெட்டி நீக்கல் அல்லது பதிலிடல். எழுத்துரு வளர்ச்சி மிகுந்த காப்பாகக் கருதப்படவேண்டும். தேவைப்படின், குழு மேலும் வெற்றுத் தாள் கீற்றுகளைப் பெற்று தம்முடைய எழுத்துரு நன்றாக அமைய வாக்கியங்களைச் சேர்ப்பர்.

இ) கீற்றுகள் எல்லாம் அவற்றின் நிறைவு ஒழுங்கில் ஒன்றாக ஒட்டப்பட்டபின், குழுக்கள் தம் எழுத்துருக்களை வகுப்புக்கு எடுத்துரைப்புச் செய்வர். வகுப்பின் ஏனையவர் உண்டாக்கிய எல்லா எழுத்துருக்களையும் விளக்குவர்.

---

4. உயர்தர எழுத்துரு வகைகளுடன் ஆய்வுப்பயிற்சி

5 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
மாற்றினைப் பொறுத்து
(வலம் பார்க்கவும்)

முழு எழுத்துருக்களையும் உள்ளடக்கியதாக கவர்ச்சியுள்ள அறிவாற்றலுள்ள பயிற்சிகள் பல்வேறு வடிவங்களில் அமையக்கூடியவை. எனினும் இவ்வகை ஆய்வுகள் முதல் மொழி மற்றும் அதன் நடையியல் முகப்புக்கூறுகள் என்பவற்றில் ஓரளவு நிலைப்பட்ட உணர்வு வேண்டப்படுகிறது. இத்தகு உணர்வு இல்லாத நிலையில் தேவையான தகவலும் வழிகாட்டலும் வேண்டப்படுகின்றன. பல்வகை எழுத்துருக்கள் (பாடல்கள், உண்மை எழுத்துருக்கள், தேவதைக் கதைகள், குறுஞ்செய்திகள், நகைச்சுவை, முதலியன) பற்றிய அறிவு தொடர்பாக இதே நிலையே வேண்டப்படுகிறது / உண்மையானதாகும்.

நடையும் தொனியும், மாற்றுகள்:

- முறைசார்பிலும் தொனியிலும் பல்வகை நிலைகளில் பொருத்தமான ஒரு சிறிய எழுத்துருவின் வேறுபாடுகள். நிகழ்த்தக்கூடிய பணிகள்: "நண்பர் / உங்கள் பேரன் பேர்த்திமார / உங்கள் பிறந்தநாட்டுத் தூதுவராலயத்திலிருந்து புத்தாண்டுப் பரிசாக நீங்கள் ஒரு நூலைப் பெற்றுள்ளீர்கள். பொருத்தமான முறைசார் நிலையில் அவர்களுக்கு ஒரு நன்றிக் குறிப்பு எழுதுக." (பேச்சுமொழி உள்ளிட்ட மிகு முறைசார் எழுத்துமாழி முதல் முறைசார் மொழிக்கேற்றபடி தொனி வேறுபடும்.)
- ஐந்து போக்குவரத்துக் குறியீடுகளைத் தெரிவுசெய்க (எ.கா. நில், ஒருவழிப்பாதை, திரும்பத் தடை முதலியன). அக் குறியீடுகள் உண்மையில் எவற்றை உணர்த்துகின்றன என்பதை எழுத்தில் புலப்படுத்துக (எ.கா. "நீங்கள் இங்கு நிறுத்தவேண்டும்", "இங்கு, நீங்கள் ஒரு வழியில் மட்டுமே பயணிக்கலாம்", முதலியன.) இப்பொழுது இக்கூற்றுகளை வெவ்வேறு அளவையிலான முறைசார் / மதிப்புடை முறையில் வடிவமைக்குக. இது தொடர்பாக நீங்கள் பேச்சுமொழியையும் கொச்சை மொழியையும் பயன்படுத்தலாம். (தயவுசெய்து நிறுத்துவீர்களா? நன்றி! என்பது பின்வரும் மிகுந்த முறைசாரா முறைக்கு எதிரானது: "முட்டாளே வாகனத்தை நிறுத்து". இதற்கேற்ற வேடிக்கையான ஒரு சுவரொட்டி தயாரிக்குக!) (அளவு A3 அல்லது A4)
- செய்தித்தாள் சிறு கட்டுரை ஒன்றினை, ஒரு கவிதையை அல்லது வேறொரு வகையான ஒரு சுருக்க எழுத்துருவை எடுக்கவும். மூன்று அல்லது நான்கு பேர் உள்ள குழுக்களில், யார் எந்த நடையில் (எ.கா. பேச்சுமாழி, கொச்சைமொழி, நகைச்சுவை மொழி, நேர்த்தியான மொழி, "கடுமையான" மொழி) இந்த எழுத்துருவை மீள் எழுத்துருவாக்கம் செய்வார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். உங்கள் கருத்துப்பாங்குகளை எழுதி ஒருவர்க்கொருவர் படித்துக்காட்டவும்!

எழுத்துரு வகைகள் பலவிதமானவை

- ஒரு சுருக்க எழுத்துருவை எடுக்கவும், எ.கா. ஒரு செய்தித்தாள் கட்டுரை. ஒரு வகுப்பாக அல்லது அதேநிலையான குழுவாக, பல்வகை எழுத்துருக்களை ஒரு கவிதையாக, உண்மை எழுத்துருவாக, ஒரு தேவதைக் கதையாக, ஒரு தந்திச் செய்தியாக, ஒரு குறுஞ்செய்தியாக, ஒரு நகைச்சுவையாக, ஒரு ஒலிப்பதிவாக அல்லது ஒரு பரபரப்பான அறிக்கையாக மாற்றுவது பற்றி எண்ணுக. யார் (தனியாக அல்லது இணைகளாக) எந்த எழுத்துரு வகையை ஆக்குவார் என்பது பற்றி முடிவுசெய்க. முடிவாக, பல்வகை எழுத்துருக் கருத்துப்பாங்குகளை கலந்துரையாடி ஒப்பிடுக.
- உங்கள் பிறந்த நாட்டோடு தொடர்பான தலைப்புகள் தொடர்பாக இதேமாதிரி முயற்சி செய்க. எடுத்துக்காட்டாக, புகழ்மிக்க ஒருவரின் வாழ்க்கைக் கதையிலிருந்து காட்சிகளை ஒரு வானொலி நாடகமாக மாற்றுக, அல்லது இயற்கை நிலக்காட்சி ஒன்றுபற்றி கவிதை எழுதுக, வரலாற்று நிகழ்வுகள் பற்றி ஒரு தந்திச்செய்தி அல்லது செய்தித்தாள் கட்டுரைகளைக் கண்டுபிடிக்குக.

- உங்கள் பாரம்பரியமொழியில் எழுதப்பட்ட வெவ்வேறு எழுத்துருக்களைத் திரட்டி ஒரு கண்காட்சி அமைக்குக. ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஓர் எழுத்து மாதிரியினை வகுப்புக்குக் கொண்டுவந்து (ஒரு கவிதை தொடக்கம் ஒரு நகைச்சுவை, புனைகதையல்லா எழுத்துரு, ஒரு குறுஞ்செய்தி, அல்லது மின்னஞ்சல் வரை) இம்மொழி மாதிரியின் தனிச்சிறப்பு என்ன என்பதை விளக்கவேண்டும்.

எழுத்து நடையைக் கற்பிக்க பின்வரும் முக்கிய பரிந்துரைகள் எடுத்துக்காட்டாக அமையும்:

- #4 இல் விவரிக்கப்பட்ட பரிந்துரைகள் கதை புனைதல், கதை பின்னுதல், முதலியனவும் எழுத்து நடையைக் கற்பிக்க இயல்பாகத் தாமாகவே துணை நல்குகின்றன.
- மாற்றுச் சொற் பயிற்சிகளைப் பழக 15.2 இலுள்ள பரிந்துரைகள் சொற்கள் தொடர்பாக கற்பித்தல் நடைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளை வழங்குகின்றன.
- 16.3 இல் விவரிக்கப்பட்ட (பிறப்பாக்க எழுத்துகள்) இணைநிலை எழுத்துருக்களுடன் செயற்படுதலும் நடையியல் தொடர்பாக மிகுந்த மதிப்புடையதாகும். கதை பின்னுதல் மாதிரியையும் நோக்குநிலைக்குப் பயன்படுத்தல், பின்னர் அதிலிருந்து வாக்கியக் கூறுகளை தெரிந்தெடுத்தல், மாணவர்களுக்கு மிகக் குறைந்த அழுத்தமுடையதாகவும் மிக அரிய எழுத்து நடைப் பயிற்சியை வழங்குகிறது.
- எழுத்து நடையைக் கற்பிப்பதற்கு இன்னொரு மக்கள் வயப்பட்டதும் பயனுடையதுமாகிய செயற்பாடு "வாய்வழி எழுத்து மணித்தியாலங்கள்" எனப்படுவதாகும்: மாணவர்கள் உண்மையில் தாமாக ஓர் எழுத்துருவை எழுதுவதில்லை; மாறாக ஒரு தலைப்புப் பற்றி எவ்வாறு ஓர் எழுத்துருவை உருவாக்கலாம், கட்டமைக்கலாம் என்பது பற்றி விரிவாகப் பேசுவர். மாற்று: மாணவர்கள் ஏற்கெனவே எழுதப்பட்ட எழுத்துரு பற்றிப் பேசுவர் (பெரும்பாலும் சில காலத்துக்கு முன்னர், அல்லது மற்றைய வகுப்பு மாணவனால்/மாணவியால் எழுதப்பட்டது).

III

18 எழுத்து நடையினை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள்: II தெளிவாகவும், துல்லியமாகவும், விறுவிறுப்பாகவும் எழுதுதலும் சுருக்குதலும்

இலக்கு

தம் முதல்மொழியில் பரந்த நடையியல் திறமையினை மேம்படுத்துவதற்குரிய வாய்ப்பினை மாணவர்களும் பெற வேண்டும். இது பகுதி அல்லது துணைத்திறன்களை உள்ளடக்கும், அவையாவன, "சரியாக விவரணம் செய்யும் திறன்", "தெளிவாகச் சொல்லும் திறன், உற்சாகமூட்டும் வகையில் சொல்லுதல்" ‘முதலியன. எனினும், பொருத்தமான தெளிவுறுத்தலும் பயிற்சியும் இல்லாமல், "சரியாக, தெளிவாக, கவர்ச்சியான முறையில" என்னும் சொற்கூறுகள் மாணவர்களுக்கு எவ்வித துணையுமற்ற உருவிலாக் கருத்துகளாகவும் சொற்களாகவுமே இருக்கும். பின்வரும் மதியுரைகளின் நோக்கு என்னவெனில், இச்சொற்கூறுகளை உண்மையானவையாகவும் பயன்படுவனவாகவும் வழங்குதலுடன், அவற்றைப் பயிற்சி செய்தற்கு பொருத்தமான பயிற்சிகளையும் எழுத்து வாய்ப்புகளையும் ஏற்படுத்துவதாகும்.

1. தெளிவான விவரணங்கள்: பலவிதமானவை

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
விற்பனைச் சீட்டு, ஏனைய பொருட்கள், மாற்றினைப் பொறுத்து (வலம் பார்க்கவும்).

- ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் கடைப்பற்றுச்சீட்டு ஒன்றை (அல்டி, கொஸ்ற்கோ, வல்மார்ட், டப்ளிக்ஸ், முதலியன) வகுப்புக்கு கொண்டுவந்து A3 தாளின் நடுப்பகுதியில் ஒட்டுவான்/ஒட்டுவாள். மாணவர்கள் பற்றுச்சீட்டைச் சுற்றி, பற்றுச்சீட்டிலுள்ள பொருட்களால் என்ன செய்யலாம் என்பதை முடிந்தவரை துல்லியமாக எழுதுவர். பற்றுச்சீட்டிலுள்ள பொருட்களும் விளக்கமும்/விவரணமும் ஓர் அம்புக்குறியால் தொடுக்கப்படுகின்றன. (கருத்து "Language Window", writing, page 29 என்பதிலிருந்து).

[illegible]	[illegible]
வாதுமை பருப்பு	5.40
லெற்றூஸ்	2.10
உப்பு	0.95
மா	1.80
கைக்குட்டைகள்	5.20
முட்டைகள் (வேறுபாடிலா)	3.60
வாட்டுப் பாண்	2.80
இரப்பர் கையுறைகள்	3.80
உருளைக்கிழங்கு	5.60
தோல்சீவுகருவி	3.85
மணம் நீக்கும் குச்சி	3.85
ஸ்பொன்ஜ் (3 சிறுகட்டு)	7.45
துருவிய பாற்கட்டி	3.60
மொத்தம்	53.95
காசு	60.00
மிகுதி	6.05

எங்களிடம் பொருட்கள் வாங்கியதற்கு உங்களுக்கு நன்றி.

முட்டைகளை பலவிதமாக சமைத்து உண்ணலாம். அவை கடினக்கொதியாக அல்லது 3 மணித்துளி மென்கொதியாக உண்ணலாம். பொரித்த அல்லது பொரித்துக் கிளறியது மிக நன்றாயிருக்கும். எனக்கு மிக விருப்பமானது காளானுடன் முட்டைப் பொரியலாகும். கேக்குகள் விசுக்கோத்துகள் செய்வதற்கும் முட்டைகள் பயன்படுகின்றன.

என் அம்மா என் தம்பிக்கு பிறந்தநாள் கேக் செய்ய மா பயன்படுத்துவாள். மிகுதி மாவில் பிற்ஷா மாப்பிசைவு செய்வாள், விழாவுக்கு வந்த பிள்ளைகள் தமக்கு விருப்பமான பொருட்களை அதன்மேல் வைப்பர்.

தோல் சீவுகருவி உருளைக் கிழங்கு, கரட் போன்ற பல வகைக் காய்கறிகளின் தோலுரிக்கப் பயன்படுகிறது இதனால் பெருமளவு வீணாக்கப்படாது,

- ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் ஒரு பொருளைக் (அதாவது, ஒரு துணி அல்லது ஒரு சிறிய தகரம்) கொடுக்கிறார். மாணவர்கள் அப்பொருளின் பெயரைக் குறிப்பிடாமல் (!) "பொருள் XY" எனக் குறிப்பிட்டுத் தம் பொருட்களை முடிந்த அளவு விவரித்து எழுதுவர். பின்னர் பொருட்கள் வகுப்பறையின் இடப்பக்கத்திலும் எழுத்து விவரணங்கள் வலப்பக்கத்திலும் வைக்கப்படும். எழுத்துருக்களுக்கு எண்களிடப்படும், பொருட்களுக்கு எழுத்துடனான சிட்டையிடப்படும். இதனால் மாணவர்கள் விவரணங்களையும் பொருட்களையும் சரியாக நேர்ப்படுத்த முயற்சிப்பர். (எ.கா. 3 = C) (மேலே #7.2 ஐயும் பார்க்க.)

- மாற்றுகள்: வேறுபட்ட விலங்குகளின் (அடைத்த பொம்மைகள், படங்கள்) படங்களை விவரித்தல் அல்லது "விற்பனைக்கு" அல்லது "தொலைந்தவையும் கண்டுபிடிக்கப்பட்டவையும" விளம்பரங்களுக்குப் பின்னணிக் கதை.

- ஆசிரியர் அல்லது மாணவன்/மாணவி ஒரு சிறிய சைகையை அல்லது செயற்பாட்டை (எ.கா. ஓர் ஒதுக்கிடத்திலிருந்து ஒரு நூலை எடுப்பதாக) மாணவர்கள் அச்செயற்பாட்டை முடியுமான வரை மிக விரிவாக விவரிக்க முயல்வர். அவர்களின் விவரணங்கள் பின்னர் ஒப்பிடப்பட்டு கலந்துரையாடப்படும். மாற்று (மிகு கடினம்): இரண்டு மாணவர்கள் ஒரு சிறிய காட்சியினை நடிக்கின்றனர் (எ.கா. வாழ்த்துக்கூறல்); மற்ற மாணவர்கள் அதனை முடிந்தவரை மிகுந்த விவரத்துடன் விவரிக்கின்றனர்.

- எங்கள் பூட்டிக்கு எப்படி ஒரு கைப்பேசியைப் பயன்படுத்தல் அல்லது எப்படி ஒரு கணினியைப் பயன்படுத்தி இணையத்துக்குள் நுழைதல் என்பதை விளங்கப்படுத்தல் வேண்டும் என நாம் கற்பனை பண்ணுவோம். இணையர்களாக, மாணவர்கள் அவ்விவரணங்கள் எவ்வளவு பயன்பாடானவை என்பதை தேர்ந்தறிய முற்படுவர்.

---

2. தெளிவாகவும் உயிரூட்டமுள்ள முறையிலும் விளக்குதல்: பலவிதமானவை

2 - 9 ஆந் தரம்

20 மணித்துளிகள்

- ஆசிரியர் மாணவர்களுக்கு தெளிவாகவும் கவர்ச்சிகரமாகவும் எழுதுதற்குப் பின்வரும் "செய்முறையை" வழங்குகின்றார்: "கதையின் தலைமை மாந்தர்(கள்) போல உங்களை ஆக்கிக் கொள்ளவும். அவர்கள் எவ்வாறு உணர்வார்கள், எண்ணுவார்கள், அவர்களுடைய கவலைகள், நம்பிக்கைகள், என்பன பற்றி கண்களை மூடிக்கொண்டு எண்ணிப்பார்க்கவும். இப்பொழுது இதனை உங்கள் எழுத்துருவில் விவரிக்கவும்." மாணவர்கள் பின்னர் வெவ்வேறு பொருத்தமான தலைப்புகளைப் பயன்படுத்தி "செய்முறையை" எழுதுவதற்கு முன்னர் வாய்மொழியூடாகப் பயிற்சிசெய்வர். எடுத்துக்காட்டுகள்: "எங்கள் உணவு மேசையில் ஒரு கலந்துரையாடல்", "என் பெற்றோருடைய பிறந்த நாட்டில் ஒரு பட்டறிவு", "என் அம்மம்மாவின் இளம் வயதுக் கதைகள்".

- இதே மாதிரி தொடரும் இன்னொரு "செயற்பாடு" பின்வரும் அறிவுறுத்தல்களுடன் பயிற்சி செய்வதற்கு: "நீங்கள் எழுதுவதற்கு முன்னர் உங்கள் கண்களை மூடவும். உங்கள் கதை பற்றி எண்ணி, அதனை ஒரு திரைப்படமாக உங்கள் மனத்தில் கற்பனை பண்ணவும். இப்பொழுது எல்லாவற்றையும் முடிந்தவரை மிகுந்த விரிவாக எழுதுக.

- தன்கூற்றுப் பயன்பாடு பெரும்பாலும் மிகுந்த தெளிவுக்கு இட்டுச்செல்லும் என்பது முன்னறிவூட்டாகும்: "தன்கூற்றைப் பயன்படுத்துக, கதைமாந்தர் தங்களுக்குள் பேசிக்கொள்ள விடுக!" இதுகூட, முதலில் வாய்மொழியாகச் செய்து பின்னர் எழுதவும்.

- சிலவேளைகளில் படர்க்கைக்கு மாறாக தன்மையில் எழுத்துருக்களை எடுத்துரைக்கும்போது அவை "உயிருடையனவாகவும்" கவர்ச்சியுடையனவாகவும் அமைகின்றன. இதனையும் மேலுள்ள பரிந்துரைகளையும் மாணவர்கள் பின்பற்றுவரேல், அவர்கள் வெற்றியுடையவர்களாவர்.

- படக் கதைகள் தெளிவான உயிர்ப்புள்ள எழுத்துப் பயிற்சியை மேற்கொள்ள தக்க வாய்ப்பினை வழங்குகின்றன. இந்த வகையில் மாணவர்கள் கருத்துகளைத் தேடிச்செல்லும் நிலையிலிருந்து ஆறுதல் பெற்று ஈர்க்கத்தக்க ஓர் எழுத்துருவினை எழுதுதற்குக் கருத்தூன்றவைக்கும். எழுத்துருக்கள் பின்னர் மாணவரிடையே ஒப்பிடப்பட்டு கலந்துரையாடப்படுவது இன்றியமையாததாகும்.

- கீழே (18.3 மற்றும் 21) விவரித்தபடி தெளிவான கவர்ச்சியுள்ள எழுத்து நடையைப் பயிற்சிசெய்யக் கதைகளை மீட்டெடுத்துரைத்தல் மதிப்புள்ள செயல்திறனுடைய வாய்ப்புடையதாகும்.

III

3. சரியாக மீளச் சொல்லுதலும் சுருக்குதலும்: மாற்றுகள்

3 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
மீளக் கூறக்கூடிய மாதிரிக் கதைகள்

கதைகளை மீளச்சொல்லல் பொதுவாக வாழ்க்கையில் மற்றும் பள்ளி இரண்டிலும் முறையாக இடம்பெறுவதுண்டு. ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி அல்லது ஒரு கனவு பற்றிய அறிக்கைகள் தொடக்கம் ஒரு தொலைபேசி செய்திச் சுருக்கம் வரை, பந்தியமைத்தல் தொடக்கம் முடிந்த வரையான மிக விவரமான மீட்டுருவாக்கம் வரையான பல்வேறுபட்ட வடிவங்களில் இதனைக் காணலாம், இதனூடாக நடையியற் கூறுகள் கையகப்படுத்தப்பட வேண்டும். எழுத்து நடை தொடர்பாக, மீளச் சொல்லுதலின் நன்மை என்னவெனில், மாணவர்கள் தம்முடைய தன்கதை (அது ஏற்கெனவே தரப்பட்டுள்ளது) கட்டுருவாக்கத்திலிருந்து விடுபட்டு அதனால் எழுத்துமொழிக் கூறுகளில் மட்டும் கருத்தூன்றலாம். எடுத்துக்காட்டுகளும் நடக்கக்கூடியனவும்:

- வழிகாட்டும் கருத்தாடல்: பள்ளியிலும் ஒவ்வொருநாள் வாழ்விலும் எங்கே ஏன் கதைகளை மீளச் சொல்லலும் எழுத்துருக்களைச் சுருக்குதலும் இன்றியமையாததாகின்றன என்பதை ஆராய்க. மாணவர்கள் இத்தகைய எழுத்துரு வகைகள் ஒவ்வொரு நாள் வாழ்விலும் (நகைச்சுவைக்கும் வம்புப்பேச்சுக்கும் கூட) எவ்வாறு பொருத்தப்பாடுடையதாயிருக்கும் என்பதை அறிந்திருக்கவேண்டும். அதன்பின், உண்மையான நடைமுறை வாழ்வுக் கதைகளை மீளச் சொல்லுதல் எழுத்துருக்களைச் சுருக்குதலுக்கான (கடந்த இரு நாட்களில்) எடுத்துக்காட்டுகளைத் திரட்டுக: யார் (மீளச்) சொல்லியது? என்ன? யாருக்கு?

- ஆசிரியர் வகுப்புக்கு 2 – 3 தடவை ஒரு சிறு (அல்லது நீண்ட) கதையைப் படிக்கிறார். மாணவர்கள் பின்னர் கதையினை இயன்ற அளவு மீள எடுத்துரைக்கிறார்கள், ஆனால் 1 – 2 பிழைகளை மறைக்கின்றனர். கதைகள் பின்னர் படிக்கப்பட்டு வினா கேட்கப்படுகிறது: பிழைகளை நீங்கள் கண்டுபிடிப்பீர்களா? (# 7.4 ஐயும் பார்க்க)

- முழு உளக்காட்சி மாற்றத்துடன் மீள் எடுத்துரைப்பு: மாணவர்கள் ஒரு கதையைப் படிக்கின்றனர் (எ.கா. ஒரு தேவதைக் கதை, ஒருவர் தன் இலக்கியத்திலிருந்து ஒரு புராணக்கதை அல்லது ஒரு கிளைக்கதை). கதையை அப்படியே மீளச் சொல்லுதலுக்குப் பதிலாக, மாணவர்கள் கதையிலிருந்து குறிப்பிட்ட ஒரு கதைமாந்தரின் கதாபாத்திரத்தில் தம்மை இட்டு தம் முழு உளக்காட்சியுடன் அதனை மீள எடுத்துரைப்பர். எடுத்துக்காட்டாக, "Rotkäppchen" என்னும் தேவதைக் கதையை ஓநாயின் முழு உளக்காட்சியினூடாக எடுத்துரைக்கலாம்.

- அதே கதையினை வெவ்வேறு வகையான எழுத்துரு வடிவங்களில் மீளச் சொல்லலாம்: 17.4 ஐயும் பார்க்க.

- தகவலைத் திரும்பச் சொல்லுதலும் மிகச் சிறு வடிவங்களில் சுருக்குதலும் பொதுவாக தொலைபேசிச் செய்திகளுடன் பயிற்சிசெய்வதாகும், இது சிலவேளைகளில் மாணவர்கள் தம் பெற்றோருக்குச் செய்வதொன்றாகும். இதனை விளையாட்டாகப் பயிற்சி செய்யலாம், இதன்படி ஆசிரியரும் மாணவர்களும் ஒரு தொலைபேசி உரையாடலில் பங்கேற்று பின்னர் குறுஞ்செய்தியினை எழுதுவர்

- தொடர்புள்ள, சுருக்குதல் மற்றும் குறிப்புகளிலிருந்து விளங்கிக்கொள்ளுதல் என்பவற்றிலிருந்து பெறக்கூடிய நன்மை தேர்வு எடுத்தலாகும். இது வகுப்பில் குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளுடன் கலந்துரையாடி பயிற்சிக்கவேண்டும். எ.கா. மாணவர்கள் தங்களுடைய கடைசிப் பாடத்திலிருந்து மிகவும் இன்றியமையாத குறிப்புகளை எழுதலாம். பின்னர் தங்கள் விரிவுரை குறிப்புகளை ஒப்பிட்டு விமரிசித்துக் கலந்துரையாடுவர்.
  மாற்று: ஆசிரியர் விரிவுரை ஒன்றினை ஆற்றுவார் அல்லது ஒரு கல்விப் படக்காட்சியைக் காட்டுவார், பின்னர் மாணவர்கள் 10 – 15 குறிப்புகளில் மிக வேண்டிய பண்புகளைச் சுருக்கவேண்டும்.

4. விறுவிறுப்பாக விளக்குதல்: பலவிதமானவை

4 - 9 ஆந் தரம் | 35 மணித்துளிகள்

கருவிகள்:
முடியுமாயின், கருப்பொருள்/தலைப்பு உடனான, பகிரக்கூடிய ஒரு படக் கதை. (வலம் பார்க்கவும்)

- வாய்மொழி முன்னேற்பாடு: "கவர்ச்சியான" மற்றும் "சலிப்பான" சொற்கூறுகள் பற்றிக் கலந்துரையாடல். இப்பிரிவுகள் உண்மையில் எதனைக் கருதுகின்றன; எங்கள் எழுத்துத் தொடர்பாக என்ன தொடர்பினை ஏற்படுத்துகின்றன? ஒருங்கிணைப்புச் செயற்பாடு: ஆசிரியர் வகுப்புக்கு ஒரு (சிறிய) கவர்ச்சியான கதையையும் ஒரு சலிப்பான எழுத்துருவினையும் படிக்கிறார் (அல்லது எழுத்தில் கொடுக்கிறார்). ஒன்றினை கவர்ச்சியானதாகவும் மற்றதைச் சலிப்பாகவும் ஆக்குவது என்ன? ஆய்வு: சலிப்புள்ள எழுத்துருவை எப்படி மிகக் கவர்ச்சிகரமாக ஆக்கலாம்? எழுத்துருவை இன்னும் கவர்ச்சியாக ஆக்குதற்கு மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்குக, பின்னர் உங்கள் வேலையை ஒப்பிடுக.
- கவர்ச்சி எழுத்துக்கான பின்வரும் "செய்முறை" யை (ஒரு துண்டுப்பிரசுரமாக) மாணவர்கள் பெற்றுக்கொள்வர்:
  - படிப்பவர்களின் கவனத்தைக் கவரும் வகையான வாக்கியத்துடன் உங்கள் எழுத்துருவினைத் தொடக்குக (எ.கா. "அன்றைக்கு எல்லாமே பிழையாகப்போய்விட்டது", "அச்சமடைந்த நாய் என் அருகில், மிகவும் அருகில் வந்தது")
  - எல்லாவற்றையும் ஒரேயடியாக வெளியிடவேண்டாம். படிப்பவர்களுக்குத் தொடக்கத்தில் அவர்களின் விருப்பினை உருவாக்கச் சில தடயங்களை மட்டும் கொடுக்கவும்! ("இன்று நான் பெற்ற பட்டறிவினை, விரைவில் நான் மறக்கமாட்டேன். அது ஓர் பயங்கரமான விலங்கினை விடக் கொடியதான ஒன்றுடன் தொடர்புற்றது")
  - உங்கள் எழுத்துருவில் ஆளின் உணர்வுகள், அச்சங்கள், நம்பிக்கைகள் என்பவற்றை விவரிக்கவும். ("அச்சத்துடன் நடுங்கிய அவள் எண்ணினாள்:" என்னைக் காப்பாற்றுதற்கு ஏதாவது நம்பிக்கை உண்டா?)
  - உங்கள் எழுத்துருவில் படிப்பவர்களை நேரடியாக விளித்து வினாக்களால் குறுக்கிடுக. (எடுத்துக்காட்டு: "இத்தகைய அச்சமூட்டும் நிலைமையில் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?")
  - மிகுந்த உணர்வூட்டும் பகுதியை அல்லது விளைவினை கதையின் முடிவை அண்மிக்கும்வரை கட்டி எழுப்பவும்.
  - படிப்பவரைக் கிளர்ச்சியுறச் செய்யக்கூடிய ஓர் உணர்வூட்டும் ஒரு தலைப்பினை உங்கள் எழுத்துருவுக்கு எண்ணுக, பின்வருமாறு ("துருக்கியில் ஓர் இடர்", அல்லது "புலி என்னைத் தின்னப்போகின்றதா?").

மாணவர்களுக்கு தற்போது கதைகளுக்கான ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட புறக்குறிப்புகள் வழங்கப்படுகின்றன. அவற்றால், இச் "செய்முறை" யைப் பின்பற்றி, கவர்ச்சிகரமான எழுத்துருக்களை அவர்கள் எழுதவேண்டும். எடுத்துக்காட்டு: ஒரு பொருத்தமான படக்கதை; தலைப்பு "ஓர் அதிர்ச்சிப் பட்டறிவு" அல்லது "அப்பொழுது நான் உண்மையாக அச்சமடைந்தேன்". எழுத்துருக்களை எழுதிய பின்னர், மாணவர்கள் அவற்றைப் படித்து ஒப்பிட்டு "செய்முறை" எவ்வாறு நன்றாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கலந்துரையாடவும்.

- மாணவர்கள் கவர்ச்சியான தலைப்புப்பொருள்கள், தலைப்புத்தொடர்கள் மற்றும்/அல்லது வாக்கியத் தொடக்கிகள் (1 – 3 வாக்கியங்கள்) ஆகியனவற்றின் திரட்டினை உருவாக்குகின்றனர். அவற்றுடன் இணைந்த எழுத்துருக்களை அவர்கள் வகுப்பில் அல்லது வீட்டு ஒப்படையாக எழுதுவர். இவ்வாறு திரட்டப்பெற்ற எழுத்துருக்களை கம்பியால் இணைத்து அல்லது கட்டி நூலாக ஆக்கலாம். ("எங்கள் திகிலூட்டும் கதைகள்", "உணர்வூட்டும் கதைகள்", முதலியன).

III

19 தொடரியலையும் உருபனியலையும் முன்னேற்றத்திற்கான குறிப்புகள்

இலக்கு

தொடரியல் மற்றும் உருபனியல் தொடர்பான இலக்கணத் தலைப்பு உள்ளிட்ட எழுத்துருக்களை எழுதும்போது கற்றல் மற்றும் எதிர்வினை நிகழுதற்கு உண்மையான வாய்ப்புகள் உள்ளன. பின்வரும் பரிந்துரைகள் இக்கற்றல் வாய்ப்புகளை எவ்வாறு உருவாக்கி அவற்றின் முழு வளப்பயன்பாட்டுக்குப் பயன்படுத்துவது பற்றி விளக்குகின்றன. எழுத்தியல் பற்றிய பொருள் இங்கு விளக்கப்படமாட்டாது, ஏனெனில் எழுத்துக்கூட்டலுக்கான விதிகள் பல்வகை மொழிகளுள் வேறுபட்டுள்ளன.

1. தொடரியல்

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
வெட்டப்பட்ட வாக்கியங்களுடைய சிறிய அட்டைகள் (வலம் பார்க்கவும்) முடியுமாயின் கழிவறைத் தாள் சுருள், பெயர்ச்சொல், வினைச்சொல் பட்டியல் முதலியன, (வலம் பார்க்கவும்)

வாக்கியக் கட்டலுக்கும் தொடரியல் திறமைக்குமான உள்ளார்ந்த உணர்வை வளர்க்கவும் கற்பித்தலுக்குமான மதிப்புள்ள வாய்ப்புகள் #17 லுள்ள பயிற்சிகளிலும் செய்முறைத் தேர்வுகளிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பின்வரும் பயிற்சிகள் குறிப்பாக இளைய மாணவர்களுக்கு (1ஆம் – 2ஆம் தரம்) பொருத்தமானவை, இதனால் அவர்களுக்கு வாக்கியங்களுக்கான உணர்வையும் மற்றும் வாக்கியக் கட்டுமானத்தைத் தாமே கண்டுபிடித்தலையும் ஊக்குவிக்கின்றன. (பொருள்கள் ஆசிரியரால் அல்லது மூத்த மாணவர்களால் ஏற்படுத்தப்படும்):

- ஆசிரியர் எளிமையான வாக்கியங்களை தாள் கீற்றுகளில் எழுதி, பின்னர் அவற்றை சொல்லுக்குச் சொல்லாக அன்றி உட்பகுதிகளாக வெட்டுகிறார். ஒன்றாகச் சேரும் தாள் துண்டுகளை ஒன்றாக ஒரு தாள் இறுக்கிப்பிடியால் ஒன்றிணைக்கப்படும். மாணவர்கள் (தனியாக அல்லது இணையாக) ஒன்று அல்லது பல வெட்டப்பட்ட வாக்கியத் தொகுப்புகளைப் பெறுவர். அவர்கள் பணி அவற்றை ஒன்றாக இட்டு செயற்பாட்டு வாக்கியங்களை ஆக்குவதாகும் (முடியுமாயின் அவற்றை எழுதுவதுமாகும்). எடுத்துக்காட்டு:

போக | சாலினி | பள்ளிக்கு | விரும்புகிறாள்

சாலினி | பள்ளிக்கு | போக | விரும்புகிறாள்

சில வேளைகளில் பல்வகை நிகழக்கூடிய மாற்றுகள் இருப்பதால், அவை முற்றாக ஆராயப்படவேண்டும் (மொழி உணர்வு!). எடுத்துக்காட்டு:

பள்ளிக்கு | போக | சாலினி | விரும்புகிறாள்

போக | சாலினி | விரும்புகிறாள் | பள்ளிக்கு

- தனியாக அல்லது இணையராக, மாணவர்கள் மூன்று சொற் பட்டியல்களைப் பெறுகின்றனர்: 1.) 10 – 12 பெயர்கள் (எழுவாய்), 2.) 10 – 12 வினைகள், 3.) 10-12 வேற்றுமைத் தொடர்கள் அல்லது வினையடைகள்:

நாய் என் அம்மா மனிதன் விமானி பந்து பிள்ளை கோமாளி பசு மாணவன் ஆந்தை	பறக்கின்றது நீர் ஊற்றுகிறான் மேய்கிறது சமைக்கிறாள் எழுதுகிறான் குரைக்கிறது ஓட்டுகிறான் விளையாடுகிறது இருக்கிறான் வேட்டையாடுகிறது
குறிப்புப் புத்தகத்தில் இரவில் புற்றரையில் ஒற்றைச்சில் மிதியுந்து முழுநாளும் நூடில்ஸ் மலர்ப் பாத்திக்கு மகிழுந்தில் அறையில் நீரில்	

"வாக்கியக் கணினி" அமைப்பதற்கு கழிவறைத் தாளின் உட்பகுதி அட்டையின் புறத்தில் A4 அளவுத் தாளில் வெட்டப்பட்ட தாள் கீற்றுகளை சுருளாக ஒட்டவும்.

மாணவர்கள் மூன்று பட்டியல்களையும் நகர்த்தி சொற்களை வரிசைப்படுத்தி பொருளுள்ள எல்லா வாக்கியங்களையும் எழுதுகின்றனர். மாற்று: பட்டியல்களை சொற்கள் ஒரு வரிசையில் வர ஒரு சுருளில் (ஒரு வட்ட, அல்லது அட்டைச் சுருள்) சுற்றவும். மாணவர்கள் பின்னர் பொருளுள்ள எல்லா வாக்கியங்களையும் எழுதுவர். பல்வகை சொற் சேர்க்கைகளை உருவாக்குதற்கு கீற்றுகளை சுருளைச் சுற்றி நகர்த்த, மாணவர்கள் பொருளுள்ள மற்றும் பொருளற்ற வாக்கியங்களை இந்த "வாக்கிய கணினி" ஊடாக பிறப்பிக்கலாம்.



- மேல்வகுப்பு மாணவர்களுக்கு மேற்படி பயிற்சிகளை மேலதிக வாக்கியக் கூறுகளை (பெயரடை, வினையடை, முதலியன) சேர்த்து பெருப்பிக்கலாம்.

2. உருபனியல் (சரியான வடிவங்கள்)

3 - 9 ஆந் தரம் | 25 மணித்துளிகள்

கருவிகள்:
சுருக்கமான எழுத்துரு அல்லது மாதிரி (வலம் பார்க்கவும்)

15.2 இல் விவரிக்கப்பட்ட மாற்றுச் சொல் பயிற்சிகளும் பொருத்தமாகச் சரிசெய்யப்படின் 3 ஆம் – 6 ஆம் தர மாணவர்களுக்கான இலக்கணச் செயற்பாட்டுக்கு மிக பொருத்தமானதாகும்.

எடுத்துக்காட்டுகள்:

- இணையர்களாக வேலைசெய்ய மாணவர்கள் ஓர் எழுத்துருவைப் பெறுகின்றனர். அவர்கள் பணியானது எழுத்துருவை மீள எழுதுவதும் எல்லா பெயர்களையும் பன்மை வடிவமாக மாற்றுதலுமாகும். கலந்துரையாடலுக்கு உள்ளீடாகும் வினாக்கள்: என்ன இலக்கண மாற்றத்தை இது ஏற்படுத்தியது? (விடை: வினைகளும் பெயர்களும் எண்ணில் இயைபுபெறவேண்டும்!).
- மாற்றுகள்: எல்லா பன்மை வடிவங்களையும் ஒருமையாக மாற்றுக; எல்லா வினைகளையும் நிகழ்காலத்திலிருந்து இறந்த காலத்துக்கு மாற்றுக. மாறாகவும் அமைக்குக. இயல்பாகவுள்ள அடைகள் எல்லாவற்றையும் சிறப்படைகளாக மாற்றுக.

III

- இடைவெளி நிரப்பும் பயிற்சிகளின் ஒரு சிறப்பான கவர்ச்சியான செயற்பாடு என்னவெனில் அவை மொழித் தகைமையினை மதிப்பிடப் பயன்படுத்துவதாகும். (பார்க்க #15.1 குறிப்பிட்ட இலக்கணக் கூறுகளுக்கான இடைவெளி நிரப்புப் பயிற்சிகள்). பொதுவான பிழைகள் வலுக்குறைவான இடங்களைச் சரி செய்வதற்கும் மேலதிக பயிற்சிக்குமான தேவையினையும் உணர்த்தும்.
- பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட, இலக்கு நோக்கிய எழுத்து ஒப்படைகள் ஊடாக எழுத்துப் பகுதியில் குறிப்பிட்ட இலக்கணச் சிக்கல்கள் பெரும்பாலும் சரிசெய்யப்பட்டு பயிற்சிசெய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டுகள்:
  - பயிற்சிக்குரிய பாடப்பரப்பு: இறந்த காலங்கள். செயற்பாடு: நீங்கள் இளமையாக இருந்தது பற்றிய ஒரு கதை எழுதவும். (தலைப்பு பரிந்துரை: 3 வயதில் நான் என்ன செய்தேன்; ஒரு தேவதைக் கதை; வரலாற்றிலிருந்து ஏதாவது…)
  - பயிற்சியின் இலக்கு: பெயரடைகள். செயற்பாடு: உங்களுக்கு விருப்பமான உணவு பற்றி விவரிக்குக (முடிந்த அளவு பெருமளவு விவரங்களையுடைய பசியூட்டும் விவரணம்; அல்லது ஒரு படத்தின் மிக விரிவான விவரணம், முதலியன.)
  - பயிற்சியின் இலக்கு: விருப்பு நிலை. உண்மைக்கு எதிரான நிலைகளை பின்வரும் தலைப்புகளுடன் விவரிக்குக "நான் ஒரு மந்திரக்காரனானால்/மந்திரக்காரியானால்", "இனிமேல் பள்ளிகள் இல்லாவிட்டால்", "என் பேரன் பேர்த்தியர் குடிபெயர்ந்திராவிட்டால".

குறிப்பிட்ட எழுத்துச் சூழல்களுக்கான பரிந்துரைகள்

IV

20 பல்வகை எழுத்து வடிவங்கள்: குறிப்பாகப் பாரம்பரியமொழிக் கல்விக்குப் பொருத்தமான எழுத்துச் சூழல்கள்

இலக்கு

முன்னர் பரிந்துரைக்கப்பட்ட பெருவாரியான பரிந்துரைகள் தாய்மொழிக் கல்வி வகுப்பறையிலே இலகுவாக நடைமுறைப்படுத்தலாம். பின்வரும் எழுத்துப் பரிந்துரைகள் பாரம்பரியமொழி கற்பித்தலுடன் உயர்நிலையான சிக்கல்களை நெருங்கி நோக்குகின்றன. இதனால், அவை பிறந்த நாடு அல்லது இரு பண்பாடுகள் மற்றும் மொழிகள் இடையே வாழுதல் என்னும் கருப்பொருள்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையன, இது தங்கள் தாயக மொழியில் பாரம்பரியமொழி வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களின் வழக்கமான பட்டறிவாகும்.

1. விடுகதை எழுத்துருக்கள்

4 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

மாணவர்கள் ஓர் ஒப்படையை பெறுகிறார்கள், அதில் தனித்தனியாக தங்கள் பிறந்த நாட்டின் வரலாறு, பண்பாடு அல்லது புவியியல் ஆகியவற்றிலிருந்து ஒரு நிகழ்வினை, அந்நிகழ்வையோ, பெயரையோ அல்லது இடத்தையோ பெயரால் குறிப்பிடாமல் விவரிப்பர். பணியினை முதலில் வகுப்பு முழுவதும் வாயூடாக பயிற்சி செய்யவேண்டும். எழுத்துருக்கள் எழுதப்பட்டபின், அவை திரட்டப்பட்டு மாணவர்களிடையே பரிமாறப்படுகின்றன, அவர்கள் புதிர்களை விடுவிப்பர்.

---

2. அறிக்கைகள், சுவரொட்டிகள், எடுத்துரைப்புகள்

3 - 9 ஆந் தரம்

இப்பெரிய கருத்திட்டம் பல பாடங்களுக்கு மேல் நீளலாம். தம்முடைய பிறந்த நாட்டின் ஒரு பெயர்பெற்ற ஒருவரைப் பற்றிய ஓர் அறிக்கையை, ஒரு சுவரொட்டியை அல்லது ஓர் எடுத்துரைப்பினை மாணவர்கள் உண்டாக்குதற்குப் பணிக்கப்படுகின்றனர். பல்வேறுபட்ட எடுத்துரைப்பு முறைகள் பற்றி முதலில் வகுப்பில் கலந்துரையாடப்படும் (எ.கா. சுவரொட்டி அல்லது ஏற்புடைய பணித்தாளுடன் எடுத்துரைப்பு). கடினநிலை, உண்மையில், அகவைப் பொருத்தத்துடனானது. இரண்டு அல்லது மேற்பட்ட இரணைப் பாடங்கள் இக்கருத்திட்டத்துக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் (எடுத்துரைப்புகள் உட்பட). கருத்திட்டத்தினை நீண்ட விடுமுறைகளுக்கு முன்னரே அறிவித்தல் நல்ல எண்ணமாகும். அதனால் மாணவர்கள் முன்னேற்பாடு செய்யவும் பொருள்களைத் திரட்டவும் நேர வாய்ப்பு ஏற்படுகிறது.

---

3. பணித்தாள்கள், புனைகதையல்லா எழுத்துருக்கள், வினாவிடைகள் முதலியன

4 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

பாரம்பரியமொழி வகுப்புகளுக்கு பணித்தாள்கள், புனைகதையல்லா எழுத்துருக்கள், படங்கள், கணினி எடுத்துரைப்புகள் முதலியவற்றைப் ஆசிரியர் ஏற்படுத்துவதற்குப் பதிலாக மாணவர்களும் சிற்சில வேளைகளில் அதனைச் செய்யலாம். இவ்வாறு செய்வதால், அவர்கள் பெருந்தொகை பொருள்கள் பற்றி கற்கவும் விமர்சிக்கவும் முடியும். பணி எதனை விளைவிக்கின்றது என்பதை துல்லியமாக முன்கூட்டியே முடிவு செய்வது மிகவும் இன்றியமையாததாகும், எனினும் (எ.கா. ஒரு தலைப்பை முடித்துவிட ஒரு பணித்தாளையும் வினாவிடையையும் ஏற்படுத்தவும்).

---

4. நேர்காணல், கற்பனை நேர்காணல்கள்

5 - 9 ஆந் தரம்

மாணவர்கள் முன்னர் கலந்துரையாடப்பட்ட ஒரு தலைப்புத் தொடர்பாக நேர்காணல்களை நடத்தி, அதனை எழுத்தில் ஆவணப்படுத்தி வகுப்புக்கு எடுத்துரைக்கவேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளனர். செய்யக்கூடிய தலைப்புகளாக, பெற்றோர்கள் மற்றும் பேரன் பேர்த்திமார் தம்முடைய தாயகத்தில் தம் பிள்ளைப்பருவ நினைவுகள், தாயகத்தில் தன் அகவையுள்ள ஒருவரை ஓய்வு நேரம் அல்லது எதிர்காலம் பற்றிய கண்ணோட்டங்கள் பற்றி ஒரு நேர்காணல், புகலிட நாட்டு மக்களின் இனவுணர்வு, பிறநாட்டவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பு பற்றிய தலைப்புகளில் ஒரு நேர்காணல், என்பவை சேர்க்கக்கூடியவை. எவ்வாறு ஒரு நேர்காணலை நடத்தலாம் என்பது பற்றி மாணவர்களுடன் முன்கூட்டியே கலந்துரையாடுவதும் பயிற்சிப்பதும் இன்றியமையாதது: வினாக்களை வடிவமைப்பதும் கேட்டலும் (ஆம்/இல்லை வினாக்களன்றி, திறந்த/ஆய்வு வினாக்கள்: "...பற்றிச் சொல்லுங்கள்", மற்றும் நேர்காண்பவர் என்னும் முறையில் முடிந்தவரை மிகக் குறைந்த அளவு பேசுக. மேலும், மறுமொழிகளை எவ்வாறு ஆவணப்படுத்தவேண்டும் என்பதை விளக்குக, சொல்லுக்குச் சொல்லாக நகலாக்குவதை விட மிக வேண்டிய சொற்களைப்

பயன்படுத்தி சுருக்கமாக்குக. நேர்காணல் ஒலியிழையில் அல்லது கையடக்கக் கருவியில் பதிவுசெய்யலாம்). ஈர்க்கத்தக்க மாற்று: மாணவர்கள் தம்முடைய பண்பாட்டிலிருந்து புகழ்பெற்ற சமூக அரசியல் பெருமக்களுடன் ஒரு போலி நேர்காணலை நடத்தி ஆவணப்படுத்தல்.

---

5. விண்ணப்பங்கள், முறையீடுகள்

5 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

தாயகத்தில் அல்லது புகலிட நாட்டில் (வாழிட நாடு) நிலவும் உள நிறைவற்ற நிலைப்பாடுகள் அல்லது சூழ்நிலைகள் பற்றி கலந்துரையாடிய பின், சூழ்நிலையைச் சீர்ப்படுத்த மற்றும் யாருடைய பார்வைக்கு உருப்படியான பரிந்துரைகளை செலுத்தலாம், அல்லது ஊடகத்துக்கு அனுப்பப்படும் முறையீடு எப்படி அமையவேண்டும் என்பது பற்றி வழங்கக்கூடிய பரிந்துரைகள் பற்றிய கருத்துகளை மாணவர்கள் கருத்தாடல் செய்து ஊன்றியெண்ணுவர். அதன்பின் அவர்கள் கலந்துரையாடி பொருத்தமான எழுத்துருக்களை எழுதுவர். முறையீடு எதிர்நோக்கிய பொருத்தமான பெறுநருக்கு அனுப்புவதா அல்லது கற்பனை எழுத்துருவாகவே அது இருப்பதா என்பது பற்றி ஒவ்வொரு தனிப்பட்ட முயற்சியின்போதே முடிவுசெய்யப்படும். எடுத்துக்காட்டுகள்: தாயகப் பாராளுமன்றுக்கு அல்லது நாட்டுமுதல்வருக்கு தற்போதைய நெருக்கடி அல்லது சூழ்நிலை பற்றி ஒரு முறையீடு அல்லது கண்டனக் கடிதம்; மாணவர்களின் வதிவிட நாட்டில் பிறநாட்டவர்களுக்கு எதிரான கட்சி அல்லது நிறுவனத்துக்கு ஒரு மடல் அல்லது முறையீடு.

---

6. மடல்கள், மின்னஞ்சல்கள், குறுஞ்செய்தி, வகுப்புத்தொடர்பாடல், வலைப்பூக்கள், மின்னரட்டைகள்

2 - 9 ஆந் தரம்

ஒரே மொழி பேசும் மற்றவர்களுடன் உண்மையான எழுத்துத் தொடர்பாடல் நடத்தக்கூடிய பல கிளர்ச்சிமிக்க வாய்ப்புகள் பற்றி ஏற்கெனவே #12 இல் குறிப்பிடப்பட்டுள்ளன: "பெறுநருக்காக எழுதுதல்" என்பதில் குறிப்பிடப்பட்டது. வழக்கமான மடல் எழுதுதற்கப்பால், நவீன ஊடகம் எழுத்துத் தொடர்பாடல் நடத்தக்கூடிய மின்னஞ்சல், அல்லது குறுஞ்செய்தி போன்ற புதிய நடைமுறைக்கூறுகள் திறந்துவிடப்பட்டுள்ளன, இவை பள்ளித் தேவைகளுக்கும் நன்கு பொருத்தமானவை. இது எல்லா மொழிகளிலுமுள்ள வலைப்பூக்கள், மின்னரட்டைகள் ஆகியவற்றின் பயன்பாட்டுக்கும் பொருந்துவதாகும். எனினும், மாணவர்களின் தனிப்பட்ட தரவு கண்டிப்பாக மறைநிலையிலிருப்பதிலும், மாணவர்கள் கேள்விக்குரிய மன்றங்கள் பொருத்தமற்ற பொருள் ஆகியவற்றிலிருந்து விலகி நிற்றலிலும் விழிப்பாக இருப்பது மிக மிக இன்றியமையாததாகும்.
எழுத்தில் உண்மையான இலக்கு வாசிப்பாளரை நோக்கி என்பதற்கான ஈர்ப்புள்ள மாற்று என்பது மாணவர்கள் வரலாற்று ஆட்களுக்கு அல்லது நன்கறிந்த ஆளுமைகள் அல்லது அரசியல்வாதிகளுக்கு இயற்றுகின்ற (போலியான) மடல்கள், மின்னஞ்சல்கள் அல்லது குறுஞ்செய்திகள் என்பன பின்னர் வகுப்பில் படிக்கப்படும். உண்மையான எழுத்து ஒப்படைகள் கூட வாழ்த்து மடல்களில், எ.கா. அன்னையர் நாள் வாழ்த்துகள், கிறிஸ்மஸ், புத்தாண்டு அல்லது தேசிய விடுமுறைக் கொண்டாட்ட வாழ்த்து, மாணவர்களின் ஆக்கல், வடிவமைத்தல், எழுதுதல் என்பனவும் உள்ளடக்கும். செய்முறை எழுத்து ஒப்படைகளுக்கான பிற வாய்ப்புகள், மாணவர்கள், பெற்றோர் மாலைநிகழ்வு அல்லது பாரம்பரியமொழி வகுப்பு ஒழுங்கமைக்கும் பள்ளிப் பண்பாட்டுநிகழ்வு போன்ற அழைப்பிதழ்களை எழுதுதல் வடிவமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

---

7. சிக்கல் சார்ந்த எழுத்துருக்கள்

5 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

இரண்டு பண்பாடுகளிலும் இடையேயும் வளர்தலில் உடன்பாட்டுப் பக்கங்கள் மட்டுமன்றி இடர்பாட்டுத் தன்மைகளும் உள. பாரம்பரியமொழி மாணவர்களுக்கு வளங்களை இரட்டிக்கும் நன்மையுண்டு, ஆனால் புகலிட நாட்டில் மட்டுமன்றி பிறந்த நாட்டிலும் கூட பக்கஞ்சார்தல் மற்றும் ஒதுக்கப்படல் ஆகியனவற்றை எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம். இச்சிக்கல்களைக் கையாளுவதுடன் மாணவர்களுக்கு அவர்கள் தங்கள் அடையாளத்துக்கான மற்றும் சார்புணர்வுக்கான தேடலில் துணைசெய்வது பாரம்பரியமொழிக் கற்கையின் இன்றியமையாத ஒரு பகுதியாகும். கலந்துரையாடல்களும் எழுத்து உருக்காட்டலும் இவ்விலக்குக்குப் பங்களிப்பன. இம்முயற்சியுடன் இணைந்ததான எழுத்து ஒப்படைகள் குறிப்பிட்ட வினாக்களைச் சுற்றி ஒரு கலந்துரையாடலைத் திட்டமிடலை உள்ளடக்கும், அவ்வினாக்களாவன, "இரண்டு மொழிகளுடனும் பண்பாடுகளுடனும் வளர்வதனால் ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் பற்றிய என் எண்ணங்களும் உணர்வுகளும்", "ஓ, நான் ஓர் இருமொழியாளன்!", "என் தாயகத்தில் நான் எவ்வாறு என் வீட்டில் இருப்பதுபோல உணர்கிறேன்", முதலியன.

IV

8. கற்பனை, விருப்பு, காட்சி எழுத்துருக்கள்

3 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

முடிந்தளவான திட்டவரைபுகளும் தலைப்புகளும்:

நான் பிறந்த நாட்டின் (அல்லது தற்போது வாழுவதின்) தலைவரானால் / 20 ஆண்டுகளில் என் வாழ்வு பற்றி நான் எவ்வாறு கற்பனைபண்ணுகிறேன் / எல்லோரும் மகிழ்ச்சியாயுள்ள ஒரு வையகம் பற்றிய என் காட்சி / இப்போதிருந்து 50 ஆண்டுகளில் இல்லாமல் போகும் என நான் எதிர்பார்க்கும் சிக்கல்கள், முதலியன.

---

9. மொழி ஒப்பீடு

3 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

மாணவர்களின் முதல் மொழியினை பள்ளியில் பேசப்படும் மொழியுடன் (ஜெர்மன்) ஒப்பிடுதல், அத்துடன் பாரம்பரியமொழியின் எழுத்துமொழிக்கும் பேச்சுமொழி வகைகளுக்குமிடையே ஒப்பீடுகள் பலநிலை இடர்பாடுகளுடன் முடியுமாகும். இப்பயிற்சிகள் மாணவர்களின் இருமொழித் தகைமைகளுக்குச் சிறந்த வழியில் நன்மையளிப்பதாகவும் மிகக் கவர்ச்சியான கற்றல் வாய்ப்புகளுக்கு இட்டுச்செல்வன. இயற்கையாக, இது மாணவர்கள் பள்ளியூடாகவோ வேறு வழியாகவோ அறிந்துள்ள மேலதிக மொழிகளையும் உட்படுத்தலாம்.

பரிந்துரைகள்:

- ஒப்பீடுகளும் சொற்கோவைத் திரட்டுகளும், அதாவது, "பூனை" என்னும் சொல் பல்வேறு மொழிகளில், பள்ளிமொழியில், பாரம்பரியமொழியில் சிலவற்றுக்கு பேச்சுமொழியில்.



- ஒரே அல்லது ஒரே மாதிரியான சொற்களைத் தேடவும், ஆனால் உண்மையில் முற்றாக வேறுபட்ட பொருளுடையன (எ.கா. Deutsch "Hund" – Albanianisch "hunde" (Nase).
- தொடர்களை ஒப்பிடுதலும் திரட்டுதலும், "good morning" போன்ற தொடர் பல மொழிகளில்; தொடர்களின் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்புகள், "what time is it?", "what is your name?".
- பழமொழிகள், பொதுவான வழக்காறுகள் ஆகியவற்றுக்கு நிகரானவை. எடுத்துக்காட்டு: எந்த ஆங்கிலப் பழமொழி உங்கள் மொழியிலுள்ள எந்தப் பழமொழியுடன் நெருக்கமாக நிகராகும்?
- கூட்டுப் பெயர்களை ஒப்பிடுதல் (ஜெர்மன் மொழியில் நிறையவுள்ளன) பல தொடர்புள்ள சொற்கூறுகளை உடையது (எ.கா. Haustür = front door, Wandtafel = wall board, grasgrün = green as grass, Autofahren = driving a car, etc.) உங்கள் முதல் மொழியில் கூட்டுப் பெயர்கள் எவ்வாறு ஆக்கப்படுகின்றன?

- தொடரியல் ஒப்பீடு (வாக்கியக் கட்டமைப்பு). சில வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எப்படி வாக்கியங்கள் கட்டப்படுகின்றன என்பதை ஒப்பிடுக. பாரம்பரியமொழியில் வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்தின் கீழும் அதே வாக்கியத்தினை பள்ளி மொழியில் எழுதுவதற்கு போதுமான இடம் விடவும். பின்னர் அம்புக்குறியால் ஒன்றாகச் சேரும் பகுதிகளை தொடுக்கவும். ஏனைய வாக்கியங்களுக்கும் இதனைச் செய்யவும், ஒப்பிட்டு முடிவுகளை எடுக்கவும்.
- சிறு எழுத்துருக்களை மொழிபெயர்த்தல்: எங்கு இடர்பாடுகள் எழுகின்றன? வேறுபட்ட முறையில் அமைப்பதற்கு என்ன வேண்டப்படுகின்றன? (இங்கு, இரு மாணவர்கள் ஒரு சிறிய கவிதையை மொழிபெயர்த்து, அவற்றை ஒப்பிட்டு தம் பட்டறிவுகளைக் கலந்துரையாடலாம்.)
- முதல் மொழியில் (முடியுமாயின் பள்ளிமொழியிலும்) எழுத்துமொழியையும் பேச்சுமொழி (கள்) ஐயும் ஒப்பிடல். இது இணையம், நூல்கள், பேரன்பேர்த்தியுடன் பேசுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய மாணவ ஆய்வினை வேண்டிநிற்கும்.

21 ஒப்படைகள்: முதன்மைநெறிக் கல்வி வகுப்புகளுடன் இணைவதற்குப் பொருத்தமானவை

இலக்கு

இன்றைய பன்மொழி/பல்பண்பாட்டு சூழ்நிலையில் பல பள்ளிகளும் ஆசிரியர்களும் பெருமளவில் பல்பண்பாட்டு சிக்கல்களில் ஈடுபட்டுவருகின்றனர். இது பாரம்பரியமொழி கற்பித்தலுக்கும் வழக்கமான பெரும்பகுதிக் கல்வி வகுப்புகளுக்குமிடையே கூட்டுறவுக்கு தனித்துவமான வாய்ப்பினை வழங்கும். எனவே பாரம்பரியமொழி ஆசிரியர்கள் அம்முயற்சியினைக் கைப்பற்றி இதனை செயற்படுத்துவது இன்றியமையாததாகும். பின்வரும் பரிந்துரைகள் வழக்கமான பொதுப்பள்ளி வகுப்புகளின் ஆசிரியர்களையும் ஈர்ப்பனவாக அமைய வேண்டும்.

1. பன்மொழி கவிதைத் திரட்டு (பதினொருசொல் கவிதை, முதலியன.)

2 ஆம் தரம் அதற்கு மேல்

இக் கருத்திட்டம் ஏற்கெனவே பல பள்ளிகளிலும் நிறுவனங்களிலும் உணரப்பட்டுள்ளன. முதலாவது, மாணவர்கள் கவிதை வாசித்து தம்முடைய எளிமையான கவிதைகளை எழுதுவர், அவை பின்னர் அணிசெய்யப்பட்டு கண்காட்சியிலோ அல்லது நூலாகவோ அறிமுகப்படுத்தப்படும். கண்காட்சியோ அல்லது நூலோ பிற மொழிகளிலும் பேச்சுமொழிகளிலும் (மொழிபெயர்ப்புடன்) கவிதைகளை சேர்த்திருப்பின் இது இன்னும் நன்றாயிருக்கும். ஒருவர் தன் கவிதைகளை இயற்றுதற்கு "பதினொரு கவிதைகளுக்கு" மான எல்லோருமறிந்த "கட்டுதல் திட்டம்" பயன்படுத்தப்படலாம். அது பதினொரு சொற்களைக் கொண்டது, அவை ஐந்து வரிகளில் பின்வருமாறு பகிரப்படும்:

நீல

அக் கடல்

இது தெளிவாக ஒளிர்கிறது

நான் அங்கு நீந்த விரும்புகிறேன்

கோடை

அடி 1: 1. சொல் (பெயரடை, பண்புப்பெயர்), எ.கா. நிறம்/உணர்வு

அடி 2: 2 சொற்கள் (சுட்டுப்பெயர் பெயர்), (என்ன இது, எதனைப் பற்றியது..)

அடி 3: 3. சொற்கள்: (சுட்டு, வினை, வினையடை), (சிறிய காட்சிப்படுத்தல்), அது என்ன செய்கிறது?)

அடி 4: 4. சொற்கள்: (ஒரு சிறியவாக்கியம் (நீ என்ன செய்கிறாய்?)

அடி 5: 5. 1 சொல் பெயர்/அடை) (மிக இன்றியமையாத எண்ணக்கரு ஒரு சொல்லில்)

---

2. பன்மொழிப் பட நூல்கள்

கீழ் நிலை

கீழ்நிலை வகுப்புகளுக்கு, பட நூல்கள் பெரும்பாலும் பின்வரும் திட்டத்துக்கேற்றபடியே உருவாக்கப்படுகின்றன:

அ) மாணவர்கள் வாசிப்பர் அல்லது ஒரு கதையை புதிதாகக் கண்டுபிடிப்பர்.

ஆ) அவர்கள் கதையினை வெவ்வேறு கிளைக் கதைகளாக அல்லது படங்களாகப் பிரிப்பர்.

அல்லது சாகச நூல்கள்

இடை நிலை

உசாத்துணைகள்:
ஷாடர் (2012)
Sprachenvielfalt als Chance, S. 188 ff.

இ) மாணவர்கள் (தனியாக அல்லது இணையராக) ஒரு காட்சியினை வரைவர் அதன்கீழ் என்ன செயற்பாடு நடைபெறுகிறது என்பதை விவரிப்பர்.

ஈ) பக்கங்கள் சுவரிலே தொங்கவிடப்படுகின்றன அல்லது மாணவர்கள் உருவாக்கிய நூல் வடிவமாக அவை ஒன்றாக கம்பியினால் சேர்க்கப்படுகின்றன.

இச்செயற்பாடு எவ்வித இடருமின்றி பல மொழிகளை உள்ளடக்கி விரிவாக்கலாம், இதற்கு பல (நான்கு வரை) மொழிகளின் விவரணங்களையும் இடமளிக்க வெளியிடம் இருக்கவேண்டும். இதனால் ஒரு பன்மொழிப் படநூல் பாரம்பரியமொழி மாணவர்களின் சிறப்பான பங்களிப்பினால் உருவாக்கப்படுகிறது.

இடை மற்றும் உயர் நிலைகளில், பன்மொழி வீரச்செயல் கதை நூல்கள் ஆக்கப்படலாம். மாணவர்கள் முதலில் பல்வகை வீரதீரச் செயல்களைப் பட்டறிவுறும் பெருங் கதைமாந்தர்களை (எ.கா. 2 கதைத்தலைவர்கள்) உருவாக்குவர். மாணவர்கள் (தனியாக அல்லது இணையாக) ஒரு

கிளைக்கதையை அல்லது நூலின் ஒரு பகுதியை விவரித்துப் பங்களிப்பர். விளைவு ஒரு முழுமையான தொடர்ச்சியான வீரச்செயல் கதையாகும். அதனை ஒரு பன்மொழி கதையாக ஆக்குதற்கு, முன்னரே முடிவுசெய்தபடி சில கிளைக்கதைகள் மாணவர்களின் பிறந்த நாடுகளில் நடைபெறுவதாகவும், அங்கு பேசப்படும் மொழியில் எழுதப்பட்ட சில சொற்கள் உள்ளடக்கப்படும் (எ.கா. "காலை வணக்கம்", "உங்களுக்கு நன்றி", என்பன)

---

3. பன்மொழிச் சுவரொட்டி அல்லது மாணவர் சஞ்சிகை

3-4 ஆம் தரம் அதற்கு மேல்

நீண்ட காலமாகப் பல வடிவிலான மாணவர் செய்தித்தாள்கள் பரவலாக இருந்தன. இது செய்திப் பலகைகளையும் மிக அண்மைக் காலங்களில், எண்முறை வழித் தொடர்பாடலையும் உள்ளடக்குவதாகும். பெரிய நகரச் செய்தித் தாள்கள் பரவலான குடிபெயர் மொழிகளில் தலைப்புகளை உள்ளடக்குவதுபோல, இவை பல மொழிகளை உள்ளடக்குவதற்கு எளிதாக விரிவாக்கலாம் (அல்லது பெரிய குடிபெயர் மொழிகளில் ஒரு மொழிபெயர்ப்புத் தாளை வெளியிடலாம்.)

மாற்று 1: பள்ளி மொழியை விட பிறமொழிகளில் எழுதப்பட்ட தாளின் தலைப்புகளுக்கான பங்களிப்புகள் தாளில் சேர்த்துக்கொள்ளப்படும். எனினும், எல்லா வாசிப்பாளர்களின் நன்மைக்காக எழுத்துரு குறைந்த அளவு பள்ளி மொழியில் சுருக்கப்படவேண்டும்.

மாற்று 2: வெவ்வேறு மொழிகளில் அறிவிப்பதற்குச் சிறப்பான தலைப்புகள் ஆக்கப்படவேண்டும் (எ.கா. தாயகத்தின் நிகழ்வுகள் தொடர்பாக). இங்கு கூட, பள்ளி மொழியில் ஒரு சிறிய சுருக்கம் வழங்கப்படவேண்டும்.

---

4. கருத்திட்டக் கிழமைகள் அல்லது கண்காட்சிகள் பின்வருவனபோல், "எங்கள் பண்பாடுகள்", "நாம் எங்கிருந்து வருகிறோம்" "சிறந்த சுற்றுலா நாடுகள்" "எங்களது மொழிகள்", முதலியன.

4 ஆம் தரம் அதற்கு மேல்

வழமையான கற்பித்தல் மட்டுமல்லாமல் மாணவர்களின் தேவை அல்லது ஆர்வத்திற்கேற்ப இது போன்ற கருத்திட்ட செயல்பாடுகள் செய்வது முக்கியமாக பன்மொழி, பல்கலாச்சாரத்தில் வாழும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

ஒரு சிறப்பு கருத்திட்டக் கிழமையை ஒழுங்குபடுத்தல்/நடத்துதல், அல்லது குறிப்பிட்ட ஒரு தலைப்பில் பல்வேறு வகுப்புகளை உள்ளடக்கி, மாணவர்களின் பன்மொழி மற்றும் பல்பண்பாட்டு வளங்களைப் பயன்படுத்திய கருத்திட்ட எண்ணம் பல பள்ளிகளில் வரவேற்கப்படவேண்டியதாகும். பெரும்பகுதிக் கல்விக்கும் பாரம்பரிய வகுப்புகளுக்கும் இடையேயான கூட்டுறவுக்கேற்ற வழிகள் எடுத்துரைப்புகளை உருவாக்குதற்கும், பல்வேறு நாடுகளில் உல்லாசப்பயணத் தொழில் துறைக்கான சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் அல்லது விளம்பரங்களை வடிவமைத்தலுக்கும் துணைசெய்தலை உள்ளடக்கும்.

#10.1 மற்றும் 12 ஐயும் பார்க்க

---

5. பலமொழியிலும் சமையல் செயல்முறைகளை சேகரித்தல்

2-3 ஆம் தரம் அதற்கு மேல்

குறிப்பாக வழமையான கல்வியும் வீட்டுப் பொருளியல் வகுப்புகளும் இணைந்த பல்வேறு நாடுகளிலுமிருந்து மரபுவழி செய்முறைகளின் ஒரு பன்மொழித் திரட்டை உருவாக்கலாம். இதனை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் எளிமையாக நிறைவேற்றலாம், அதனூடாக முதல் மொழியிலுள்ள செய்முறைகளை பெற்றோர்கள் அல்லது சிறப்பு மொழி வகுப்புகளுடன் இணைந்து விரிவாக்கலாம். இயல்பாக, எல்லா செய்முறைகளும் பள்ளி மொழியிலும் மொழிபெயர்க்கப்படவேண்டும். கருத்திட்டத்தை நிறைவுசெய்ய, முடிந்தவரை ஒரு பெற்றோர் மாலை, ஒரு பள்ளி விழா, அல்லது ஒரு பல்பண்பாட்டுக் கருத்திட்ட கிழமையுடன் இணைந்து ஒரு பன்னாட்டு உணவு மற்றும் சமையல் நிகழ்வினை நிகழ்த்தலாம்.

22 மொழியுடன் இசைக்கலை படைப்பு ஒப்படைகள்

இலக்கு

பின்வரும் கருத்திட்டங்கள் மாணவர்கள் தம் ஆக்கத்திறனை வளர்க்கத் துணைசெய்வன. அவை கலை மற்றும் மொழிச் செயற்பாடுகளை இணைத்து கவர்ச்சியான ஆக்கங்களுக்கு இட்டுச் செல்கின்றன, அவை மேலும் உள்நோக்கினை ஊட்டுகின்றன.

1. பேச்சுக் குமிழிகளுடன் சிந்தித்தல்

2 - 9 ஆந் தரம் | 15 - 20 மணித்துளிகள்

கருவிகள்:
செய்தித்தாள்கள் அல்லது இதழ்களிலிருந்து வெட்டிய ஒளிப்படங்கள்.

மாணவர்கள் ஒரு படத்தை அல்லது புகைப்படத்தைத் தேர்ந்தெடுத்து அதிலுள்ள ஆள் என்ன நினைக்கிறார் அல்லது சொல்கிறார் என்பதை முடிவுசெய்ய வேண்டும். பின்னர் அவர்கள் ஒரு பேச்சுக் குமிழியை கீறுகின்றனர், அதை வெட்டி எடுத்து அப்படத்தில் ஒட்டுகின்றனர். பேச்சுக் குமிழி எழுத்துருக்கள் உண்மையாகவும், குறும்பாகவும் அமையலாம்.

மாற்றுகள்: பேச்சுக்குமிழி உரையாடல்கள் இருவர் அல்லது பல பேருடன்/புகைப்படத்துக்காக கீறிய படங்கள் (மோனலிசா, முதலியன) smileys (உணர்வுகள் எ.கா…: படங்களுக்காக ☹ ☺ / பேச்சுககுமிழிகளை நீக்கிய எழுத்துடன் நகைச்சுவை நகல் ஒன்று, இதனால் மாணவர்கள் தத்தம் பதிப்புகளை உருவாக்கவும் அவற்றை அவர்கள் ஒப்பிடவும் முடியும்.

---

2. சுயமாக கேலிச்சித்திரம் உருவாக்குதல்

2 - 7 ஆந் தரம் | 30 - 60 மணித்துளிகள்

கருவிகள்:
விரலடையாளங்களுக்கான மைமுத்திரை, தாள்

ஆசிரியர் செயற்பாட்டினை விளக்குகிறார்: இணையர்களாக, மாணவர்கள் 4 – 6 படங்களுடன் நகைச்சுவை ஒன்றுக்கு ஒரு சிறுகதை (அல்லது படக்கதை) பற்றி எண்ணுவர். கதை குறைந்தது இரண்டு ஆட்களை கொண்டமைய வேண்டும் இதனால் அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வர்;
ஒரு விலங்கை/செல்லமானதைச் சேர்த்துக்கொள்ளலாம். வடிவங்களைக் கீறுவதற்குப் பதிலாக உடல்களும் தலைகளும் கைவிரலடையாளங்களால் உருவாக்கலாம். பின்னர் கைகளையும் கால்களையும் கீறிக்கொள்ளலாம், இது வேடிக்கையான உருவங்களை உருவாக்கும். அடுத்து எழுத்துரு பேச்சுக்குமிழிகளில் எழுதப்படும். மாணவர்கள் இத்தகைய எழுத்துரு அதன்வாய்ப்புகள் ஆகியவற்றுடன் பழக்கம் பெறுவதற்கு முதலில் சில நகைச்சுவைகள் அல்லது படக்கதைகளைப் பார்ப்பது துணையாக அமையும்.
விரிவாக்கிய பணி: ஒரு முழுமையான நகைச்சுவைச் சிறுநூலை கூட்டாக உருவாக்கல் கதைக்கு எல்லா மாணவர்களும் ஒரே பெருங்கதாமாந்தர்களையும் காட்சியமைப்பையும் தேர்ந்தெடுப்பின் இது குறிப்பாக ஈர்ப்பதாக அமையும்.

3. நிழற்பட நாவல்கள்

6 - 9 ஆந் தரம் | 2 - 3 மணித்தியாலம்

கருவிகள்:
தாள், புகைப்படக்கருவி,
அல்லது அலைபேசிப் புகைப்படக்கருவி

"நிழற்பட நாவல்கள" என்பன பதின்மவயதினர் இதழ்களில் நன்கு அறியப்பட்ட கூறுகளாகும். அவை படங்களையும் பேச்சுக் குமிழிகளையும் கொண்ட கதையை உடையன. (ஏனைய எழுத்துருக் கூறுகளை சேர்த்துக்கொள்ளலாம், அவை, ஒரு படத்துக்குக் கீழேயுள்ள கீற்றில் "ஒரு கிழமைக்குப் பின்னர்…." என்னும் கூற்று அமைந்திருத்தல். நகைச்சுவையை உருவாக்க, மாணவர்கள் முதலில் ஒரு கதை வரிசையை முடிவுசெய்ய வேண்டும். எழுத்துப்படிவத்தினை எழுதுவதற்கு, அவர்கள் எழுத்துப்படிவத்தினை வேறுபட்ட காட்சிகளாகப் பிரிக்கவேண்டும். ஓர் அலைபேசி அல்லது மின்புகைப்படக்கருவி ஊடாக படங்களைப் பிடித்து (இது ஒரு வீட்டு வேலையாக) அச்சிடலாம். நல்ல கணினி நாட்டம் கொண்ட மாணவர்கள் முழுக் கதையையும் மின்னியற் படமாகவும் உருவாக்கிவிடுவர்.

---

4. சிறு நூல்கள்

2 - 5 ஆந் தரம் | 30 - 60 மணித்துளிகள்

கருவிகள்:
சுருக்கங்கள்
(வலம்: பார்க்கவும்)

சிறு நூல்கள் சிறியவை, தாங்களாக உருவாக்கிய குறுநூல்கள், ஒரு தலைப்புப் பக்கம் மற்றும் 6 – 7 பக்க எழுத்துரு கொண்டவை. எழுத்துருவுக்கு எண்ணக்கருக்கள் தேவை, அத்துடன் ஒரு தாள் துண்டு (A4 அல்லது A3) மற்றும் எப்படி அத்தாளை மடிக்கவேண்டும், வெட்டவேண்டும் என்பதற்கான அறிவுறுத்தல்களுடன்.
http://www.minibooks.ch/ என்பதில் அறிவுறுத்தல்களைப் பார்க்கலாம். அல்லது ஆசிரியர் தரவிறக்கம் செய்து அவற்றை அச்சிட்டு வகுப்புக்குக் கொடுக்கலாம், அல்லது மாணவர்கள் கிடைக்குமாயின், கணினியிலேயே தங்கள் சிறுநூல்களை உருவாக்கலாம். குறுநூல்கள் கவர்ச்சியானவையாகவும், பட விளக்கமுடையனவாகவும் அமையும்.

---

5. வழியைப் பின்பற்றவும்

3 - 9 ஆந் தரம்

கருவிகள்:
நிலப்புகைப்படங்கள்
(செய்தித் தாள்கள், இதழ்களிலிருந்து தபால் அட்டைகள் அல்லது படங்கள்)

மாணவர்கள் ஒரு படத்தினை அல்லது இயற்கை நிலக்காட்சியின் (எ.கா. அவர்கள் தாயகத்திலிருந்து) புகைப்படத்தினைப் பெறுவர். அதனை ஒரு தாள் துண்டில் (A4 அல்லது A3, கிடைநிலை வடிவம்). வகுப்பிலோ அல்லது வீட்டு ஒப்படையாகவோ, படத்தின் தொடர்ச்சியாக புகைப்படத்தின் இட, வலப் பக்கங்களில் கீறுவர் அல்லது நிறந்தீட்டுவர். விரிவாக்கிய படத்தின் கீழே, அவர்கள் இயற்கை நிலத்தூடாகச் செல்லும் போக்கினை விவரித்து ஓர் எழுத்துரு எழுதுவர் (அதாவது, அவர்கள் என்ன காணுகின்றனர், உணர்கின்றனர், முகர்கின்றனர் என்று பட்டறிகின்றனர்.)

நூற்பட்டியல்

AutorInnenteam (2000): Beurteilen und Fördern im Deutschunterricht. Praktische Modelle für individualisierende und fördernde Beurteilungsformen. 3 Bde. Zürich: sabe.

Autorenteam (2013): Hoppla 4. Deutsch für mehrsprachige Kindergruppen. Zürich/Bern: Schulverlag plus AG/Lehrmittelverlag des Kantons Zürich.

Bartnitzky, Horst (2006): Sprachunterricht heute. Berlin: Cornelsen Scriptor.

Baumann Schenker, Sandra; Karl Ernst (2007): 10 x 10 Spiele für den Sprachunterricht. Zofingen: Erle.

Bertschinger, Margaretha; Sabine Nötzli-Fellmann (o. J. [1995]): Ich schreibe gerne. Eine Schreibwerkstatt. Zürich: Pestalozzianum

Böttcher, Ingrid; Michael Becker-Mrotzek (2007): Texte bearbeiten, bewerten und benoten. Berlin: Cornelsen Scriptor.

Böttcher, Ingrid; Michael Becker-Mrotzek (2012): Schreibkompetenz entwickeln und beurteilen. Praxishandbuch für die Sekundarstufe I und II. Berlin: Cornelsen Scriptor.

Bredel, Ursula; Hartmut Günther et al. (2006): Didaktik der deutschen Sprache. Paderborn u. a.: Schöningh.

Büchel, Elsbeth; Ursina Gloor (2009): Sprachland. Sprachlehrmittel für die Mittelstufe. Zürich/Bern: ILZ/Lehrmittelverlag des Kantons Zürich/Schulverlag blmv AG.

Büchel, Elsbeth; Dieter Isler (2006): Das Sprachfenster. Lehrmittel für den Sprachunterricht auf der Unterstufe. Zürich: ILZ/Lehrmittelverlag des Kantons Zürich.

Diebold, Markus et al. (1985): Lernkontrollen im Deutschunterricht. Zürich: sabe.

Ernst, Karl (1999): 10 x 10 Textzugänge. Zofingen: Erle.

Fachbereich Deutsch/Deutsch als Zweitsprache an der PH Zürich/Michael Graf (2007): Schreibdidaktik. Zürich (Typoskript).

Fachgruppe Deutschdidaktik Primarstufe/Basil Schader (o. J. [2003]): Didaktik des Schreibens. Zürich (Typoskript).

Fritzsche, Joachim (1993): Schreibwerkstatt. Stuttgart: Klett.

Glinz, Elly (1997): Wie Kinder Sprache lernen und wie Erwachsene dabei helfen können. Zürich: sabe.

Glinz, Elly; Hans Glinz (1997): Sprachunterricht. Theorie und Praxis. Zürich: sabe.

Good, Bruno (1997): Treffpunkt Sprache 4–6. Interkantonales Sprachbuch für die Mittelstufe. Zürich: ILZ/Lehrmittelverlag des Kantons Zürich.

Griesshaber, Wilhelm (2008): Schreiben in der Zweitsprache Deutsch. In: Bernt Ahrenholz; Ingelore Oomen-Welke (Hrsg.): Deutsch als Zweitsprache. Baltmannsweiler: Schneider Hohengehren, S. 228–238.

Keller, Gustav (2011): Lerntechniken von A–Z. Bern: Hans Huber.

Mayer, Kathrin (2010/2011): Aufsatz- und Schreibformen. Diagnose – Übung – Test. 5. Klasse/6. Klasse. 2 Bde. Augsburg: Brigg Pädagogik.

Neugebauer, Claudia (2008): Bessere Texte durch gute Schreibaufträge. Link: http://www.netzwerk-sims.ch/wp-content/uploads/2013/08/grundlagen_schreibfoerderung.pdf

Neugebauer, Claudia; Claudio Nodari (2012): Förderung der Schulsprache in allen Fächern. Praxisvorschläge für Schulen in einem mehrsprachigen Umfeld. Kindergarten bis Sekundarstufe I. Bern: Schulverlag plus.

Nodari, Claudio (2002): Kontakt. Deutsch für Jugendliche. Zürich: ILZ/Lehrmittelverlag des Kantons Zürich.

Nodari, Claudio (2011): Pipapo. Deutsch für mehrsprachige Klassen und Lerngruppen. Aarau/Buchs: Lehrmittelverlag des Kantons Aargau/Lehrmittelverlag des Kantons Zürich/Schulverlag blmv.

Nodari, Claudio; Claudia Neugebauer (1999): Aspekte der Sprachförderung. In: Mathilde Gyger; Brigitte Heckendorn-Heiniman (Hrsg.) Erfolgreich integriert? Bern: Bernischer Lehrmittel- und Medienverlag, S. 161–175.

Portmann-Tselikas, Paul R. (1998): Sprachförderung im Unterricht. Handbuch für den Sach- und Sprachunterricht in mehrsprachigen Klassen. Zürich: Orell Füssli Verlag.

Reinartz-Essers, Dietlind (1980): Zur Didaktik des Schreibens. Frankfurt a. M: Diesterweg.

Rico, Gabriele (2004): Garantiert schreiben lernen. Sprachliche Kreativität methodisch entwickeln – ein Intensivkurs. Berlin: Rowohlt.

Schader, Basil (2012a): Sprachenvielfalt als Chance. Das Handbuch. Hintergründe und 101 praktische Vorschläge für den Unterricht in mehrsprachigen Klassen. Zürich: Orell Füssli Verlag.

Schader, Basil; Barbara Müller (Illu.) (2012b): Mein schlaues Lernheft. Zürich: Orell Füssli Verlag.

Scherrer, Robert D. (1989): Bilder und Bildergeschichten. Winterthur: Schubi.

Schweizerisches Gesamtsprachenkonzept (EDK, 1998). Download: http://sprachenkonzept.franz.unibas.ch/Konzept_kurz.html

Selimi, Naxhi (2010): Wortschatzarbeit konkret. Eine didaktische Ideenbörse für alle Schulstufen. Baltmannsweiler: Schneider Hohengehren.

Sprachwelt Deutsch. Werkbuch (2012). Überarbeitete Ausgabe. Zürich: Lehrmittelverlag / Schulverlag plus.

Sturm, Afra; Hansjakob Schneider; Maik Philipp (2013): Schreibförderung an QUIMS-Schulen. Grundlagen und Empfehlungen zur Weiterentwicklung des Programms. Erstellt von der Pädagogischen Hochschule FHNW, Zentrum Lesen, im Auftrag des Volksschulamts der Bildungsdirektion Zürich. Link: https://wiki.edu-ict.zh.ch/quims/fokusa/hwissen

Zopfi, Christa und Emil (1995): Wörter mit Flügeln. Kreatives Schreiben. Bern: Zytglogge.

"பாரம்பரிய மொழிக் கல்விக் கருவிகள்" தொடர் ஆறு தொகுதிகளைக் கொண்டது, பாரம்பரிய மொழிக் கல்வியின் (பா.மொ.க, சுவிற்சர்லாந்தில்: HSK) தரத்தினைக் கூட்டுதற்காகவும் வழமையான வகுப்பறைக் கல்வியுடன் இதன் இணைப்புத் தொடுப்பினை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டது.

இவ்வெளியீடுகள் எதிர்கால மற்றும் தற்போதைய பாரம்பரியமொழி ஆசிரியர்களின் திட்டவட்டமான வேண்டுகைகளையும் அவர்களின் பிறந்த நாடுகளில் அல்லது குடியேற்ற நாடுகளில் துணைசெய்யும் நிறுவனங்களையும் பற்றிக் கூறுகின்றன. அடித்தளம் நூல் (கைநூலும் பணிநூலும்: அடித்தளங்களும் பின்னணிகளும்) மேலை மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளில் தற்போதைய ஆசிரியக்கலை, கற்பித்தல் மற்றும் நெறிமுறை பற்றிய திறவுப் பண்புகளை உள்ளடக்குகின்றன.

பணிநூல்கள் கற்பித்தல் பரிந்துரைகளையும் பல்வேறு அறிவுறுத்தல் பரப்புகளுக்கான (பாரம்பரிய மொழியில் எழுத்து ஊக்குவிப்பு, முதலியன) தூண்டிகளையும் திட்ட மாதிரிகளையும் வழங்குகின்றன. இவ்வெளியீடுகள் தொடக்கத்திலிருந்தே கற்பித்தல் மதியுரைகளின் நடைமுறை இணக்கப்பாட்டினையும் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்காக பா.மொ.க ஆசிரியர்களின் நெருக்கமான உடனுழைப்புடன் உருவாக்கப்பட்டன.

தொடர் பின்வரும் வெளியீடுகளை உள்ளடக்குகின்றது:

"பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்" வெளியீடுகள் ஜெர்மன், ஆங்கிலம், அல்பானியன், பொஸ்னியன் / குரோசியன் / சேர்பியன் / போர்த்துகீஸ், துருக்கீஸ் மற்றும் தமிழ் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. இவை சூரிச் ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுக் கல்விக் கருத்திட்டங்களின் நடுவகத்தினால் (ப.க.க IPE) வெளியிடப்பட்டன.